# பைந்தமிழ் வாசகம்

## ஐந்தாம் வகுப்பிற் குரியது

[புதிய பாடதிட்டத்தை ஒட்டி எழுதப்பட்டுள்ளது]

ஆசிரியர்:
வித்வான் ம. பெரியசாமிப் பிள்ளை
முன்னைய தலைமைத் தமிழாசிரியர், E. R. உயர்நிலைப்பள்ளி,
திருச்சிராப்பள்ளி

T. G. கோபால் பிள்ளை
பதிப்பாளர்

தெப்பக்குளம்
திருச்சிராப்பள்ளி

2/27, பிராட்வே
ஜி. டி., சென்னை

பதிப்புரிமை] 1954 [விலை அணா 12

முதற் பதிப்பு—நவம்பர், 1954

# முன்னுரை

ஒவ்வொரு நாட்டினரும் தமது தாய்மொழியைப் போற்றிப் பயிலவேண்டுவது இன்றியமையாத கடமையாகும். அதுபற்றியே நமது அரசியலாரும் ஆரம்ப பாடசாலைகளில் தாய்மொழிப் பயிற்சியை முதன்மையான பாடமாகவும் கட்டாய பாடமாகவும் அமைத்துள்ளார். நமது தாய்மொழியாகிய தமிழ் ஒரு இனிய மொழி. தமிழில், ஆரம்ப பாடசாலைப் பாட புத்தகங்கள் பல வெளிவந்துள்ளன வாயினும், தமிழ் வளர்ச்சி கருதி மாணவர்க்குப் பயன்படும் வகையில் எத்தனை புத்தகங்கள் வெளிவரினும் நலமே. ஆதலின், '**பைந்தமிழ் வாசகம்**' என்னும் பெயரால் இப் புதிய பாட புத்தகங்கள் வெளியிடப்பட்டுள்ளன.

இப் புத்தகங்களிலுள்ள பாடங்கள் வகுப்புக்கேற்ற வண்ணமும், மாணவர்கள் மேலும் மேலும் புதிய சொற்களைக் கற்பதற்கேற்றவாறும் அமைக்கப்பட்டுள்ளன. மொழிப் பயிற்சியைத் தருதலே பாட புத்தகத்தின் முக்கிய நோக்கமாதலின், அதற்குத் தக்கவாறு பயிற்சிகளும் கேள்விகளும் தரப்பெற்றுள்ளன. மூன்று, நான்கு, ஐந்தாம் வகுப்புக்களில் அரும்பதவுரை கொடுக்கப்பட்டிருத்தலோடு அந்தந்த வகுப்புக்கேற்ற அளவு எளிய முறையில் பாட சம்பந்தமான உதாரணங்களைக்கொண்டு இலக்கண விதிகள் விளக்கிக் காட்டப்பட்டுள்ளன. மாணவர்களுக்குச் சுவை பயக்கும் வகையில் அமைந்துள்ள கதைப் பாட்டுக்களும் உரையாடலும் அங்கங்கே வேண்டிய அளவு தரப்பட்டுள்ளன.

கல்வி இலாகா அதிகாரிகளும் கல்விச்சாலை யாசிரியரும் இப்புத்தகங்களைத் தங்கள் கல்விச்சாலைகளில் பாட புத்தகமாக வைத்து ஆதரிப்பார்களென்று நம்புகின்றேன்.

ம. பெரியசாமிப் பிள்ளை.

Kabeer Printing Works, Madras (2729)

# உள்ளுறை


| | | | |
|---|---|---|---|
| | தேசீயகீதம் | | 1 |
| 1. | கரிகாற்சோழன் | ... | 2 |
| 2. | பயிர்த்தொழில் | ... | 8 |
| 3. | கம்பர் | ... | 14 |
| 4. | உப்பு | ... | 21 |
| 5. | பாரிமகளிர் | ... | 26 |
| 6. | வீரபாண்டிய கட்டபொம்மன் | ... | 32 |
| 7. | ஒரு பாலைநிலப் பறவை | ... | 36 |
| 8. | உண்மை உயர்வளிக்கும் (செய்யுள்) | ... | 41 |
| 9. | பத்திரிகைச் செய்திகள் | ... | 45 |
| 10. | விவேகானந்தர் | ... | 48 |
| 11. | பஞ்சாயத்து (உரையாடல்) | ... | 56 |
| 12. | உல்லாசப் பிரயாணம் | ... | 62 |
| 13. | செந்தமிழ் நாடு (செய்யுள்) | ... | 68 |
| 14. | வானொலி | ... | 70 |
| 15. | உதயணன் சிறைப்படல் | ... | 76 |
| 16. | பரதனும் குகனும் (உரையாடல்) | ... | 83 |
| 17. | பருத்தி | ... | 88 |
| 18. | நடுநிலைமை குன்றுமை | ... | 95 |
| 19. | தீப்பெட்டி செய்தல் | ... | 99 |
| 20. | தசரதர் (ஒரு நாடகம்) | ... | 104 |
| 21. | தேனீ வளர்த்தல் | ... | 112 |
| 22. | பஞ்சதந்திரக் கதைகள் | ... | 117 |
| 23. | நல்வழி | ... | 121 |
| 24. | நன்னெறி | ... | 123 |

# ஐந்தாம் வகுப்பிற் குரியது

## தேசீய கீதம்

ஜன கண மன அதிநாயக ஜயஹே
பாரத பாக்ய விதாதா !
பஞ்சாப சிந்து குஜராத மராட்டா,
திராவிட உத்கல வங்கா,
விந்த்ய ஹிமாசல யமுநா கங்கா
உத்கல ஜலதி தரங்கா.

தவசுப நாமே ஜாகே !
தவசுப ஆசிஷ மாகே !
காஹே தவஜய காதா !
ஜன கண மங்கள தாயக ஜயஹே
பாரத பாக்ய விதாதா
ஜயஹே, ஜயஹே, ஜயஹே,
ஜய ஜய ஜய ஜயஹே!

# 1. கரிகாற் சோழன்

1. நமது தமிழ் நாடு முற்காலத்தில் மூன்று பெரும் பிரிவாக இருந்தது. அப்பிரிவுகள் சோழநாடு, சேரநாடு, பாண்டிய நாடு என்பன. இவற்றுள், சோழ நாடு என்பது இப்பொழுது தஞ்சாவூர், திருச்சிராப்பள்ளி, தென்ஞர்க்காடு என்று பெயர் வழங்கி வரும் மூன்று மாவட்டங்களும் ஆகும்.

2. சோழ நாட்டின் சிறந்த தலைநகரங்களாக இருந்தவை உறையூரும் காவிரிப்பூம்பட்டினமும் ஆகும். இவற்றுள், உறையூர் என்பது திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் உள்ளது. காவிரிப்பூம்பட்டினம் என்பது காவிரியாறு கடலோடு கலக்குமிடத்தில் இருந்தது; இப்பொழுது இல்லை; ஏறத்தாழ ஆயிரத்தெண்ணூறு ஆண்டுகட்கு முன்பே கடலால் கொள்ளப்பட்டுவிட்டது. இவ்விரு நகரங்களில் ஒவ்வொன்றை ஒவ்வொரு காலத்தில் தலைநகராகக்கொண்டு ஆண்ட முற்காலச் சோழ மன்னர்கள் பலர். அவர்களுள் கரிகாற்சோழன் என்பவன் மிகச் சிறந்த மன்னன் ஆவான்.

3. கரிகாற்சோழன் ஏறத்தாழ ஆயிரத்துத் தொள்ளாயிரம் ஆண்டுகட்கு முன்பு இளஞ்சேட்சென்னி என்னும் சோழ மன்னனுக்கு மகனுகப் பிறந்தவன். அவன் இளமைப் பருவத்திலேயே தந்தையை இழந்தான். தனக்கு உரிமையாக உள்ள சோழ நாட்டை அரசாளத் தொடங்கியபோது அந்நாட்டைக் கைப்பற்றக் கருதியிருந்த சில பகைவர்கள் அவனைச் சிறையி லடைத்துச் சிறைக்கூடத்திற்குத் தீ வைத்தனர். அதனை அறிந்த அவன் மிக்க வீரங்கொண்டு அச்சிறையினின்று தப்பி

வரும்பொழுது தீயினுல் அவன் கால் கரிந்தமையால் அவனுக்குக் கரிகால் சோழன் எனப் பெயர் வழங்கியது.

4. கரிகாற் சோழன் உறையூரைத் தலைநகராகக் கொண்டு சில காலம் அரசியற்றினன். அப்பொழுது உறையூர் அரண்மனையும் மதிலும் பெரிய வீதிகளும் உடைய அழகிய நகரமாக இருந்தது. பின்னர், அவன் காவிரிப்பூம்பட்டினத்தைத் தலைநகராகக் கொண்டு அரசாட்சி செய்தான். காவிரிப்பூம்பட்டினம் என்பது ஒரு துறைமுகப்பட்டினம். அப்பட்டினம் மருவூர்ப் பாக்கம், பட்டினப்பாக்கம் என இரண்டு பகுதியாக இருந்தது. அப்பட்டினத்தில் கப்பல் வாணிபம் மிகுதியாக நடைபெற்றதால் பல பொருள்கள் ஏற்றுமதியாக வேற்று நாட்டுக்கு அனுப்பப்பட்டன. அயல் நாடுகளிலிருந்து பல பொருள்கள் இறக்குமதியாக அந்நகருக்கு வந்தன. கடற்கரையில் கலங்கரை விளக்கம் அமைக்கப்பட்டிருந்தது. ஏற்றுமதி இறக்குமதிச் சரக்குகளுக்குச் சுங்கம் விதிப்பதுண்டு. அதற்கெனச் சுங்கச் சாவடிகளும் இருந்தன.

5. பற்பல தொழிலாளர் வசித்தற்குத் தனித்தனி வீதிகளும் பற்பல மரபினருக்கெனத் தனித்தனியான தெருக்களும் இருந்தன. பல பொருள்கள் விற்பனையாதற்குரிய பல கடைத்தெருக்கள் இருந்தன. அழகிய பூஞ்சோலைகளும் வாவிகளும் இருந்தன. இத்தகைய சிறந்த நகரத்தின் நடுவில் கரிகாற்சோழன் அரண்மனையமைந்து அந்நகருக்குப் பேரழகைக் கொடுத்தது.

6. கரிகாற்சோழன் சிறந்த வீரன்; பல மன்னர்களைப் பல இடங்களில் போரில் தோல்வியுற்றுப் புறங்காட்டி ஓடச்செய்து தமிழ் நாடு முழுவதையும் தனதாக ஆக்கிக் கொண்டான். வடநாட்டின்மீது படையெடுத்துக்

கங்கையைக் கடந்து சென்று இமயமலையில் தனது புலிக் கொடியை நாட்டி மீண்டான். அவன் வீரம் எத்தகையது பாருங்கள்!

7. கரிகாலன் தனது நாட்டை வளம்படுத்தி மிகமேன்மையுறச் செய்தான். காவிரியாற்றின் இரண்டு பக்கத்திலும் கரை போட்டவன் கரிகாலனே. காவிரியாறு சுமார் நானூறு மைல் நீளம் உள்ளது. அதற்குக் கரைபோடுவதென்றால் அது எவ்வளவு அருமையான செயல்! பயிர்த் தொழில், சிற்பம், இசைக்கலை, கைத்தொழில், வாணிபம் முதலிய யாவும் அவனால் விருத்தி செய்யப்பட்டன.

8. கரிகாலன் சிறந்த கல்விமான். கற்றறிந்த புலவர்களைப் பொன்னேபோல் போற்றி அவரவர்க்குத் தகுந்த பரிசில் அளித்துப் பாராட்டும் இயல்புடையவன். அக்காலத்தில் ஆண்மக்களே யன்றிப் பெண்மக்களும் கல்வியிற் சிறந்தவர்களாக இருந்தார்கள். கரிகாலன் மகளாகிய **ஆதிமந்தி** என்பவள் சிறந்த தமிழ்ப் புலமையுடையவள். முடத்தாமக் கண்ணியார் என்னும் ஒரு பெண் புலவர் 'பொருநராற்றுப்படை' என்னும் ஒரு பாட்டில் கரிகாலனது நாடு, அரசாட்சி முதலியவற்றைப் பற்றிப் பாடியிருக்கின்றார்.

9. உருத்திரங் கண்ணனார் என்னும் புலவர் 'பட்டினப்பாலை' என்னும் ஒரு பாட்டில் காவிரிப்பூம்பட்டினத்தைப் பற்றியும் கரிகாலனைப்பற்றியும் மிகச் சிறப்பாகக் கூறியுள்ளார். அப்பாட்டைக் கேட்ட கரிகாலன் அப்பாட்டின் அருமையை அறிந்து, அப்புலவருக்குப் பதினாறு லட்சம் பொன் பரிசிலாகக் கொடுத்து அவரைப் பாராட்டினான். கல்வியினிடத்தும் கற்றோரிடத்தும் அவனுக்கிருந்த அன்பும் மதிப்பும் எத்தகையது பாருங்கள்!

10. கரிகாலன் நீதி செலுத்துதலில் மிக வல்லவன்.

தன்னிடத்தில் வழக்குரைக்க வருகின்றவர்கள் சொல்லைக் கொண்டே 'உண்மை இதுதான்' எனக் கண்டறிந்து அவர்கள் மகிழுமாறு முடிவு கூறும் ஆற்றலும் அறிவும் உடையவன்.

**11.** கரிகாலனது இளமைப் பருவத்தில் அவன் அரசாட்சிக்கு வந்ததும் ஒரு நாள் இரண்டு முதியவர்கள் தங்கள் வழக்கை உரைக்க அவனிடம் வந்தனர். அரசன் சிம்மாசனத்தில் வீற்றிருந்தான். அவனைக் கண்டவுடன் அம்முதியோர் 'இவன் இளம் பருவமுடையவனாக இருக்கின்றான்; அனுபவமில்லாதவன்; இவன் எங்ஙனம் நமது வழக்கைக் கேட்டு நீதி செலுத்தப் போகின்றான்!' எனக் கருதினர். அவர்கள் கருத்தைக் குறிப்பால் உணர்ந்த மன்னன் உடனே ஆசனம் விட்டெழுந்து உள்ளே சென்று, நரைமுடித்து முதுமைக் கோலத்துடன் வந்து மீண்டும் அரியணையில் அமர்ந்தான். அவனைப் பார்த்த அம்முதியோர் 'இம்முதுமைப் பருவமுள்ளவன்தான் அரசன் போலும்' எனக் கருதி அவனிடம் தங்கள் வழக்கை உரைத்தனர். அவர்கள் சொன்ன சொற்களைக் கொண்டே வழக்கின் உண்மை அறிந்து, அவ்விருவரும் மகிழுமாறு முடிபு கூறினன். அரச குலத்தில் பிறந்த கரிகாலன் அனுபவம் பெறாத இளமைப் பருவமுடையவனாக இருந்தும், அரச நீதி செலுத்தும் தன்மை அவனிடத்தில் செம்பாகமாக அமைந்திருந்ததென்பது இவ்வரலாற்றினால் தெரிகின்றது. இச்செய்தியை அறிவிக்கும் பாட்டு,

> " உரைமுடிவு காணான் இளமையோன் என்ற
> நரைமுது மக்கள் உவப்ப—நரைமுடித்துச்
> சொல்லால் முறைசெய்தான் சோழன் குலவிச்சை
> கல்லாமற் பாகம் படும்,"

என்பது.

12. இத்தகைய சிறப்புகளெல்லாம் ஒருங்கே அமையப் பெற்ற சோழன் கரிகாலனைப் பாராட்டிப் பல புலவர்கள் பாடியிருக்கிறார்கள். அவர்கள் பாடிய பாட்டுக்களி லிருந்தே செங்கோல் வழுவாத பேரரசனாகிய இவனது சரித்திரம் நமக்கு ஒருவாறு தெரிகின்றது.

| | | |
|---|---|---|
| மரபு | விச்சை | புறங்காட்டல் |
| முடிபு | வழுவாத | ஏற்றுமதி |
| வாவி | இச்சை | இறக்குமதி |
| நரை | வழங்கிவருதல் | அரியணை |
| சுங்கம் | இசைக்கலை | கலங்கரை விளக்கம் |
| நாட்டி | பாகம் படுதல் | முறை செய்தல் |

## அரும்பதவுரை

வாவி - குளம். மரபு - குலம். முறை செய்தல் - நீதி தவறாது தீர்ப்புச் செய்தல். புறங்காட்டல் - முதுகு காட்டி ஓடுதல். பட்டி னம் - கப்பல்கள் தங்கக்கூடிய துறைமுகமுள்ள கடற்கரை ஊர். முதுமக்கள் - பெரியோர். இச்சை - விருப்பம். விச்சை - வித்தை. பாகம் படும் - பாதி உண்டாகும்.

## பயிற்சி

1. எதிர்ப்பதம் கூறு : தோல்வி, இளமை, நீதி, உண்மை.
2. பொருள் மாறுவதை விளக்கு : கரை, கறை. கரி, கறி. துரை, துறை. மைல், மயில்.

## இலக்கணம்

1. முதியவர்கள், கரிகாலன், ஆதிமந்தி—இச் சொற் களுக்குத் திணை, பால், எண், இடம் கூறு.

2. கேட்டவாறு மாற்று :

கரிகாலன் காவிரியாற்றின் இரண்டு பக்கத்திலும் கரை போட்டான்—'போடப்பட்டது' என்பது பயனிலையாக வரும்படி.

கரிகாலன் இமயமலையில் தனது புலிக்கொடியை நாட்டினான்—'புலிக்கொடி' என்பது எழுவாயாக வரும்படி.

அவன் வீரம் எத்தகையது !—முற்றுப்புள்ளி வரும்படி.

## கேள்விகள்

1. கரிகாலன் என்று பெயர் ஏற்பட்ட காரணம் யாது?

2. கரிகாலன் அடைந்த வெற்றிகள் யாவை? அவன் நாட்டிற்குச் செய்த நன்மைகள் யாவை ?

3. சோழன் 'நரை முடித்துச் சொல்லான் முறை செய்தான்.' எப்போது? ஏன்? எவ்வாறு ?

4. குறிப்பு வரைக : காவிரிப்பூம்பட்டினம், பட்டினப்பாலை, பொருநராற்றுப்படை.

# 2. பயிர்த் தொழில்

1. பயிர்த்தொழில் என்பது பயிர் செய்யும் தொழில் ஆகும். இது விவசாயம் என்றும் கூறப்படும். பயிர்த் தொழில் செய்பவன் குடியானவன் என்றும் விவசாயி என்றும் கூறப்படுவான். குடியானவன் என்று பெயர் வரக் காரணம் என்ன? ஒரு ஊரில் நிலைத்த குடியாக இருந்து அவ்வூரில் நடைபெறும் முக்கியமான தொழிலாகிய பயிர்த்தொழிலைச் செய்து வந்தமையால் பயிர்த் தொழில் செய்பவனுக்குக் குடியானவன் எனப் பெயர் வந்திருக்க வேண்டும். விவசாயி என்னும் பெயர் விவசாயமாகிய தொழிலைச் செய்வதனுல் வந்ததாகும்.

2. நமது வாழ்க்கைக்கு வேண்டிய பொருள்களுள் நான்கு இன்றியமையாதவை. அவைகள் காற்று, நீர், உணவு, உடை என்பன. இவைகளுள் காற்றையும் நீரையும் கடவுளே ஏராளமாகப் படைத்திருக்கின்ருர். இவைகளை மனிதன் செய்தல் இயலாத காரியம். ஆனுல், உணவுக்கு வேண்டிய நெல், கம்பு முதலியவற்றையும் உடைக்கு வேண்டிய பருத்தி முதலியவற்றையும் மனிதனே பயிராக்கிக் கொள்ளுகின்ருன். உணவும் உடையும் இன்றி மக்கள் வாழமுடியாதல்லவா? மக்கள் வாழ்க்கைக்கு மிக மிக அவசியமான இவ்விரண்டுக்கும் காரணமான பயிர்த்தொழில் எவ்வளவு சிறப்புடையது என்று எண்ணிப் பாருங்கள்.

3. பயிர் நன்செய்ப் பயிரென்றும் புன்செய்ப் பயிரென்றும் தோட்டப்பயிர் என்றும் மூவகைப்படும். நன்செய் என்ருல் உயர்ந்த அல்லது செழுமையான நிலம் என்றும், புன்செய் என்ருல் தாழ்ந்த அல்லது செழுமையற்ற நிலமென்றும் பொருள். நன்மையான செய் நன்

செய்; புன்மையான செய் புன்செய். செய் என்பது நிலம். நன்செய் நிலங்களில் விளையும் பயிர், நன்செய்ப் பயிர். அவை நெல், வாழை, கரும்பு என்பன. புன்செய்



நிலங்களில் விளையும் பயிர் புன்செய்ப் பயிர். அவை கம்பு, சோளம், கேழ்வரகு, பருத்தி முதலியன. தோட்டப் பயிர் மிளகாய், அவரை, புடல், கத்திரி முதலியன.

4. நன்செய் நிலங்கள் ஆற்றின் இருகரைகளையும் அடுத்துச் சில மைல் தூரம் வரையில் பரவியிருக்கும். ஆற்றினின்று கால்வாய்களின் வழியாக அந் நிலங்களுக்குத் தண்ணீர் பாயும். அதனால், புது வெள்ளம் வரும்போதெல்லாம் அதில் கலந்துள்ள வண்டல், நிலங்களில் படிந்து படிந்து அந்நிலங்களை மிக உரமுள்ளதாகவும், கொழுமையாகவும் ஆக்கும். சில ஏரிகளை அடுத்தும் நன்செய் நிலங்கள் உண்டு. நன்செய்ப் பயிர்களில் முக்கியமானது நெற்பயிர்.

5. நெற்பயிர் செய்தலுக்கு மிகுந்த உழைப்பு வேண்டும். நிலத்தில் நீர் பாய்ச்சிப் பதப்படுத்த வேண்டும்; அதனை நன்ருகப் பலமுறை உழுது சேருக்க வேண்டும்; பறம்படிக்கவேண்டும்; விதை தெளிக்கவேண்டும்; நாற்றைப் பிடுங்கி நடவேண்டும்; களை பறிக்கவேண்டும். அடிக்கடி நீர் பாய்ச்ச வேண்டும். சில நிலங்களுக்கு எருவும் போடவேண்டும். இங்ஙனம் பலவகையான உழைப்பினுல் ஆகிய பயிரானது பச்சைப் பசேரென்று பசும்பட்டு விரித்தாற்போன்று கண்ணுக்கினிய காட்சியளிக்கும். பயிர் கதிர்விட்டு முற்றிப் பழுத்துத் தலை சாய்ந்து அறுக்கும் பருவம் வந்தவுடன் அறுத்துக் களத்திற்குக் கொண்டுபோய் அடித்து, நெல் வேருகவும் வைக்கோல் வேருகவும் பிரிக்கவேண்டும். நெல்லைக் குவியல் குவியலாகக் காணும்போது உண்டாகும் மகிழ்ச்சி அளவற்றதாகும்.

6. புன்செய்ப் பயிர்களில் துவரை, கம்பு, கேழ்வரகு, சோளம் ஆகிய இவைகளும் பருத்தியும் முக்கியமானவை. கம்பு, கேழ்வரகு முதலிய தானியங்கள் உணவுக்கும், பருத்தி உடைக்கும் பயன்படுகின்றன. கம்பும், சோளமும் சற்று மணற்பாங்கான நிலத்திலும், கேழ்வரகு சற்றுக் களிப்பு மண் உள்ள நிலங்களிலும், பருத்தி கரிசல் மண்ணுள்ள நிலங்களிலும் பயிராகும். கரிசல் நிலம் என்பது கருநிறமுள்ள களிப்பு நிலமே. புன்செய்ப் பயிருக்கு நீர் மிகுதியாக வேண்டுவதில்லை; நிலத்தை இரண்டொரு முறை உழுதால் போதும். புன்செய் நிலத்தைப் பெரும்பாலும் புழுதியாகவே உழுவார்கள். மழை பெய்தவுடன் அந்த ஈரத்திலேயே நிலத்தை உழுது விதை தெளித்து விடுவார்கள். மழையின் ஈரத்தைக் கொண்டே விதை முளைத்து வளரும். பயிர் வளரும்போது இரண்

டொருமுறை நல்ல மழை பெய்தால், அந்த மழை நீரே வளர்ச்சிக்குப் போதுமானதாக இருக்கும்.

7. தோட்டப் பயிர்களில் மிளகாயும், கத்திரி, அவரை, புடல் முதலியவைகளும் முக்கியமானவை. தோட்டப் பயிர் செய்வதற்குப் புன்செய்ப் பயிர் செய்வதைக் காட்டிலும் சற்று மிகுந்த உழைப்பு வேண்டும். தோட்டங்களை மண்வெட்டியினால் கொத்தியாவது, கலப்பைகொண்டு உழுதாவது மண்ணை மிருதுவாக்கி, மிளகாய், கத்திரி இவற்றின் நாற்றுக்களை நடுவார்கள். அவரை, புடல் முதலியவைகளைக் குழிகள் தோண்டி அவற்றில் விதை விதைத்துப் பயிராக்குவார்கள். இவற்றிற்குத் தண்ணீர் புன்செய்ப் பயிருக்கு வேண்டுவதை விட அதிகம் வேண்டும்.

8. உரிய காலத்தில் மழை பெய்தால் மேற்கூறிய மூவகையான பயிரும் மிகச் செழிப்பாக வளர்ந்து நல்ல பலனைத் தரும். 'மாரியல்லது காரியம் இல்லை' என்னும் வாக்கியம் இதுபற்றியே உண்டானது. இன்னும், அம் மூவகையான பயிர்களையும் அதற்குரிய பருவத்திலே பயிர் செய்யவேண்டும். பருவம் தப்பினால் நல்ல விளைவு உண்டாகாது. இதனாலேயே 'பருவத்தே பயிர்செய்' என்னும் முதுமொழியும் தோன்றியது.

9. பயிர்த்தொழிலுக்கு உழவு முக்கிய மாகையால், அது உழுதொழில் என்றும் கூறப்படும். அத்தொழிலைச் செய்வோர் உழவர் என்றும் உழுதுண்டு வாழ்வோர் என்றும் கூறப்படுவர். வேறே எந்தத் தொழில் நடைபெறினும் உழு தொழில் இல்லையானால் மக்கள் உயிருடன் வாழ முடியாதன்றோ? இன்னும், உழுதுண்டு வாழ்வோர் பிறரிடம் பணிந்து சேவகம் செய்யவேண்டிய அவசியமின்று. இதனால்தான் 'உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார்

மற்றெல்லாம் தொழுதுண்டு பின்செல்பவர்' என்றும் 'உழுதுண்டு வாழ்வதற்கு ஒப்பில்லை' என்றும் மூதறிஞர்கள் கூறியுள்ளனர்.

10. நமது இந்திய நாட்டில் உள்ள மக்களில் பெரும்பாலோர் விவசாயிகளே. அதனால் நமது நாட்டுக்கு விவசாய நாடு என்று பெயர். நமது தமிழ்நாட்டு மக்களில் பயிர்த்தொழில் செய்வோருக்கு முற்காலத்திலேயே வேளாளர் என்று பெயர் ஏற்பட்டுள்ளது. வேளாண்மை என்னும் சொல்லுக்கு உபகாரம் என்று பொருள். பயிர்த்தொழில் செய்வோர், தமது தொழிலால் விளைந்த பொருளைத் தாம்மட்டும் பயன்படுத்திக் கொள்ளாமல், பிறருக்கும் கொடுத்து உதவுகிறார்கள். அது சிறந்த உபகாரமன்றோ? ஆதலால், வேளாண்மையைச் செய்யும் மக்களுக்கு வேளாளர் என்று பெயர் வழங்கலாயிற்று. இன்னும், இந்த உபகாரத்துக்குக் காரணமான பயிர்த் தொழிலுக்கே 'வேளாண்மை' என்று ஒரு பெயரும் உண்டு.

11. இத்தகைய சீரும் சிறப்பும் வாய்ந்த பயிர்த்தொழிலைப் போற்ற வேண்டுவது கற்றோர் கல்லாதோர் ஆகிய யாவருடைய கடமையும் ஆகும்.

| | | |
|---|---|---|
| உரம் | கொழுமை | பறம்படித்தல் |
| மாரி | முதுமொழி | தலைசாய்ந்து |
| புழுதி | மூதறிஞர் | வேளாண்மை |
| குவியல் | விவசாயம் | வேளாளர் |

## அருஞ்பதவுரை

உரம் - சத்து. களை - பயிருக்கு ஆகாத புல் செடி முதலியவை; பிடுங்கி எறியக் கூடியவை. முதுமொழி - பழமொழி. மூதறிஞர் - முதிர்ந்த அறிவுடையவர்கள். கொழுமை - செழிப்பு.

## பயிற்சி

1. பச்சைப்பசேர்—இம்மாதிரி நிறத்தைப்பற்றிய வேறு மூன்று சொற்றொடர்கள் சொல்லு.

2. உழவுத் தொழிலின் மேன்மையைப்பற்றி ஐந்து வாக்கியங்கள் கூறு.

3. விவசாயம் செய்கிறவன் விவசாயி—இம்மாதிரி பின் வருபவைகளையும் முடி :

வேளாண்மை செய்கிறவன் ——— .
வியாபாரம் செய்கிறவன் ——— .
தொழில் செய்கிறவன் ——— .

## இலக்கணம்

1. தெளித்து, போய், உழுவார்கள், முடியாது, மிகுந்த— இவைகள் ஒவ்வொன்றும் என்ன சொல் ?

2. மற்றக் காலங்களைக் கூறு :—இருக்கும், பார்த்தேன், செய்கிருன்.

## கேள்விகள்

1. குடியானவன் என்று பெயர் வரக் காரணம் என்ன ?
2. தொழுதுண்டு பின் செல்பவர் யாவர் ?
3. மூன்று வகைப் பயிர்கள் யாவை ? ஒவ்வொரு வகைக்கும் சில உதாரணங்கள் கூறு.
4. வேளாண்மை என்ற சொல்லுக்குப் பொருள் என்ன?
5. வேளாளர் உலகிற்குச் செய்யும் சிறந்த உதவி யாது?

# 3. கம்பர்

1. நாம் பேசுவது தமிழ். தமிழ் நமது தாய்மொழி. தமிழில் பல சிறந்த நூல்கள் உள்ளன. அவற்றை நன்கு படித்துத் தேர்ச்சி பெற்றவர் தமிழ்ப்புலவர் ஆவர். புலவர்கள் தாம் சுயமாகவே பாடல்கள் பாடி நூல் இயற்றுவர். ஔவையார், அதிவீரராம பாண்டியர், பாரதியார் முதலிய புலவர்கள் பாடியுள்ள சிறந்த பாடல்களை நீங்கள் படித்திருப்பீர்கள். இராமாயணத்தைத் தமிழில் பாடிய ஒரு பெரும்புலவரும் உண்டு. அவர்தான் கம்பர்.

2. ஏறத்தாழ ஆயிரம் ஆண்டுகளுக்குமுன் சோழ நாட்டில் திருவழுந்தூரில் உவச்சர் குலத்தில் கம்பர் பிறந்தார். அவர் பிறந்த குடும்பம் ஒரு எளிய குடும்பம். அவர் தந்தையார் ஆதித்தன் என்பவர். கம்பர், 'விளையும் பயிர் முளையிலே தெரியும்' என்பதற்கிணங்க, இளம் பருத்திலேயே புத்திக்கூர்மையும் மிக்க சுறுசுறுப்பும் உடையவராக விளங்கினர். ஆயினும், அவர் இளைஞரா யிருக்கும்போதே தம் பெற்றோரை இழந்தமையால் தம்மை ஆதரிப்பார் இல்லாது வருந்தினர்.

3. அப்பொழுது திருவெண்ணெய் நல்லூரில் சடையப்பர் என்னும் பெயருள்ள ஒரு பெருஞ்செல்வர் இருந்தார். அவர் ஒரு வள்ளல். ஆதலால், அவருக்குச் சடையப்ப வள்ளல் என்றே பெயர் வழங்கியது. அவர் தற்செயலாகக் கம்பரைப்பற்றி அறிந்து வரவழைத்துத் தம் பிள்ளைகளோடு அவரையும் ஒரு பிள்ளையாகக் கருதி வளர்த்து வந்தார். சடையப்பர் கம்பரது நுண்ணறிவையும் ஊக்கத்தையும் கண்டு அவரிடத்தில் மிகுந்த அன்பு கொண்டார்; அவரைத் தம் பிள்ளைகளோடு



பள்ளிக்கனுப்பிக் கல்வி பயிலச் செய்தார். கம்பரும் கல்வியில் மிக்க ஊக்கம் உடையவராய் மிக விரைவாகப் பல நூல்களைக் கற்றுத் தமிழில் தேர்ச்சி பெற்றுப் புலவ ராஞர். சடையப்ப வள்ளல் தம்மால் வளர்க்கப்பெற்ற கம்பர் கல்வியில் தேர்ந்து சிறந்த புலவரானமை அறிந்து மிக்க மகிழ்ச்சி அடைந்தார். பிற அறிஞர்களும் கம்பரது கல்வித்திறத்தை அறிந்து அவரை நன்கு மதிக்க லாஞர்கள்.

4. அக்காலத்தில் சோழநாட்டை 'இரண்டாம் குலோத்துங்க சோழன்' என்னும் மன்னன் ஆண்டு வந்தான். அவன் நீதி வழுவாது செங்கோல் செலுத்தித் தனது குடிகளைத் தன் உயிர்போலப் பாதுகாப்பவன்; தமிழில் மிக்க பற்றுடையவன்; தமிழ்ப் புலவர்களை ஆதரிப்பவன். அவன் தனது சபையிலேயே சில புலவர்களை இருக்கச் செய்து அவர்கள் மூலமாகத் தமிழைப் போற்றிவந்தான். அத்தகைய குலோத்துங்கன் நமது கம்பரைப்பற்றிக் கேள்வியுற்று வரவழைத்து அவருடன் உரையாடினன். உடனே, அவர் சிறந்த தமிழ்ப்புலவர் எனவும், தனது சபைப் புலவர்கள் அனைவரிலும் மேலானவர் எனவும் அறிந்து, அவரைத் தனது அவையின் முதற்புலவராக அமர்த்திக் கொண் டான்.

5. இங்ஙனம் கம்பர் சோழ மன்னஞல் சிறப்புப் பெற்ற செய்தியை அறிந்த வள்ளல் பெரியதோர் இன்பம் உற்ருர். ஆயினும், அவர் கம்பரது கல்வித்திறமை பிற்காலத்து மக்களுக்கும் பயன்பட வேண்டும் என்று எண்ணிஞர். அதஞல், கம்பரை ஒரு பெரிய நூல் பாடச் செய்யவேண்டும் என்னும் விருப்பம் அவருக் குண்டா யிற்று.

6. கம்பர் வடமொழியில் உள்ள இராமாயணத்தில் கூறப்படும் கதையை அறிந்து மிக்க இன்பமடைந்தனர். இராமாயணம் என்பது இராமர் சீதை முதலியோர் வரலாற்றைக் கூறும் அருமையான பெரிய காவியம். அதனை முதன் முதலாக வடமொழியிற் செய்தவர் வான்மீக முனிவர். அந்த இராம கதையில் கம்பருக்கு ஆர்வம் மிக்கது. அக்கதையைத் தமிழிலும் ஒரு காவிய மாகப் பாடினால் தமிழ் மக்களும் அதனைப் படித்து இன்ப முறுவர் எனக் கருதினர். சடையப்ப வள்ளலும் தமது விருப்பத்தை வெளியிட்டனர். ஆதலால், கம்பர் இராமா யணத்தைத் தமிழில் பாடுவதென முடிவு செய்தார். இச்செய்தி யறிந்த சோழ மன்னனும் மிக்க மகிழ்வோடு கம்பருக்கு விடை கொடுக்க, அவர் திருவெண்ணெய் நல்லூர் வந்து இராமாயணத்தைப் பாடத் தொடங்கினர்.

7. கம்பர் இரவெல்லாம் சம்ஸ்கிருத வித்வான் களுடன் வடமொழி நூல்களில் உள்ள இராமகதையை ஆராய்ந்து பகற்பொழுதில் இராமாயணப் பாடல்களைப் பாடுவர். அவர் ஒரு நாளைக்கு எழுநூறுபாடல் வீதம் பதினைந்து நாளில் இராமாயணத்தைத் தமிழில் பாடி முடித்தார்! ஒரு நாளைக்கு எழுநூறுபாடல் பாடுவது அருஞ்செயலல்லவா? ஆதலால், சடையப்ப வள்ளலும் அரசனும் மற்றும் பல அறிஞர்களும் இச்செய்தியறிந்து பெருவியப்பும் அளவற்ற மகிழ்ச்சியும் உடையவராயினர்.

8. கம்பர் தாம் பாடிய இராமாயணத்தை அரங் கேற்ற எண்ணித் திருவரங்கம் அடைந்து, வித்வான் களும் பக்திமான்களும் அடங்கிய ஒரு பெரிய சபை கூட்டினர். அவ்வரங்கில், தாம் பாடிய இராமாயணத்தில் உள்ள பல பாடல்களைப் படித்துக் காட்டிப் பொருள் விளக்கினர். அதனைக் கேட்ட புலவர்பெருமக்கள் பெரு

மகிழ்ச்சி யடைந்தார்கள். ஆயினும், சிலர் சிற்சில கேள்விகள் கேட்டனர். அவற்றிற் கெல்லாம் கம்பர் தக்க விடை கூறவே, இராமாயணம் அரங்கேறியது. அச் சபையில் இருந்த பெரியோர்கள் கம்பரது கல்விப் பெருமையை அறிந்து, அவரைக் 'கல்வியிற் பெரியவர் கம்பர்' என்று கொண்டாடினர்; அதனோடு அவருக்குக் '*கவிச் சக்கரவர்த்தி*' என்னும் பட்டமும் வழங்கினர்.

9. கவிச்சக்கரவர்த்தி யாகிய கம்பர் தாம் பாடிய நூலுக்கு '*இராமாவதாரம்*' என்றே பெயரிட்டனர்; ஆயினும், அப்பெயர் வழங்காது, 'ராமாயணம்' என் னும் பெயரே கம்பர் என்னும் பெயருடன் சேர்க்கப்பட்டுக் 'கம்ப ராமாயணம்' என்று வழங்கி வருகிறது. கம்பர் பாடிய வேறு சில சிறு நூல்களும் உண்டு. அவை சடகோ பரந்தாதி, சரசுவதியந்தாதி, ஏரெழுபது முதலியன.

10. கம்பர் தாம் பாடிய இராமாயணத்தில், தம்மை இளமைப் பருவத்தில் போற்றி வளர்த்துக் கல்வி பயில் வித்த சடையப்ப வள்ளலைப் பத்து இடத்தில் குறித்திருக் கின்றார். இது கம்பருக்குச் சடையப்ப வள்ளலிடமிருந்த என்றும் மாறாத நன்றியறிவைத் தெரிவிப்பதாகும். சோழ மன்னனும் சடையப்ப வள்ளலும் கம்பர் இயற்றிய இராமா யணம் அரங்கேறிய செய்தியறிந்து பேருவகை யுற்றனர்.

11. கம்பராமாயணம் படிக்கப் படிக்க இன்பம் தரும் ஒரு சிறந்த காவியம். அதிலிருந்து பல அரிய நீதிகளையும் உயர்ந்த அறங்களையும் அறிந்துகொள்ளலாம். தமிழ் கற்போர் அனைவரும் கம்பராமாயணம் படிக்காதிருக்க இயலாது. நீங்களும் பெரிய வகுப்புக்களில் கம்பராமா யணச் செய்யுட்களைப் படித்து இன்பம் அடைவீர்கள்.

| | | |
|---|---|---|
| ஆர்வம் | பற்று | பேருவகை |
| பட்டம் | அவை | விளக்குதல் |
| உவகை | உரையாடல் | பக்திமான் |
| மாருத | அமர்த்துதல் | பயில்வித்தல் |
| சான்று | அளவற்ற | முடிவு செய்தல் |
| வடமொழி | வித்வான் | அரங்கேற்றுதல் |
| காவியம் | சுயமாக | கவிச்சக்கரவர்த்தி |

## அரும்பதவுரை

உவகை - மகிழ்ச்சி. அவை - சபை. உரையாடல் - ஒருவரோடொருவர் பேசுதல். வித்வான் - புலவர். கவிச்சக்கரவர்த்தி - புலவர்களிற் சிறந்தவர். அரங்கேற்றுதல் - ஒரு புலவர் தாம் இயற்றிய நூலை வித்வான்கள் கூடிய சபையில் படித்துக்காட்டி அவர்கள் ஒப்பம் பெறுதல்.

## பயிற்சி

1. புலவர், வள்ளல், அரசன், காவியம்—இச்சொற்களைப் பின்வரும் வாக்கியங்களில் பொருத்தமாகச் சேர்த்துக் கூறு.

சடையப்பர் ஒரு ——.
குலோத்துங்கன் ஒரு ——.
கம்பர் ஒரு ——.
இராமாயணம் என்பது ஒரு ——.

2. குலம், நுண்ணறிவு, தேர்ச்சி, இளைஞர், முதுமொழி, திருவரங்கம்—இச்சொற்களைத் தனித்தனி வாக்கியங்களில் அமைத்துக் கூறு.

## இலக்கணம்

கம்பர் ஒரு சிறந்த புலவர்.—இது ஒரு வாக்கியம் அல்லவா? இவ்வாக்கியத்தில் நான்கு சொற்கள் இருக்கின்றன. இச்சொற்களில் பல எழுத்துக்கள் இருக்கின்றன. தமிழ் எழுத்துக்

களை ஆரம்ப வகுப்பிலேயே கற்றுக்கொண்டீர்கள். தமிழ் எழுத்துக்கள் என்னென்ன வகைப்படும்? மொத்தம் எத்தனை?

(1) அ, ஆ, இ, ஈ, உ, ஊ, எ, ஏ, ஐ, ஒ, ஓ, ஔ—ஆகிய பன்னிரண்டு எழுத்துக்களும் உயிரெழுத்துக்கள் எனப்படும்.

(2) க், ங், ச், ஞ், ட், ண், த், ந், ப், ம், ய், ர், ல், வ், ழ், ள், ற், ன்—இப்பதினெட்டு எழுத்துக்களும் மெய்யெழுத்துக்கள் எனப்படும்.

(3) க முதல் னௌ வரையில் உள்ள எழுத்துக்களை எண்ணினால் 216 எழுத்துக்கள் ஆகும். அவை உயிர்மெய் எழுத்துக்கள் எனப்படும்.

(4) ஃ என்பது ஆய்தவெழுத்து எனப்படும்.

எனவே தமிழ் எழுத்துக்கள் மொத்தம் 247 ஆகும்.

நங்கை, இவர், உரிய, அன்பு, அப்பம்—இச்சொற்களிலுள்ள எழுத்துக்கள் ஒவ்வொன்றும் எந்த வகையைச் சேர்ந்தது?

## கேள்விகள்

1. கம்பர் பிறந்த ஊர், குலம் இவைகளைக் கூறு.
2. கம்பர் சடையப்பரிடம் தாம் கொண்டிருந்த நன்றியறிவை எவ்வாறு காட்டியுள்ளார்?
3. கம்பர் இராமாயணம் பாடிய வரலாற்றினைக் கூறு.
4. கம்பராமாயணம் எங்கே அரங்கேற்றப்பட்டது?
5. கம்பராமாயணத்தின் சிறப்புக்கள் யாவை?

# 4. உப்பு .

1. ‘உப்பிட்டவரை உள்ளளவும் நினை’ என்பது ஒரு பழமொழி. இதன் பொருள் உப்பிட்டு உணவு அளித்த வரை என்றும் மறத்தலாகாது என்பதே. நமது உணவுக்கு வேண்டிய சுவைகள் ஆறு. அவை கைப்பு, கார்ப்பு, உவர்ப்பு, துவர்ப்பு, புளிப்பு, இனிப்பு என்பன. இவ்வாறு சுவைகளில் உவர்ப்பைத் தவிர மற்ற எந்தச் சுவை இல்லாவிடினும் நமது உணவை ஒருவாறு உட்கொள்ளலாம். ஆனால் உவர்ப்புச் சுவை இல்லாவிடின் உணவை உட்கொள்ள முடியாது. உவர்ப்புச் சுவையைத் தருவது உப்பு. ஆதலால் உப்பு நமது உணவுக்கு இன்றியமையாத பொருள் ஆகும்.

2. உப்பு வெண்மையான படிகக் கற்கள் போன்ற ஒரு பொருள். அது எல்லா ஊர்களிலும் கடைகளில் விலைக்குக் கிடைக்கும். உப்பு எங்கிருந்து எவ்வாறு எடுக்கப் படுகின்றது எனப் பார்ப்போம்.

3. சில கிணற்று நீர் உவர்ப்பாக இருப்பதை நீங்கள் அறிந்திருப்பீர்கள். கிணற்று நீர் உப்பாக இருப்பதேன்? கிணற்று நீர் உப்பு மண்ணில் இருந்து ஊறி வருகின்றது. அதனால்தான் அந்நீர் உவர்ப்பாக இருக்கிறது. ஆதலால், பூமியில் உப்பு இருக்கிறதென்று அறிகின்றோம். கடல்நீர் உப்பு நீரே. கடல் நீரில் ஒரு சிறு துளியைச் சுவைத்துப் பார்ப்பினும் அது நாம் தாங்க முடியாதபடி அவ்வளவு உவர்ப்பாக இருப்பதைக் காணலாம். ஆதலால், கடல் நீரில் உப்பு ஏராளமாகக் கலந்திருக்கின்றது என்று அறிகின்றோம் அன்றோ? கடல்நீர் உவர்ப்பாக இருப்பதால் கடலுக்கு ‘உவரி’ என்ற ஒரு பெயர் உண்டு. நமக்கு

வேண்டிய உப்பெல்லாம் கடல் நீரினின்றே எடுக்கப் படுகிறது.

4. கடற்கரையில் சில இடங்களில் பூமி நீண்ட தூரம் சமமாக இருக்கும். அவ்விடங்களில் பெரிய பெரிய பாத்திகள் கட்டி அவற்றில் கடல்நீரை இறைத்துத் தேங்க வைத்திருப்பார்கள். அப்பாத்திகளில் உள்ள நீர் சூரிய வெப்பத்தால் ஆவியாகிவிடும். நீர் ஆவியாக ஆக அதில் கலந்துள்ள உப்பு அடியில் குழம்பு போல் தங்கி நிற்கும். இந்தக் குழம்பில் உள்ள நீர் முழுவதும் ஆவியாகி வற்றிய பின் உப்புச் சிறு சிறு படிகக் கற்கள் போன்ற வடிவமடைந்து பொரிந்து கிடக்கும். இங்ஙனம் ஆதல் ' உப்பு விளைதல் ' என்று கூறப்படும்.

5. உப்பு விளைவித்தல் ஆண்டு முழுவதும் நடைபெறுது. மழைக்காலத்தில் உப்பு விளைவிக்க இயலாது. கோடைக்காலத்தில் பங்குனி மாதம் முதல் ஆவணி மாதம் வரை உள்ள பருவமே உப்பு விளைவுக்கு ஏற்ற பருவம். கோடைக்காலத்திலும் கடல்நீர் பாய்ச்சிய பாத்திகளில் ஒரு மழை பெய்யவேண்டும். அதன் பின்புதான் உப்பு நன்கு விளையத் தொடங்கும். இங்ஙனம் உப்பு விளைவதற்கு ஏறத்தாழப் பதினைந்து நாள் செல்லும். உப்பு விளைந்த பிறகு அதனைத் திரட்டிக் குவியல் குவியலாகக் குவித்து விற்பனைக்கு அனுப்புவார்கள். உப்பு விளையும் நிலத்திற்கு ' உப்பளம் ' என்று பெயர்.

6. உள்நாட்டில் சில இடங்களில் உப்பு மண் உண்டு. வண்ணான் துணிகளை வெளுப்பதற்கு உபயோகிக்கும் மண்ணாகிய உவர்மண் என்பது உவர்ப்புள்ள மண்ணே. உப்பு மண்ணைத் தண்ணீரில் கரைத்து அந்நீரைக் காய்ச்சி உப்பெடுப்பதும் உண்டு. பூமியில் சில இடங்களில் உப்புப் பாறைகள் உண்டு. அப்பாறையினின்று

வெட்டி எடுக்கப்படும் உப்புக்கு ‘ இந்துப்பு ’ என்று பெயர் வழங்குகின்றது. இது அருமையாகக் கிடைப்பதால் விலை யுயர்ந்ததாக இருக்கிறது. மண்ணுப்பையும் பாறையுப் பையும் எளிதாகவும் வேண்டிய அளவும் பெற இயலாது. ஆதலால், கடல் நீரினின்று எடுக்கப்படும் உப்பையே நாம் உபயோகிக்கின்றோம். உப்பை விளைவிக்கும் உரிமை அரசியலாருடையது. நாம் நமது விருப்பம் போல் உப்பை விளைவித்து உபயோகித்தல் கூடாது. அரசிய லார் உத்தரவு பெற்று, அவர்கள் மேற்பார்வையிலேயே உப்பு விளைவித்தல் வேண்டும். அதற்கென ஒரு பிரிவு உத்தியோகஸ்தர் இருக்கின்றனர். அந்தப் பிரிவுக்கு ‘ உப்பிலாக்கா ’ என்று பெயர். அரசியலார் உத்தரவின்றி யும் அவர்கட்குத் தெரியாமலும் உப்பெடுத்தல் குற்ற மாகும். அதற்குத் தண்டனையும் உண்டு.

7. பூமியில் உப்பு இருக்கிற தென்று முன்பு அறிந் தோம். ஆனால், உப்பு மிகுதியாக உள்ள இடத்தில்தான் நமக்கு வெளிப்படையாகத் தோன்றும் ; மற்ற இடங்களில் தோன்றாது. ஆயினும் உப்புச்சத்து பூமியில் எங்கும் இருக்கும். அதனால், பூமியில் தோன்றும் மரஞ் செடி கொடி முதலிய தாவரங்களிலும் அவற்றில் உண்டாகும் காய் முதலியவற்றிலும் உப்புச் சத்து இருக்கிறது. புல் பூண்டு முதலியவற்றை உண்டு வாழும் ஆடு மாடு முதலிய மிருகங்களின் உடம்பிலும் உப்புச்சத்து இயற்கையாக அமைந்து விடுகிறது. இதனோடு நமது உணவில் நாம் தனியாக உப்பைச் சேர்க்க வேண்டியிருப்பதால், நமது உடம்பில் உப்புச் சத்து நிரம்ப இருக்கின்றது. உடம்பி லுள்ள எலும்பு முதலிய பொருள்களுக்குப் பலத்தையும் உறுதியையும் கொடுப்பது உப்பே.

8. உப்புச் சேர்க்கப்பெற்ற பண்டம் நீண்ட நாள்

கெடாமல் இருக்கும்; விரைவில் அழுகிப் பதனழியாது. அதனுல்தான் மாங்காய், நாரத்தங்காய் முதலியவற்றைப் பிளந்து உப்பைத் திணித்து வைக்கிருர்கள். ஊறுகாய் என்பது உப்பு நீரில் ஊறுங்காயே. இறைச்சி, மீன் இவற்றையும் உப்புச் சேர்த்துப் பதனுக்கி நீண்ட நாள் வரை வைத்திருந்து உணவாகக் கொள்கின்றனர். இவ் விதம் பண்டங்கள் கெடாமல் நீண்ட நாள் காப்பாற்று வது உப்பாகையால் 'உப்பில்லாத பண்டம் குப்பையிலே' என்னும் பழமொழியும் வழங்குகிறது.

9. வெடி மருந்து செய்வதற்கும் ஒரு வகையான உப்பு உபயோகப்படுகிறது. அதற்குப் 'பொட்டிலுப்பு' அல்லது 'வெடியுப்பு' என்று பெயர்.

10. நமது உணவுக்கு உப்பு இன்றியமையாத தாயினும் அதனை அளவோடு சேர்த்தால்தான் சுவை தரும். அளவுக்கு மீறினுல் சுவை தராது. நமது நாட்டில் நாம் உண்ணும்போது உண்கலத்தில் உப்பைத் தனியாக வும் சிறிது வைப்பதுண்டு. அங்ஙனம் வைப்பது உணவு களில் உப்புக் குறைவாக இருந்தால் அவற்ருேடு அதனைச் சேர்த்துக் கொள்வதற்காகவே.

11. மக்கள் யாவருக்கும் இன்றியமையாது வேண்டப் படும் பொருள் உப்பாகையால் அது கடல் நீரில் ஏராள மாகக் கிடைக்குமாறு இயற்கையில் அமைக்கப்பட் டுள்ளது போலும்.

| | | |
|---|---|---|
| உவர்மண் | திரட்டுதல் | வருமானம் |
| உப்பளம் | படிகக்கல் | தேங்கவைத்தல் |
| இந்துப்பு | மேற்பார்வை | பொட்டிலுப்பு |
| மணங்கு | ஊறுகாய் | வெடிமருந்து |
| பொரிதல் | பண்டங்கள் | இன்றியமையாதது |
| வற்றுதல் | வெடியுப்பு | உப்பிட்டவர் |

## அரும்பதவுரை

இன்றியமையாதது - இல்லாமல் முடியாதது; அவசியமானது. திரட்டுதல் - சேர்த்தல். பண்டங்கள் - பொருள்கள். உண்கலம் - உணவு உண்ணும் பாத்திரம்.

## பயிற்சி

1. உப்பு என்பதைப்பற்றி ஒரு வியாசம் எழுது.
2. ஏற்றவாறு சேர்த்துப் படி :—

| | |
|---|---|
| உப்பு ஒரு | தருவது உப்பு. |
| உப்பு விளையும் | நிலம் உப்பளம். |
| உப்பு விளைவிக்கும் உரிமை | நீண்ட நாள் கெடாது. |
| உவர்ப்புச் சுவை'யைத் | இன்றியமையாத பொருள். |
| உப்புச் சேர்த்த பண்டம் | அரசாங்கத்தாருக்கு உரியது. |

## இலக்கணம்

1. பின்வரும் வாக்கியங்களில் உள்ள பிழைகளைத் திருத்தி எழுது :—

(1) இந்தப் பள்ளிக்கூடத்தில் முன்னூறு மாணவர்கள் படிக்கிருர்கள்.

(2) அவன் கல்லே எரிந்தான்.

(3) அம்மியின் மீது குளவி உருளுகிறது.

(4) சுவற்றில் பல்லி ஓடுகிறது.

2. தமிழ் மொழியில் உள்ள எழுத்துக்கள் எத்தனை வகைப் படும்? அவை யாவை?

## கேள்விகள்

1. கடல் நீரிலிருந்து எப்படி உப்பு எடுக்கிருர்கள்?
2. இந்துப்பு என்பது என்ன?
3. உப்பின் உபயோகங்களில் இரண்டு கூறு.

# 5. பாரி மகளிர்

1. முற்காலத்தில் நமது தமிழ்நாட்டின் ஒரு பகுதியாகிய பறம்பு நாட்டில் வேள்பாரி என்னும் சிற்றரசன் அரசுபுரிந்து வந்தான். வேள்பாரி சிறந்த வீரன்; பேரிரக்கம் உடையவன்; இரவலர்க்கு வரையாது வழங்கும் வள்ளல்; கொழுகொம்பில்லாது தளர்வுற்ற ஒரு முல்லைக்கொடி படர்வதற்குத் தான் ஊர்ந்துவந்த தேரை அதனருகே நிறுத்தித் தான் நடந்து சென்றவன். அவன் பெரும் புலவராகிய கபிலரைத் தன் உயிர்த் துணைவராகக் கொண்டிருந்தான்.

2. இத்தகைய பெருமை வாய்ந்த பாரி நங்கையென்னும் பெயருள்ள ஒரு நங்கையை மணந்தான். அவனுக்கு இரண்டு பெண்கள் பிறந்தனர். அவன் அவர்களுக்கு அங்கவை என்றும் சங்கவை என்றும் பெயரிட்டு நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாக வளர்த்து வந்தான்; உரிய பருவத்தில் கபிலரைக் கொண்டு கல்வி கற்பித்தான். பெண்கள் இருவரும் கல்வியில் தேர்ச்சி பெற்றனர். பிற்காலத்தில் அப்பெண்கள் இருவர்க்கும் 'பாரிமகளிர்' என்ற பெயரே நிலைபெறுவதாயிற்று.

3. பறம்பு நாட்டில் பறம்பு மலை என்னும் ஒரு மலை உண்டு. அதிற் சிறந்த அரண் கட்டப்பட்டிருந்தது. பாரி அம்மலையைத் தன் அரசிருக்கையாகக் கொண்டு செங்கோல் செலுத்திவந்தான்.

4. ஒரு சமயம் முடியுடை வேந்தர் மூவர் பறம்புநாட்டின் மீது படையெடுத்து மலையரணை முற்றுகை இட்டனர். இச் செய்தியறிந்த பாரி மிகவும் வெகுண்டு தானும் போர்க் கோலங்கொண்டு தன் படைகளுடன் காவல் புரிந்தான். இருதிறத்தாரும் நீண்டகாலம் போர் புரிந்தனர்.

எனினும், பறம்பரணைக் கைப்பற்ற மூவேந்தரால் ஆக வில்லை. ஆயினும், அம்மன்னர்கள் ஒரு சூழ்ச்சியால் பாரியைக் கொல்லக் கருதிப் பரிசிலர் வேடம் பூண்டு அவன் தன்னையே பரிசலாகத் தரவேண்டுமென யாசித்த னர். இல்லையென்று சொல்லும் வழக்கம் இல்லாத வள்ள லாகிய பாரியும் அவர்கள் வசம் ஆக, அவ் வன்கண்ணர் அவனைக் கொலை செய்வித்தனர்.

5. இச்செய்தியறிந்த நங்கை தன் கணவனை இழந்த பின் உயிர்வாழ மனம் பொருதவளாய்த் தீக்குளித்தனள். பாரிமகளிர் இருவரும் தாய்தந்தையரை இழந்த துக்கம் தாங்க மாட்டாதவராய் அழுது புலம்பினர். கபிலரும் தமது ஆருயிர் நண்பனுகிய பாரி கொலையுண்டமை குறித் துப் பெரிதும் வருந்தினராயினும், அவ்வருத்தத்தை அடக்கிக்கொண்டு பாரிமகளிரைத் தமது இன்னுரை களால் தேற்றினர். பின்னர், பறம்பரண் பகைவர்வசமாய் விட்டமையால், கபிலர் பாரிமகளிரை உடன் அழைத் துக் கொண்டு பறம்பு நாட்டை விட்டகன்றனர்.

6. கல்வியும் ஒழுக்கமும் அழகும் நிரம்பப்பெற்று மணப்பருவம் எய்திய பாரிமகளிர், கபிலருடன் செல்லுங் கால் தமது பெற்றோரையும் பறம்பு நாட்டையும் நினைந்து நினைந்து மனமுருகி வருந்தினர். புலவர் பெருமானுகிய கபிலர் தமது இனிய மொழிகளால் அவர்கள் வருத்தத்தை ஒருவாறு நீக்கினர்.

7. கபிலர் இவர்கட்குத் தக்க மணமகனைத் தேடித் திருமணம் செய்துவைத்தற் பொருட்டே இவர்களைத் தம் முடன் அழைத்து வந்தனர். ஆதலின், மகதநாட்டை ஆண்ட விச்சிக்கோன் என்னும் அரசன்பால் சென்று பாரிமகளிரை மணஞ்செய்து கொள்ளுமாறு மொழிந்த னர். அவன் யாது காரணத்தாலோ உடன்படவில்லை.

பின்னர், அரையம் என்னும் ஊரில் இருந்த இருங்கோ வேள் என்னும் அரசனை அணுகி, அவர்களை மணம்புரிந்து கொள்ளுமாறு கூறினர். அவனும் அதற்குடன்படாது மறுத்துவிட்டான்.

8. கபிலர் என் செய்வார்! தாம் செய்த முயற்சி பயனளிக்காமையை எண்ணி மிக்க வருத்தமுற்றுர். பின்பு, அம்மகளிருடன் திருக்கோவலூரை யடைந்து, அங்குள்ள தம் நண்பராகிய ஒரு பார்ப்பனரைக் கண்டு, அளவளாவி அவரிடம் பாரிமகளிரை ஒப்பித்து அவர்களைப் பாதுகாக்குமாறு வேண்டிக்கொண்டனர். தாம் பாரியின் பிரிவாற்ருதவராய்ப் பெண்ணையாற்றங்கரையில் வடக்கிருந்து உயிர் நீத்தார்.

9. பெற்ருேரையே யன்றி அருந்துணைவராக இருந்த கபிலரையும் இழந்த பாரிமகளிர் மிக வருந்தி, அவ்வந்தணர் தேற்றத் தேறி, அவர் பாதுகாப்பில் இருந்தனர். அவ்வாறிருக்குங்கால் திருக்கோவலூருக்கு வந்த ஔவையார் தற்செயலாக அப்பார்ப்பனர் வீட்டை அடைந்தனர். அடைந்தவர் அங்குப் பாரி மகளிரைக் கண்டு செய்தி யறிந்து அவர்கள் நிலைமையைக் குறித்து மனம் நொந்து வருந்தினர். ஔவை மூதாட்டியை முன்னமே அறிந்துள்ள பாரிமகளிர் மிக்க அன்புடன் அவரை வரவேற்று உபசரித்தனர்.

10. பாரிமகளிரைத் தக்கார்க்கு மணம்புரிந்து நன்னிலையில் நிறுத்தவேண்டும் என்னும் எண்ணம் ஔவையாருக்கு உண்டாயிற்று. ஆதலின், அவ்வூர் அரசனுகிய தெய்வீகன் என்பானிடம் சென்று, "மன்ன, நீ என் சொல்லை மறுக்காது பாரிமகளிரை மணஞ்செய்துகொள்ளல் வேண்டும்" என்று கூறினர். அதுகேட்ட தெய்வீகன் "பிராட்டியே, இவர்கள் மூவேந்தருக்கும் பகைவராகிய

பாரியின் மகளிர். இவர்களை மணந்துகொண்டால் மூவேந்தரும் என்னிடம் பகைமை கொள்வர். ஆதலால், அம் மூவேந்தரும் வந்திருந்து மணம் நடத்திவைப்பாராயின் யான் இவர்களைத் திருமணஞ் செய்துகொள்ளத் தடையில்லை" என மொழிந்தனன். ஔவையாரும் "யான் நீ மொழிந்தவண்ணமே மூவேந்தரும் வந்திருந்து திருமணத்தை நடத்துமாறு செய்கிறேன்" எனக் கூறித் திருமணநாள் குறித்து மூவேந்தருக்கும் மணவோலை போக்கினர்.

11. திருமணவோலை கண்ட மூவேந்தரும், ஔவையாரிடம் மிக்க மதிப்புடையவராதலின், தத்தம் பரிவாரங்களுடன் குறித்த நாளில் திருக்கோவலூர் சேர்ந்து ஔவையாரைக் கண்டு அளவளாவினர். திருமணமும் குறித்த வேளையில் மிகச் சிறப்பாக நடைபெற்றது. திருமண விழாவுக்கு வந்த அனைவருக்கும் சந்தனம், பூ முதலியன வழங்கல், விருந்தளித்தல் முதலிய உபசாரங்கள் தக்கவாறு நடைபெற்றன. திருமணத்துக்கு வந்திருந்த அனைவரும் ஔவையாருக்கிருந்த மதிப்பைக் குறித்து அவரைப் புகழ்ந்து கொண்டாடித் தத்தம் இருப்பிடம் சென்றனர். மூவேந்தரும் தமது பரிவாரங்களுடன் தம்மூர் மீண்டனர். ஔவையாரும் சிலநாள் அங்கிருந்து பின்னர் வேறிடம் சென்றனர்.

12. தெய்வீகன் பாரிமகளிருடன் இல்லற வாழ்க்கையை மேற்கொண்டு இனிது வாழ்ந்து வந்தனன்.

| | | |
|---|---|---|
| முல்லை | சூழ்ச்சி | புலம்புதல் |
| நங்கை | பாதுகாப்பு | பரிவாரம் |
| வேடம் | இரவலர் | மணவோலை |
| பூண்டு | பரிசிலர் | இருக்கை |
| வசம் | பெருமான் | தீக்குளித்தல் |
| அணுகி | ஆருயிர் | படையெடுத்தல் |
| தேற்ற | வரையாது | உயிர்த்துணைவர் |
| இழந்த | அளவளாவி | போர்க் கோலம் |
| வேந்தர் | மூதாட்டி | இருதிறத்தார் |
| இன்னுரை | மணமகன் | வன்கண்ணர் |

## அரும்பதவுரை

நங்கை - பெண். வேந்தர் - அரசர். சூழ்ச்சி - தந்திரம். இரவலர் - இரப்பவர்; யாசிப்பவர். பரிவாரம் - ஏவலாளர் முதலியோர். இரு திறத்தார் - இருபக்கத்தினர்; இரண்டு கட்சியினர். வன்கண்ணர் - இரக்கமற்றவர்கள். இன்னுரை - (இனிமை+உரை). இனிய சொற்கள்

## பயிற்சி

1. கால், முடி, போர், கரும்பு, கொடி, உரை, கூறு, மணம்—இச்சொற்களை வெவ்வேறு பொருளில் வரும்படிஅமைத்துத் தனித்தனி வாக்கியங்கள் கூறு.

2. பாரியின் கொடைத்திறம் விளங்கக்கூடிய செய்தி ஒன்று கூறு.

## இலக்கணம்

1. உயிரெழுத்துக்களுள் அ, இ, உ, எ, ஒ என்னும் ஐந்தும் குறுகிய ஓசை உள்ளவை. ஆதலால், இவைகளுக்குக் குறில் அல்லது குற்றெழுத்து என்று பெயர்.

ஆ, ஈ, ஊ, ஏ, ஐ, ஓ, ஔ என்னும் ஏழும் நீண்ட ஓசை உள்ளவை. ஆதலால், இவைகளுக்கு நெடில் அல்லது நெட்டெழுத்து என்று பெயர்.

2. உயிர்மெய்யெழுத்துக்களில், க, கி, கு, கெ, கொ, ங, ஙி, ஙு, ஙெ, ஙொ......ன, னி, னு, னெ, னொ ஆகிய 90 எழுத்துக்களும் உயிர்மெய்க் குறில் எனப்படும்.

கா, கீ, கூ, கே, கை, கோ, கௌ, ஙா, ஙீ, ஙூ, ஙே, ஙை, ஙோ, ஙௌ......னு, னீ, னூ, னே, னை, னோ, னௌ ஆகிய 126 எழுத்துக்களும் உயிர் மெய் நெடில் எனப்படும்.

3. நாடு, பேசு, விளை, எளிய, ஐயா—இவ்வார்த்தைகளில் குறுகிய ஓசையுள்ள எழுத்துக்கள் எவை? நீண்ட ஓசையுடைய எழுத்துக்கள் எவை?

## கேள்விகள்

1. வேள்பாரி ஆண்டுவந்த நாட்டின் பெயர் என்ன? அவனிடம் விளங்கிய சிறந்த தன்மைகள் யாவை?

2. மூவேந்தர்கள் பாரியை எவ்வாறு கொன்றனர்?

3. கபிலர் ஏன் உயிர் துறந்தார்? அப்போது பாரிமகளிரை யாருடைய பாதுகாப்பில் விட்டார்?

4. ஔவையார் பாரிமகளிருக்குத் திருமணம் செய்து வைத்த வரலாறு யாது?

# 6. வீரபாண்டிய கட்டபொம்மன்




1. ஏறத்தாழ நூற்றறுபது ஆண்டுகளுக்கு முன் தமிழ்நாடு பல சிறு பகுதிகளாகப் பிரிந்திருந்தது. இவை பாளையப்பட்டுக்கள் என்று பெயர் பெற்றிருந்தன. ஒவ்வொரு பாளையப்பட்டின் தலைவருக்கும் பாளையக்காரர் என்று பெயர். இவர்கள் எல்லோரும் ஆர்க்காட்டு நவாபுக்கு அடங்கியவர்களாகக் கருதப்பட்டார்கள்.

2. திருநெல்வேலி ஜில்லாவிலிருந்த பாஞ்சாலங்குறிச்சி இத்தகைய பாளையப்பட்டுக்களில் ஒன்று. அதை வீரபாண்டிய கட்டபொம்மன் ஆளத் தொடங்கினன். அப்பொழுது வியாபாரிகளாக வந்த ஆங்கிலேயர் நம் நாட்டில் ஆதிக்கம் செலுத்தத் தொடங்கினர்கள். ஆர்க்காட்டு நவாப் அவர்களிடம் பெருந்தொகை கடன் வாங்கிக்

கொண்டு, பாளையக்காரரிடம் கப்பம் வாங்கும் உரிமையை அவ்வாங்கிலேயருக்குக் கொடுத்துவிட்டார்.

3. பாளையக்காரர்களில் பெரும்பாலோர் ஆங்கிலேயருக்குப் பணிந்து அவர்களிடம் கப்பம் செலுத்தத் தொடங்கினூர்கள். ஆனூல் வீரபாண்டிய கட்டபொம்மன் ஆங்கிலேயருக்குப் பணிய மறுத்துவிட்டான். இதனூல் ஆங்கிலேயருக்கும் வீரபாண்டியனுக்கும் போர் மூண்டது.

4. ஆங்கிலேயர் பெரும்படையுடனும் பீரங்கிகளுடனும் சென்று பாஞ்சாலங்குறிச்சிக் கோட்டையைத் தாக்கினூர்கள். பீரங்கிக் குண்டுகளால் கோட்டைச் சுவரைச் சில இடங்களில் தகர்த்து ஆங்கிலப் படைகள் உள்ளே நுழைய முயன்றன. முதலில் நுழைந்தவர்களை உள்ளேயிருந்த பாஞ்சாலங்குறிச்சி வீரர் கொன்று குவித்தனர். ஆகையால், பின்னிருந்த ஆங்கிலப் படையினர் கோட்டைக்குள் நுழையாமல் பின்வாங்கினர்.

5. அன்று இரவு கட்டபொம்மனும் அவனுடைய இரு தம்பிமாரும் வேறு சில முக்கிய வீரர்களும் பாஞ்சாலங்குறிச்சிக் கோட்டையை விட்டு வெளியேறினர். வீரபாண்டியன் தப்பிவிட்டதை மறுநாள் அறிந்த ஆங்கில தளபதி, அவனைப் பிடிக்கத் தீவிரமான முயற்சிகளைச் செய்தான். கட்டபொம்மனைப் பிடித்து ஆங்கிலேயரிடம் ஒப்படைப்பதில் சில பாளையக்காரரும் உதவி செய்தனர்.

6. பாஞ்சாலங்குறிச்சியைவிட்டு வெளியேறிய கட்டபொம்மன் கோலார்ப்பட்டி பாளையக்காரரின் அரண்மனையில் ஒய்வெடுக்கத் தங்கினூன். இந்தச் செய்தி தெரிந்த எட்டயபுரத் தலைவன் தன் படைகளுடனும், சில ஆங்கிலப் படைகளுடனும் விரைந்து சென்று, கட்டபொம்மனிருந்த அரண்மனையைச் சூழ்ந்துகொண்டான்.

7. வீரபாண்டியன் இந்த நிலையைக் கண்டு அஞ்ச

வில்லை. தன்னுடன் வந்த தம்பியரும் சில வீரர்களும் துணை நிற்க, எதிரிப் படையைத் தாக்கிப் பலரை எமனுல குக்கு அனுப்பினுன். முடிவில் வீரபாண்டியனும் இரு தம்பிகளும் வேறு மூன்று வீரர்களும் எதிரிப் படைக ளிடையே வழி செய்துகொண்டு தப்பி யோடிவிட்டனர்.

8. இதன் பிறகு வீரபாண்டியன் சென்னை செல்லக் கருதி, துணைவருடன் வடக்கு நோக்கிச் சென்றுன். வழியில் புதுக்கோட்டை அரசனைக் காண எண்ணி அவனது அரண்மனை சென்றுன். புதுக்கோட்டை அரசன் ஆங்கிலேயரின் நன்மதிப்பைப் பெறுவதற்கு அதுவே தருணம் என்று மகிழ்ந்து, உடனே ஆங்கில தளபதிக்குச் செய்தி அனுப்பிவிட்டான். ஆங்கிலப் படைகள் புதுக் கோட்டைக்கு விரைந்து சென்றன. கையில் ஆயுத மில்லாத சமயத்தில் வீரபாண்டியனை அப்படைகள் சூழ்ந்தன. வீரபாண்டியனும் அவனுடனிருந்தோரும் சிறைப்பட்டனர்.

9. ஆங்கிலேய தளபதி, வீரபாண்டியனைக் கயத்தாறு என்ற ஊருக்குக் கொண்டுசென்று அவன்மீது பல குற் றங்கள் சாட்டி விசாரணை செய்தான். ஆங்கிலேயருக்குப் பணிய மறுத்த வீரனை கட்டபொம்மன் அரசாங்கத் துரோகி என்று குற்றஞ் சாட்டப்பட்டான்; விசாரணை யில் அவன் குற்றவாளி என்று தீர்ப்பளிக்கப்பட்டது; தூக்கு தண்டனையும் விதிக்கப்பட்டது.

10. வீரபாண்டியன் தூக்குமரத்தில் மாண்டாலும் அவனது சுதந்திர தாகத்தினுல் விளைந்த உயிர்த் தியாகம் வீண்போகவில்லை. பிற்காலத்தில் இந்தியாவின் விடுதலைக் காகப் போராடிய வீரர்களுக் கெல்லாம் அவனது சுதந் திரப் போர் ஒரு வழிகாட்டியாய் முதற்போராக அமைந்து ஊக்கமளித்தது.

| | | |
|---|---|---|
| பாளையப்பட்டு | சாட்டி | ஆதிக்கம் |
| பாளையக்காரர் | தூக்கு தண்டனை | ஒப்படை |

## அரும்பதவுரை

ஆதிக்கம் - அதிகாரம். ஒப்படை - சேர்ப்பி ; கொடுத்துவை. சாட்டு - காரணம் கற்பித்துக் கூறு.

## பயிற்சி

1. கடுமை + கோபம் = கடுங்கோபம். இம்மாதிரி பின் வருபவைகளைப் பிரித்துக் கூறு :

செம்மண், வெண்ணிலா, பசும்புல், நுண்ணறிவு, கருங் குரங்கு.

2. சேர்த்து எழுது :—

காடு + பூனை. வீடு + மிருகம். ஆடு + குட்டி. மாடு + வண்டி.

## இலக்கணம்

1. கருணை, கோபம், அழித்தல், வேட்டை, காடு, புலி, இரவு—இவை ஒவ்வொன்றும் எந்தவகைப் பெயர்ச் சொற்கள் ?

2. உயிர்மெய்க் குறில், உயிர்மெய் நெடில், இவை ஒவ் வொன்றுக்கும் நான்கு உதாரணங்கள் தருக.

## கேள்விகள்

1. கட்டபொம்மன் பாஞ்சாலங்குறிச்சியை ஆளத்தொடங் கியபொழுது,, நம் நாட்டு நிலைமை எவ்வாறிருந்தது ?

2. பாஞ்சாலங்குறிச்சியில் ஆங்கிலேயருடன் கட்டபொம் மன் செய்த போரை விவரி.

3. கோலார்ப்பட்டியில் கட்டபொம்மன் எவ்வாறு தப்பி னான் ?

4. கட்டபொம்மனின் தியாகம் ஏன் வீண்போகவில்லை ?

# 7. ஒரு பாலை நிலப் பறவை

1. பறவைகளில் மிகச் சிறியது சிட்டுக்குருவி. மிகப் பெரிய பறவை எது எனக் கேட்டால் நீங்கள் கழுகு என்று கூறுவீர்கள். கழுகினும் பெரிய பறவை ஒன்று உண்டு. அது பாலை நிலத்தில் வசிக்கக் கூடியது. அதற்கு ஆங்கிலத்தில் 'ஆஸ்டிரிச்சு' எனப் பெயர். விலங்குகளில் யானை எங்ஙனம் எல்லாவற்றினும் பெரியதோ அது போலப்பறவைகளில் ஆஸ்டிரிச்சே யாவற்றிலும் பெரிது. ஆஸ்டிரிச்சு நம் நாட்டில் காணக்கூடிய பறவை அன்று; ஆப்பிரிக்காவிலும் அரேபியாவிலும் உள்ள பாலை நிலங்களில் வசிப்பது. ஆதலின் அதற்குத் தமிழ்ப் பெயர் இல்லை. ஆயினும், இதனைத் தீப்பறவை அல்லது நெருப்புக் கோழி எனக் கூறுகின்றனர்.



2. இப்பறவையின் தோற்றமும் பருமனும் பழக்க வழக்கங்களும் மிகவும் வியக்கக் கூடியவை. கால் முதல் தலை வரை இது எட்டடி உயரம் உள்ளது. ஒரு மனிதனைத் தன் முதுகில் சுமந்து செல்லத்தக்க வலிமையுள்ளது. இதன் கழுத்து மட்டும் மூன்றடி நீளமானது; தலை மிகச் சிறியது. இதன் தலையும் கழுத்தும் நிமிர்ந்த வண்ணமாக இருக்கும். அங்ஙனம் வைத்திருத்தல் இதற்குக் கம்பீரமான தோற்றத்தைக் கொடுக்கின்றது. இதன் கால்கள் மூன்றடி

உயரமும் உறுதியும் மிகுந்த வலிமையும் உள்ளவை. இப் பறவை தன் கால்களினுலே தன் பகைவரைப் பலமாக உதைத்துக் கீழே தள்ளிவிடும். கழுத்திலும் கால்களிலும் இறகுகள் இல்லை. இதற்குப் பெரிய இறக்கைகள் உண்டு. ஆயினும், அவற்ருல் பறத்தல் இயலாது. ஏன்? அதன் உடம்பு மிகவும் பளுவானது; முந்நூறு நானூறு பவுண்டு கனமுடையது. இவ்வளவு கனமுள்ள உடலைத் தூக்கிக் கொண்டு பறத்தல் எளிதன்றல்லவா? ஆகையால் தான் இப்பறவை பறப்பதில்லை. ஆயினும் ஒரு மணிக்கு 25 மைல் வீதம் மிக விரைவாக ஓடும். இதன் ஓட்டத்துக்கு, விரைவாகச் செல்லும் குதிரையின் ஓட்டமும் ஈடாகாது. இப்பறவை ஓடும்போது இரண்டு இறக்கைகளையும் விரித்துக் கொண்டு ஓடுதலே இவ்வளவு விரைவுக்குக் காரணம்.

3. இதன் இறக்கை இறகுகளும் வாலிறகுகளும் மிக அழகான தோற்றமுடையவை; மிகவும் மென்மையானவை. மேல் நாட்டில் செல்வச் சீமாட்டிகள் இந்த இறகுகளைத் தங்கள் தொப்பிகளில் செருகி அழகு செய்து கொள்வார்கள். ஒரு இறகைச் சில சமயங்களில் 2 அல்லது 3 பவுன் விலை கொடுத்தும் வாங்குவார்கள். இப்பறவையின் முட்டை ஒரு பெரிய தேங்காயைப்போலப் பருத்திருக்கும். நம் நாட்டில் கோழி முட்டையும், வாத்து முட்டையும் சிலருக்கு உணவாக உதவுவது போல ஆஸ்டிரிச்சின் முட்டையும் ஆப்பிரிக்கர்களுக்கு உணவாக உதவுகிறது.

4. இப்பறவை இரை கொள்ளுதல் மிகவும் விசித்திரமானது. இது புல், பூண்டு, இலை, காய், பூச்சி, புழு, சிறிய பறவை, பாம்பு, பல்லி ஆகிய எவற்றையும் உண்ணும். இவையெல்லாம் வயிற்றில் ஜீரணிக்கக் கூடியவை. ஆனுல் ஜீரணிக்கக் கூடாத கல், கண்ணுடி,

ஆணி முதலியவற்றைக் காணின் அவைகளையும் விழுங்கி விடும். இவைகளை விழுங்குவதால் சில வேளையில் இப் பறவைக்கு மரணம் நேர்ந்து விடுவதுண்டு.

5. பொதுவாகப் பறவைகளில் பெண் பறவையே அடை காக்கும். ஆனால் தீப் பறவைகளில் ஆண் பறவையும் அடைகாக்கும். இரையின் பொருட்டு வெளியே செல்லும்போது முட்டைகளை மணலில் மூடிவிட்டுச் செல்லும். தன் முட்டைகளைப் பாதுகாத்தலில் இதற்குள்ள கவனத்தைப் பாருங்கள்!

6. இப்பறவை மிகவும் வேகமாக ஓடக் கூடியதாயினும் தன்னை வேட்டையாடுவோர் கையில் எளிதாக அகப்பட்டுக் கொள்ளுகின்றது. அதற்குக் காரணம் இது ஓடுகிற முறையே. இது நேராக ஓடாமல் வளைந்து வட்டமாக ஓடுகின்றது. அதனால் வேட்டையாடுவோர் குறுக்கே சென்று இதனைப் பிடித்து விடுகின்றனர். இப் பறவைக்கு இன்னொரு வழக்கம் உண்டென்றும் கூறுகின்றனர். தன்னைப் பிடிக்க வருவோரைக் கண்டதும் மணலில் தலையைப் புதைத்துக் கொண்டால் தன்னை அவர்கள் காணமாட்டார்கள் என்று கருதி, அங்ஙனமே தன் தலையை மறைத்துக் கொள்ளுமாம்.

7. தீப்பறவை ஆப்பிரிக்கர்களுக்கு மிகவும் பயன் தரத்தக்கது. இதன் முட்டை அவர்களுக்குச் சிறந்த உணவாகிறது. முட்டையின் ஓட்டினைப் பாத்திரமாக உபயோகிக்கின்றனர். இப்பறவைகளைப் பெரிய மந்தையாக வளர்த்து, இவற்றின் இறகை விற்பனை செய்து ஊதியம் அடைகின்றனர். இதன் இறைச்சியையும் உண்கின்றனர்.

8. பறவை யினத்தில் மிக விசித்திரமான பழக்க வழக்க முடையதும் மற்றவைகள் யாவற்றினும் பெரிதாக

இருப்பதும் பாலைநிலப் பறவையாகிய தீப்பறவையே ஆகும்.

| | | |
|---|---|---|
| ஈடு | சீரணித்தல் | பாலை நிலம் |
| கழுகு | செருகுதல் | சிட்டுக்குருவி |
| சீமாட்டி | உதைத்தல் | விசித்திரமான |
| மென்மை | வன்மை | தீப்பறவை |
| புதைத்தல் | எங்ஙனம் | நெருப்புக் கோழி |
| மாத்திரம் | நிமிர்ந்த | பழக்க வழக்கம் |

## அரும்பதவுரை

சீமாட்டி - சிறப்புடையவள். சீமான் - சிறப்புடையவன். பாலைநிலம் - நீரும் நிழலுமற்ற மணல் வெளி. பவுண்டு - 40 ரூபாய் எடையுள்ள நிறை அளவு. ஈடு - ஒப்பு, சமானம்.

## பயிற்சி

1. பறவைகளில் யாவற்றிலும் தீப்பறவை பெரிது—இம் மாதிரி வாக்கியத்தின் இடையே **யாவற்றிலும்** என்று வரும்படிப் பின்வரும் வாக்கியங்களை முடி :

செல் எறும்பு..................
சிட்டுக்குருவி..................
ஆலமரம் மரங்கள்..................

2. குதிரை எருதைவிட வேகமாக ஓடும்—இம்மாதிரி பின்வரும் வாக்கியங்களை முடி :

இவன் அவனைவிட..................
மயில் கோழியைவிட..................
நீ என்னைவிட..................

## இலக்கணம்

1. மெய்யெழுத்துக்களுள்,

க், ச், ட், த், ப், ற் என்னும் ஆறும் வலிய ஓசை உடையவை. ஆதலால், இவைகளுக்கு **வல்லினம்** அல்லது **வல்லெழுத்து** என்று பெயர்.

ங், ஞ், ண், ந், ம், ன் என்னும் ஆறும் மெல்லிய ஓசை உடையவை. ஆகையால், இவைகளுக்கு **மெல்லினம்** அல்லது **மெல்லெழுத்து** என்று பெயர்.

ய், ர், ல், வ், ழ், ள், என்னும் ஆறும் இடைத்தரமான ஓசை உடையவை. ஆதலால், இவைகளுக்கு **இடையினம்** அல்லது **இடையெழுத்து** என்று பெயர்.

2. கோடுள்ள இடங்களில் ஏற்ற வல்லெழுத்தைச் சேர்த்துப் படி : ப—பு, தா—கு, பூ—டு.

கோடுள்ள இடங்களில் ஏற்ற இடையெழுத்தைச் சேர்த்துப் படி : பா—. கா—. தே—.

## கேள்விகள்

1. தீப்பறவை எங்கே வசிக்கும் ?
2. தீப்பறவையைப் பிடிப்பது எவ்வாறு ?
3. தீப்பறவையால் மனிதருக்கு என்ன உபயோகம் ?
4. தீப்பறவை விசித்திரமான பழக்கவழக்கம் உடையது—எவ்வாறு ?

# 8. உண்மை உயர்வளிக்கும்

## [அரசனும் கைதிகளும்]

1. பாண்டி நாடெனும் பைந்தமிழ் நாட்டிலே
ஈண்டு மக்களை என்மக்க ளாமென
நீண்ட நாளர சாட்சிசெய் மன்னனும்
பூண்ட பேருடைப் புண்ணியன் என்பவன்.

2. ஆங்கோர் நாள்சிறைச் சாலையை அண்மியே
பாங்க தாகமேற் பார்வையிட் டேகுவோன்
தீங்கி ழைத்தவ ராய்த்தளை பூண்டவர்
பாங்கில் நிற்பவ ரைவரைப் பார்த்தனன்.

3. பார்த்த வேந்தனும் " பண்பது கெட்டுநீர்
ஆர்த்த காற்றளை யோடிங் கழுங்குவீர்,
சீர்த்த காரியஞ் செய்திலீ ரோ ?" வெனப்
பார்த்தி வன்றனக் கன்னவர் பகர்வரே.

4. அவர்க ளுள்முத லாமவன் " ஐயனே
எவர்க ளுக்குமோர் தீங்குமி ழைத்திலேன்
கவர்வ தேபுரி காவலர் தம்கள
வவர்கள் மேலுரு தென்னதா ஆக்கினர்.

5. என்ன லும்மரசன் வியப் பெய்தியே
" அன்ன தா" வென்ற டுத்தவர் பார்த்துமே
" என்ன உன்குற்றம் " என்றுவி னுவலும்
மன்ன கேளென மற்றவன் கூறுவான்.

6. " குற்றம் ஒன்றும்நான் செய்திலேன் கொற்றவ!
குற்றம் செய்பவர் கூட்டத்திற் சேர்ந்ததே
குற்றம் என்றுசி றைதனிற் கூட்டினர்
குற்றம் கண்டிடுங் கொள்கையர் என்றனன்.

7. அடுத்து ளோன்றனை அரசனும் " உன்பிழை
எடுத்தி யம்புவாய் " என்னலும் " ஏந்தலே
அடுத்து வீட்டுள ஆகாதோர் சான்றினுல்
கொடுத்த தண்டனை யா"மெனக் கூறினுன்.

8. பின்னு ளோனைப்பின் மன்னவன் " உன்பிழை
என்ன?" என்ன, " விறைவனே யான்செய்த
தென்ன வென்றறி யேனுண்மை யீதெனச்
சொன்ன சொல்மதி யாதொறுத்தா " ரென்ருன்.

9. இன்ன வாறந்த நால்வரும் மெய்ம்மைபோல்
சொன்ன சொற்களைக் கேட்டபின் மன்னனும்
" என்ன உன்செய்தி ?" என்னலும் அன்னவர்
பின்னர் நின்றவன் பேசுவா ருயினுன்.

10. " வறுமை நோயினுல் வாடியும் வேந்தனே
பொறுமை யோடுபன் ைட்களைப் போக்கினேன்
சிறுமை கள்பல தீர்க்கும்வ கையின்றிப்
பெருமை யில்கள வென்பதைப் பேணினேன்.

11. " ஆத லாலிங் கடைந்தனன் யானுமே
ஈத லாதுவே றில்லைபொய் யாவதும்
ஓதும் புன்மை யொருசிறி தும்மிலேன்
தீதினுல் வந்த திச்சிறை வாசமே."

12. என்று கூறலும் மன்னவன் " குற்றமே
ஒன்றும் செய்தறி யாருடன் ஒன்றுதல்
நன்றன் றிச்சிறை வாசம் தவிர்ந்துநீ
இன்று நீங்குவாய் " என்று விடுத்தனன்.

13. விடுத்த லோடவன் வேண்டும் பொருளெலாம்
கொடுத்து " யாதுங்கு றைவின் றி வாழ்வதாய்
எடுத்த பொய்யினும் மெய்மையே இன்பமா
நடத்து மென்பதை நன்கறி " கென் றனன்.

—வித்வான் ம. பெரியசாமிப் பிள்ளை

| | | | |
|---|---|---|---|
| ஈது | சிறுமை | பேணுதல் | அன்னது |
| ஈண்டு | விடுத்தல் | அன்னவன் | பன்னுள் |
| பூண்ட | பகர்வது | ஒறுத்தல் | புண்ணியன் |
| பண்பு | கவர்வது | ஒன்றுதல் | கொற்றவன் |
| பாங்கு | அண்மி | இழைத்தல் | அழுங்குதல் |
| ஏந்தல் | சீர்த்த | ஏகுவான் | சிறைச்சாலை |
| புன்மை | கொள்கை | காவலர் | |

## அரும்பதவுரை

அண்மி - அடைந்து; நெருங்கி. பாங்கதாக - முறையாக. தளை - விலங்கு. ஆர்த்தல் - ஒலித்தல். அழுங்குதல் - வருந்துதல். புன்மை - சிறுமை; அற்பத்தனம். பைந்தமிழ் - நல்ல தமிழ். பண்பு - குணம். சீர்த்த - நல்ல. அடுத்தவற் பார்த்து - அடுத்தவனைப் பார்த்து.

## பயிற்சி

1. புண்ணியனுக்கும் கைதிகளுக்கும் நடந்த உரையாடலை வசன நடையில் எழுது.

2. அரசன் என்னும் பொருளைத் தரும் வேறு மூன்று சொற்கள் கூறுக.

## இலக்கணம்

1. அ, இ, உ இம்மூன்று எழுத்துக்களும் சுட்டுப் பொருளில் வந்தால் சுட்டெழுத்து என்று கூறப்படும்.

(உ-ம்.) அவன், இவள், அவர்கள்.

2. எ, யா, ஆ, ஓ, ஏ இந்த ஐந்தெழுத்துக்களும் வினாப் பொருளில் வந்தால் வினாவெழுத்து என்று கூறப்படும்.

(உ-ம்.) எவன்? யாவர்? வந்தானா? நீயோ? மன்னனே!

3. கீழ்க்கண்ட சொற்களில் சுட்டெழுத்து, வினாவெழுத்து இவற்றைக் குறிக்க :

அணில், அவள், இடையன், இவர்கள், எறும்பு, எவன், கனா, போ, ஏணி, யாவன், யானை, படித்தாயா, ஏன்.

## கேள்விகள்

1. புண்ணியன் அரசாட்சி எத்தகையது ?

2. ஐந்தாவது கைதி கூறியதற்கும் மற்றக் கைதிகள் கூறியதற்கும் என்ன வேறுபாடு ?

3. இந்தக் கதையினால் நீ அறிந்து கொள்வது யாது ?

# 9. பத்திரிகைச் செய்திகள்

## (மௌன வாசிப்பு)

## 1. பம்பாயில் பெருந்தீ

பம்பாய்,
அக்டோபர் 1, 1954.

இன்று அதிகாலையில் பம்பாய் நகரத்தின் மத்தியிலிருந்த சில தொழிற்சாலைகளில் தீப்பற்றிக்கொண்டது. பம்பாய் நகரத்திலுள்ள தீயணைக்கும் படையில் பெரும் பகுதி அந்தத் தீயுடன் இரண்டு மணிநேரம் போராடிய பிறகே தீயை அடக்க முடிந்தது. எனினும், இரண்டு பட்டு நெசவாலைகள் முழுவதும் எரிந்து நாசமாகி விட்டன ; இரண்டு சாயத் தொழிற்சாலைகள் பெரும்பகுதி சேதமாயின.

செய்தி கிடைத்த பத்து நிமிஷங்களுக்குள் பதினேழு தீயணை எஞ்சின்கள் தலத்துக்கு விரைந்தன. ஆனால் அதற்குள் இரண்டு பட்டு நெசவாலைகளையும் தீ சூழ்ந்து கொண்டது. அருகிலிருந்த அச்சுத் தொழிற்சாலைகளுக்கும் சாயத் தொழிற்சாலைகளுக்கும் தீ பரவிவிடும் நிலைக்கு வந்துவிட்டது.

ஒரு நெசவாலையில் இரவு முறையில் வேலையில் ஈடுபட்டிருந்த 200 தொழிலாளர் முதலில் தீப்பிடித்தபொழுது அதை அணைக்கப் பெருமுயற்சி செய்தனர். வட கிழக்குக் காற்றினால் வீசப்பட்ட அந்தத் தீ விரைவில் பரவியதால் அவர்களது முயற்சி வீணாகியது.

இரண்டு பட்டு நெசவாலைகளையும் காப்பாற்ற முடியாதெனக் கண்ட தீயணைக்கும் படையினர், அருகிலிருந்த கட்டடங்களுக்குத் தீ பரவாமல் காப்பதில் முனைந்தனர்.

எனினும் இரண்டு சாயத் தொழிற்சாலைகள் இருந்த ஒரு கட்டடத்தில் தீப்பற்றி அரைகுறைச் சேதம் ஏற்பட்டது.

இரண்டரை மணி நேரம் முழுமுயற்சியுடன் தீயோடு போராடிய பிறகுதான், தீ அணைக்கப்பட்டது. நெசவாலைகளுக்கும் கட்டடங்களுக்கும் ஏற்பட்ட நஷ்டம் சுமார் ஏழு லட்சம் ரூபாய் இருக்குமென மதிப்பிடப் படுகிறது.

## 2. இந்தியாவுக்காகக் கட்டப்படும் இரண்டு கப்பல்கள்

பம்பாய்,
செப்டம்பர் 29உ 1954.

பத்தாயிரம் டன் எடையுள்ள இரண்டு கப்பல்கள் இந்தியாவுக்காக ஜெர்மனியில் ஹாம்பர்க் துறைமுகத்தி லுள்ள கப்பல் கட்டும் தொழிற்சாலையில் கட்டப்படு கின்றன. அவை இவ்வருடம் நவம்பர் மாதத்தில் கடலில் மிதக்க விடப்படும்.

இந்தியா நீராவிக் கப்பல் கம்பனியின் தலைவரான ஸர் ஏ. ராமசாமி முதலியார், நவம்பர் மாதம் 5-ஆம் தேதி ஹாம்பர்க் துறைமுகத்திலுள்ள ஹோவால்டு கப்பல் தொழிற்சாலையில் அந்தக் கப்பல்களைக் கடலில் செலுத்து வார். அந்தக் கப்பல்களுக்கு "இந்தியாவின் நம்பிக்கை" "இந்தியாவின் புகழ்" என்று பெயர் சூட்டப்படும். இவை இந்தியாவுக்கும் இங்கிலாந்துக்குமிடையே சாமான் களை எடுத்துச் செல்லும் வியாபாரக் கப்பல்களாக இயங்கும். அடுத்த வருஷம் ஜனவரி மாதத்தில் இவை முதன் முதல் இந்தியாவுக்கு வந்து சேரும்.

| | | |
|---|---|---|
| நெசவாலை | முனைந்தனர் | நம்பிக்கை |
| சேதமாயின | நஷ்டம் | சாமான் |
| விரைந்தன | டன் | இயங்கும் |

## அருஞ்பதவுரை

சேதமாயின - அழிந்தும் கெட்டும் போயின. விரைந்தன - வேகமாகச் சென்றன. முனைந்தனர் - முன்னின்று செய்தனர். டன் - 2240 ராத்தல் கொண்ட எடை.

## இலக்கணம்

1. தோன்றும், கருதி, பொருந்தாது, பிரித்து, காண்— இவைகளைப் பெயர்ச் சொற்களாக மாற்றி எழுது.

2. இவை ஒவ்வொன்றும் என்ன சொல் :—
திங்கள், வெளிச்சம், பார்த்தால், ஆற, உண்டு, இல்லை.

## கேள்விகள்

1. முதல் செய்தியிலிருந்து நீ தெரிந்துகொண்டதைப் பற்றி மூன்று வாக்கியங்கள் எழுது.

2. இரண்டாம் செய்தியில் குறிக்கப்படும் கப்பல்களின் பெயர்கள் யாவை? அவை எங்கே கட்டப்படுகின்றன? எந்த நாட்டுக்காகக் கட்டப்படுகின்றன?

# 10. விவேகானந்தர்



1. ஏறத்தாழ எழுபது ஆண்டுகளுக்கு முன் வங்க நாட்டில் கல்கத்தா நகரில் விசுவநாத தத்தர் என்னும் பெரியார் ஒருவர் இருந்தார். அவர் சிறந்த கல்விமான்; வக்கீல் தொழில் புரிந்து மிக்க பொருள் ஈட்டியவர். அவர் புவனேசுவரி என்னும் உத்தம நங்கையை மணந்து இல்லறம் நடத்திவந்தார். அவர்களுக்கு 1863-ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 12-ஆம் நாளில் ஒரு ஆண் மகவு பிறந்தது. பெற்றோர் அக்குழந்தைக்கு நரேந்திரநாதன் எனப் பெயரிட்டு அருமையாக வளர்த்து வந்தனர். நரேந்திர நாதரே பிற்காலத்தில் விவேகானந்தர் என்னும் பெயருடன் விளங்கினார்.

2. நரேந்திரர் இளம்பருவத்திலேயே சுறுசுறுப்பும் துடுக்கும் உடையவராக இருந்தார். அவர் செய்த குறும்புச் செயல்களுக்கு அளவே இல்லை. எனினும் அவ்

விளமையிலேயே சாதுக்களையும் வறியோர்களையும் கண்டால் அவர்களிடத்து மிக்க அன்பு காட்டுவர். அவர்கள் விரும்பிய பொருள் எதுவாக இருப்பினும் அதனை வீட்டினின்று எடுத்துக் கொடுத்துவிடுவர்.

3. நரேந்திரர் உரிய பருவத்தில் கல்வி பயிலத் தொடங்கினர். நரேந்திரரது தாயார் கல்வியறிவு உடையவராக இருந்தமையால் அவரே தம் மைந்தருக்கு முதன் முதலாகக் கல்வி பயிற்றுவித்தார்.

4. பின்பு நரேந்திரர் ஒரு நல்லாசிரியரை அடைந்து அவரிடம் கல்வி பயின்றனர். ஆசிரியர் பாடம் கற்பிக்கும் போது அவர் மிக்க கவனமாகக் கேட்பர். ஆயினும், அவர் அப்பொழுதெல்லாம் கண்ணை மூடிக்கொண்டிருப்பர். அதனால், ஆசிரியர் நரேந்திரரைத் 'தூங்கு மூஞ்சிப் பயல்' எனக் கருதிவந்தார். ஒரு முறை நரேந்திரர் அவ்வாறு கண்ணை மூடிக்கொண்டிருக்கும்போது ஆசிரியர் கோபங்கொண்டு அவரைத் தட்டி எழுப்பினர். நரேந்திரர் விழித்துப் பார்த்தார்; ஆசிரியர் கோபமாயிருப்பதையும் அதற்குக் காரணத்தையும் அறிந்து கொண்டார். தாம் தூங்கவில்லை என்பதை ஆசிரியருக்கு அறிவிக்க எண்ணி, அதற்குமுன் ஒரு மணி நேரமாக ஆசிரியர் சொல்லி வந்ததை யெல்லாம் ஒன்றுவிடாமல் அப்படியே ஒப்பித்தார். ஆசிரியர் நரேந்திரரது ஞாபக சக்தியையும் கவன மிகுதியையும் அறிந்து வியப்புற்றனர்.

5. நரேந்திரர் நாளடைவில் தமது தாய்மொழியாகிய வங்க மொழியையும் சம்ஸ்கிருதம், ஆங்கிலம் ஆகிய இவற்றையும் நன்கு கற்றுத் தேர்ச்சி பெற்றனர்; சிறந்த சொல்வன்மையும் உடையவரானர். அவருக்கு இசையிலும் நல்ல பயிற்சி உண்டு.

6. இத்தகைய கல்வியாளராகிய நரேந்திரர் கட வுளைப் பூசிப்பதிலும் தியானம் செய்வதிலும் மிகுந்த பற்றுடையவராக இருந்தார். ஆயினும், இந்து மதத்தின் அடிப்படையான உண்மைகளை அறியவேண்டும் என்னும் அவா அடிக்கடி அவர் மனத்தில் எழுந்தது. ஆதலால், இந்துசமய உண்மையைத் தமக்குத் தெரிவிக்கத் தக்க குருநாதனை எதிர்நோக்கி யிருந்தனர்.

7. அப்பொழுது கல்கத்தாவின் அருகேயுள்ள தட்சிணேசுவரம் என்னும் ஆலயத்தில் இராமகிருஷ்ண பரமஹம்சர் என்னும் ஒரு பெரியார் இருந்தனர். நரேந்திரர் அவரைப்பற்றிக் கேள்வியுற்று அவரிடம் சென்றுர்; அவர் பெருமையையும் அறிந்தார். இராம கிருஷ்ணரும் இவரது பக்குவநிலையை அறிந்து அருள் கூர்ந்து இவருக்கு உபதேசம் செய்து இவருக்கிருந்த ஐயங்களை யெல்லாம் போக்கினர். நரேந்திரரும் தமது ஐயம் நீங்கப்பெற்றுச் சிறந்த விவேகம் உடையவரா யினர். அதுமுதல் நரேந்திரருக்கு விவேகானந்தர் எனப் பெயர் வழங்கலாயிற்று.

8. விவேகானந்தர் கல்வியில் தேர்ச்சியுடையவரா யிருந்தமையோடு பி. ஏ. பட்டமும் பெற்று விளங்கினர். ஆகையால், அவர் மிக எளிதாக உத்தியோகம் பெற்று மிக்க பொருள் ஈட்டலாம். ஆயினும், அவர் மனம் அதிற் செல்லவில்லை. அவர் மத ஆராய்ச்சியிலும் தியானத்தி லும், தம் காலத்தைப் போக்க எண்ணினுர்; எல்லா மக்க ளுக்கும் இந்துசமய உண்மைகளை அறிவுறுத்தவேண்டும் என்று விரும்பினுர். ஆதலால், நமது விவேகானந்தர் துறவுக்கோலம் பூண்டு இந்திய நாட்டின் பல பகுதிகளி லும் சஞ்சாரம் செய்தார்; விரிவுரைகளாலும், உரையாட லாலும் மக்களுக்கு இந்துமதக் கொள்கைகளைப் புகட்டி

னர். இங்ஙனம், அவர் சுற்றுப்பிரயாணம் செய்தபொழுது நமது தமிழ் நாட்டிற்கும் வந்தார்.

9. அப்பொழுது, அமெரிக்காவில் 'சர்வமத மகா நாடு' நடைபெறப் போகும் செய்தி இங்குள்ள அறிஞர் சிலருக்குத் தெரிந்தது. அவர்கள் அந்த மகாநாட்டுக்கு இந்து சமய உண்மைகளை எடுத்துரைக்க வல்ல ஒருவரை அனுப்பவேண்டும் என்று விரும்பினர்; விவேகானந்த சுவாமிகளே அதற்குத் தக்கவரென அறிந்து அவரை அமெரிக்கா போகுமாறு வேண்டினர். சுவாமிகளும் அதற்கிணங்கவே, மிக விரைவில் வழிச் செலவுக்கு வேண்டிய பணம் சேகரிக்கப்பட்டது. குறித்த நாளில் விவேகானந்தர் பம்பாயிலிருந்து புறப்பட்டுக் கடல் கடந்து அமெரிக்காவை அடைந்தனர்.

10. அமெரிக்காவில் ஒரு பெரியார் நட்புச் சுவாமிகளுக்குக் கிடைத்தது. அதன் மூலம் அவர் சர்வமத மகாநாடு நடைபெறும் இடம் சென்றனர். மகாநாட்டுத் தலைவர் சுவாமிகளை வரவேற்று இருக்கை அளித்து உபசரித்தார். மகாநாடு தொடங்கியது. ஏறக்குறைய பதினாயிரம் மக்கள் விரிவுரைகளைக் கேட்கக் கூடியிருந்தனர். சிறந்த பிரசங்கியார் பலர் முறை முறையாக வந்து பேசினர். இறுதியில் விவேகானந்தரும் பேச அழைக்கப்பட்டார்.

11. அவர் எழுந்து நின்று பேசத் தொடங்கி, முதலில் 'அமெரிக்க நாட்டுச் சகோதரிகளே, சகோதரர்களே' எனச் சபையோரை விளித்தனர். அது கேட்டுச் சபையோர் அனைவரும் பெருமகிழ்ச்சிகொண்டு காது செவிடுபடும்படி கரகோஷம் செய்தனர். அதுவரையில் பேசியவர்கள் 'சீமாட்டிகளே, சீமான்களே', என்று தொடங்கினர்கள். ஆனால், விவேகானந்தரோ 'சகோதரிகளே,

சகோதரர்களே' என விளித்துத் தமக்குள் சகோதர பாவத்தை வெளிப்படுத்தினர். அதுவே சபையோர் அடைந்த பெருமகிழ்ச்சிக்குக் காரணம். விவேகானந்தர் இந்து சமயக் கொள்கைகளை எடுத்துத் தெள்ளத்தெளிய விளக்கினர். அவையோர் அனைவரும் மிகக் கவனமாகக் கேட்டுப் பரவசமடைந்தனர்.

12. சுவாமிகள் இரண்டாண்டுகள் அமெரிக்காவில் தங்கிச் சமயப் பிரசாரம் செய்தார். பின்னர், இங்கிலாந்து, ஜர்மனி முதலிய நாடுகளுக்கும் சென்று பல விரிவுரைகள் செய்து தமது தாய்நாடு திரும்பினர்.

13. விவேகானந்த சுவாமிகள் மேனாட்டில் சமயப் பிரசாரம் செய்து பெரும் புகழோடு தமது தாய்நாட்டுக்குத் திரும்பி வருகிறார் என்னும் செய்தி அறிந்த நம் இந்திய மக்கள் பெருமகிழ்வோடு சுவாமிகளை வரவேற்றனர். சுவாமிகள் கொழும்பில் இறங்கிப் பாம்பன், திருச்சி முதலிய ஊர்களின் வழியே சென்னை சென்றார். அங்குச் சில நாள் தங்கிப் பிறகு தமது சொந்த ஊராகிய கல்கத்தா அடைந்தனர்.

14. சுவாமிகள் கல்கத்தாவில் தமது சகோதர சீடர்களுடன் கலந்து ஆலோசித்துத் தமது குருநாதர் இராமகிருஷ்ணர் பெயரால் ஒரு மடம் நிறுவத் தீர்மானித்தார். பிற்காலத்திலும் மடம் நன்கு நடைபெறுதற்குரிய சட்டதிட்டங்களை வகுத்தார். சுவாமிகள் மடம் கட்டவேண்டுமென்ற தமது கருத்தை வெளியிடவே அவர் சீடர்களும் பிறரும் முன்வந்து தாராளமாகப் பொருளுதவி புரிந்தனர். கல்கத்தாவுக்கருகே கங்கை நதிக்கரையில் பேலூர் என்னும் சிற்றூரில் ஒரு பெரிய அழகிய மடம் கட்டப்பட்டது. அதுவே இப்பொழுது உலகத்தின் பற்பல பாகங்

களில் உள்ள இராமகிருஷ்ண மடங்களுக்கெல்லாம் தலைமை இடமாக விளங்குகிறது.

15. விவேகானந்தர் மீண்டும் ஒருமுறை மேல்நாடு சென்று சமயப் பிரசாரம் செய்து பல அறிஞர்களைச் சீடர்களாக்கித் தம் தாய்நாடு திரும்பினர்.

16. இங்ஙனம், நம் நாட்டிலும் பிறநாட்டிலும் மக்களுக்கு இந்துமத உண்மைகளைப் புகட்டி நல்வாழ்வு பெறச் செய்த சுவாமிகளின் வாழ்நாள் முடியுங்காலம் எய்தியது. சுவாமிகள் நான்காண்டுகளுக்கு முன்னரே தமது வாழ்நாள் இன்ன நாளில் முடியும் என அறிந்து வெளியிட்டிருந்தனர்; அவ்வண்ணமே, 1902-ம் ஆண்டு ஜுலை மாதம் நாலாம் நாளில் இவ்வுலக வாழ்வை நீத்தார்.

17. விவேகானந்த சுவாமிகள் இந்து மதத்தின் உண்மைக் கொள்கைகளை உலகமுழுதும் பரப்பிய பெரியார் ஆவர். அவர் மேற்கொண்ட கொள்கைகளுள் முக்கியமானவை; சாதி வேற்றுமை பாராட்டுதலாகாது. ஏழை மக்களுக்கு உதவி செய்தல் வேண்டும். மக்கள் அனைவருக்கும் கல்வி இன்றியமையாதது. மக்களில் ஒவ்வொருவரும் மனோதிடமும் உடல் நலமும் உடையவராக இருத்தல் வேண்டும். ஒவ்வொருவரும் நேர்மையான வஞ்சகமற்ற வழியில் தமது வாழ்க்கையை நடத்தல் வேண்டும். மக்கள் தமது தாய்மொழியிலும் தாய்நாட்டிலும் பற்றுடையவராக இருக்கவேண்டும். ஒவ்வொருவரும் பிற சமயத்தில் வெறுப்பின்றித் தத்தம் மதத்தின் உண்மைக் கொள்கைகளைக் கடைப்பிடித்தொழுக வேண்டும்.

| | | |
|---|---|---|
| மடம் | பூசிப்பது | ஐயம் |
| சீடர் | சாதுக்கள் | துடுக்கு |
| குருநாதன் | சுவாமிகள் | சேஷ்டை |
| பக்குவம் | நீத்தல் | சீமான் |

| | | |
|---|---|---|
| மகாநாடு | பிரசங்கி | விளித்தல் |
| பரவசம் | விரிவுரை | கல்வியாளர் |
| மேனுடு | பிரசாரம் | சபையோர் |
| இருக்கை | அறிவுறுத்தல் | உலகவாழ்வு |
| நிறுவுதல் | அடிப்படையான | ஞாபகசக்தி |
| சேகரித்தல் | கரகோஷம் | இந்துமதம் |
| வரவேற்றல் | தூங்குமூஞ்சி | துறவுக்கோலம் |

## அரும்பதவுரை

விவேகம் - அறிவு. பக்குவம் - தகுதி. சீடர் - மாணுக்கர். மகாநாடு - பெருங்கூட்டம். பூசிப்பது - வழிபாடு செய்வது. பிரசங்கி - பிரசங்கம் செய்வோர். பிரசங்கம் - விரிவுரை. விரிவுரை - ஒரு குறிப்பிட்ட பொருளேப்பற்றி விளக்கமாகப் பேசுதல். பரவசம் - கருத்து ஊன்றி விடுதல்; தன்னே மறந்துவிடுதல்.

## பயிற்சி

1. விவேகானந்தரின் பெருமையைப்பற்றி ஐந்து வாக்கியங்கள் எழுது.

2. துறவுக்கோலம், பிரசங்கம், மகாநாடு, ஞாபகசக்தி, சுற்றுப் பிரயாணம், தாராளமாக—இச்சொற்களேத் தனித்தனி வாக்கியங்களில் அமைத்துக் கூறு.

## இலக்கணம்

1. விவேகானந்தர் உத்தியோகத்தை விரும்பவில்லே—இவ் வாக்கியத்தில் விவேகானந்தர் உத்தியோகத்தை என்பன பெயர்ச்சொற்கள். ஆனுல், 'விவேகானந்தர்' என்ற சொல் கருத்தாப் பொருளில் வந்தது. 'உத்தியோகத்தை' என்பது செயப்படு பொருளில் வந்தது. இங்ஙனம் பொருள் வேறுபடுவது வேற்றுமை. வேற்றுமை எட்டு வகைப்படும். வேற்றுமையைக் காட்டும் குறியாக வருகின்ற சொல் வேற்றுமை உருபு ஆகும்

(1) முதல் வேற்றுமைக்குத் தனியாக உருபு இல்லே. பெயர்ச்சொல் யாதொரு மாறுதலும் அடையாமல் கருத்தாப் பொருளில் வரும்போது முதல் வேற்றுமை ஆகும்.

(உ - ம்.) விவேகானந்தர் உத்தியோகத்தை விரும்பவில்லே.—விவேகானந்தர்: முதல் வேற்றுமை.

(2) இரண்டாம் வேற்றுமை உருபு ஐ என்பது.

(உ - ம்.) விவேகானந்தர் தாய் மொழியை நன்கு கற்ருர். தாய்மொழியை: இரண்டாம் வேற்றுமை.

(3) மூன்ரும் வேற்றுமைக்கு ஆல், ஆன், ஒடு, ஓடு, கொண்டு, உடன் என்பன உருபுகளாம்.

(உ - ம்.) விவேகானந்தர் பெரும்புகழோடு தாய் நாடு திரும்பினர்—பெரும் புகழோடு : மூன்ரும் வேற்றுமை.

(4) நான்காம் வேற்றுமைக்கு உருபு கு என்பது.

(உ - ம்.) இராமகிருஷ்ணர் விவேகானந்தருக்கு உபதேசம் செய்தார்—விவேகானந்தருக்கு : நான்காம் வேற்றுமை.

2. பின்வரும் வாக்கியங்களில் உள்ள பெயர்ச்சொற்களுக்கு வேற்றுமை கூறு.

விவேகானந்தர் துறவை மேற்கொண்டார்.
சுவாமிகள் சீடர்களோடு ஆலோசித்தார்.
இவன் கூலிக்கு வேலை செய்கிருன்.
கந்தன் நாயைக் கல்லால் அடித்தான்.

## கேள்விகள்

1. விவேகானந்தர் பிறந்த ஊர், அவருடைய பெற்ரேரின் பெயர், குருவின் பெயர், அவர் வாழ்ந்த காலம் இவைகளைக் கூறு.

2. விவேகானந்தரிடம் இளமையிலேயே விளங்கிய குணங்கள் யாவை?

3. ஆசிரியர் அவரைத் 'தூங்குமூஞ்சிப் பயல்' என்று அழைக்கக் காரணம் என்ன?

4. விவேகானந்தர் என்னும் பெயர் எப்பொழுது உண்டாயிற்று?

5. விவேகானந்தர் எந்தெந்த நாடுகளுக்குச் சென்று வந்தார்? அங்கே அவர் செய்த வேலை யாது?

6. விவேகானந்தர் தம் குருவின் ஞாபகார்த்தமாகச் செய்துள்ள பணி யாது?

# 11. பஞ்சாயத்து

**[கண்ணனும் அவன் அண்ணனும் உரையாடல்]**

*[கண்ணனும் அவன் அண்ணனும் வீதிவழியாகப் போகும் போது ஒரு சத்திரத்தைக் காண்கிருர்கள்.]*

**கண்ணன் :** அண்ணு, ஏன் இந்தச் சத்திரத்தில் ஜனங்கள் கூட்டமாய் இருக்கிருர்கள்?

**அண்ணன்:** இங்கு, இன்று பஞ்சாயத்துக் கோர்ட்டு நடக்கிறது. அதனுல்தான் ஜனங்கள் கூட்டமாய் இருக்கிருர்கள்.

**கண்ணன் :** பஞ்சாயத்துக் கோர்ட்டு என்ருல் என்ன?

**அண்ணன் :** கோர்ட்டு என்ருல் உனக்குத் தெரியுமா?

**கண்ணன் :** தெரியுமே! அன்ரெருநாள் அப்பா எனக்குக் கோர்ட்டைக் காண்பித்து 'இதுதான் கோர்ட்டு, இங்கு வழக்குகளை விசாரித்து முடிவு செய்வார்கள்' என்று கூறினுரே.

**அண்ணன் :** சரி, இதுவும் அதுபோல வழக்குகளை விசாரித்து முடிபு கூறும் இடம்தான். அதனுல்தான் இதற்குப் பஞ்சாயத்துக் கோர்ட்டு என்று பெயர்.

**கண்ணன் :** அது சரி அண்ணு! இதற்குப் **பஞ்சாயத்துக்** கோர்ட்டு என்று ஏன் பெயர் வந்தது?

**அண்ணன் :** பஞ்சாயத்து என்பதற்கு ஐந்து பேர் அடங்கிய கூட்டம் என்று பொருள். 'பஞ்சாயம்' என்ற சொல்லே பஞ்சாயத்து என்று வழங்குகிறது. கோர்ட்டு என்பது ஆங்கிலச் சொல். அதைத் தமிழில் 'நீதிமன்றம்' என்று கூறலாம். கோர்ட்டில் பலவகை உண்டு.

அவை ஜட்ஜு கோர்ட்டு, முனிசீப்பு கோர்ட்டு முதலியன வாம். ஜட்ஜு என்னும் உத்தியோகஸ்தர் வழக்கு விசாரிக்கும் இடம் ஜட்ஜு கோர்ட்டு. முனிசீப்பு என்னும் உத்தியோகஸ்தர் வழக்கு விசாரிக்கும் இடம் முனிசீப்புக் கோர்ட்டு. இது பஞ்சாயத்தார் வழக்கு விசாரிக்கும் இடம். ஆதலால் இதற்குப் பஞ்சாயத்துக் கோர்ட்டு என்று பெயர். ஆயினும், பஞ்சாயத்தார் இப்போது ஐந்து பேராக மட்டும் இருப்பதில்லை. ஏழு பேர், ஒன்பது பேர் என்றிப்படி அதிகத் தொகையினராக உள்ளவர்களையும் பஞ்சாயத்தார் என்றே வழங்குகிறார்கள். ஆதலால், இக்காலத்தில் பஞ்சாயத்து என்பதற்குப் பலபேரடங்கிய சபை என்றே பொருள் கொள்ளவேண்டும்.

**கண்ணன் :** இவர்கள் என்ன விசாரணை செய்வார்கள் ?

**அண்ணன் :** இவர்கள் கொடுக்கல் வாங்கல்களில் ஐம்பது ரூபாய்க்கு உட்பட்ட சிறு வழக்குகளை விசாரிப்பார்கள். ஆனால் வாதி பிரதிவாதி இருவரும் சம்மதித்தால் இருநூறு ரூபாய்க்கு உட்பட்ட வழக்குகளையும் விசாரிக்க இவர்களுக்கு அதிகாரம் உண்டு.

**கண்ணன் :** இந்தப் பஞ்சாயத்துச் சபை எல்லா ஊர்களிலும் இருக்குமா ?

**அண்ணன் :** எல்லா ஊர்களிலும் உண்டு. ஆனால், நகரங்களில் பஞ்சாயத்துக் கோர்ட்டுகள் மட்டும் உண்டு. கிராமங்களில் ‘கிராமப் பஞ்சாயத்து’ என்று மற்றொரு சபையும் உண்டு.

**கண்ணன் :** அது என்ன அண்ணா ?

**அண்ணன் :** கிராமப் பஞ்சாயத்து என்பது கிராமத்தில் உள்ள பஞ்சாயத்து. அதுவும் பலபேர் அடங்கிய சபைதான். அதற்குப் பஞ்சாயத்து போர்டு என்று

பெயர். ஆனால், பஞ்சாயத்துக் கோர்ட்டுக்குள்ள வழக்கு விசாரணை செய்யும் அதிகாரம் இந்தப் பஞ்சாயத்துப் போர்டுக்கு இல்லை.

**கண்ணன் :** அப்படியானால், இந்தப் பஞ்சாயத்து எதற்காக ?

**அண்ணன் :** இந்தப் பஞ்சாயத்தார் சில முக்கியமான வேலைகளைக் கவனிக்கிறார்கள். கிராமத்திலுள்ள வீதிகள் சுத்தமாய் இருப்பதற்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்கிறார்கள். வீதிகளில் இராக்காலத்தில் விளக்கு எரியவும், ஜனங்களுக்குத் தண்ணீர்க் கஷ்டமில்லாமல் இருக்கக் கிணறுகள் வெட்டவும் ஏற்பாடு செய்கின்றார்கள். இவர்கள் ஆரம்ப பாடசாலைகள் வைத்து நடத்தலாம்; தொத்து நோய் பரவாமல் தடுப்பதற்கு வேண்டிய ஏற்பாடுகள் செய்யலாம். இன்னும் சுகாதாரத்துக்கு வேண்டிய எல்லாக் காரியங்களையும் செய்யலாம்.

**கண்ணன் :** இதற்கெல்லாம் பணம் வேண்டுமே ?

**அண்ணன் :** கிராமத்தார்களிடமிருந்து சிறு சிறு தொகை வரியாக வசூல் செய்வார்கள். சர்க்காரும் பண உதவி செய்வார்கள்.

**கண்ணன் :** இந்தப் பஞ்சாயத்தாரை நியமிப்பது யார் ? சர்க்காரா ?

**அண்ணன் :** பஞ்சாயத்தார்களைச் சர்க்கார் நியமிப்பது இல்லை. பஞ்சாயத்தில் உறுப்பினராக இருக்க விருப்பமுள்ளவர்களைத் தேர்தல் மூலமாக ஜனங்களே தெரிந்தெடுக்கிறார்கள். அந்தத் தேர்தலுக்குத்தான் ஆங்கிலத்தில் 'எலெக்ஷன்' என்று பெயர். பொதுமக்களே பஞ்சாயத்தின் தலைவரையும் தேர்ந்தெடுக்கிறார்கள்.

**கண்ணன் :** ஏன் அண்ணா இப்படிச்செய்ய வேண்டும் ? சர்க்காரே நியமித்தால் என்ன ?

**அண்ணன் :** ஜனங்களுடைய குறைகளும் அவர் களுக்கு வேண்டிய சௌகரியங்களும் ஜனங்களுக்குத் தானே நன்ருய்த் தெரியும். அதனுல், ஜனங்களின் சௌ கரியத்தில் அக்கரையுள்ளவர்கள் இத்தகைய பஞ்சா யத்தில் வரவேண்டுமென்றே தேர்தல் மூலமாகப் பஞ்சா யத்து அமைக்கப்படுகிறது.

**கண்ணன் :** இது நல்ல ஏற்பாடு அண்ணு ! இப்பஞ் சாயத்தார் எத்தனே வருஷம் உத்தியோகம் பார்ப் பார்கள் ?

**அண்ணன் :** இவர்கள் உத்தியோக காலம் மூன்று வருஷம். அந்தக் காலம் முடிந்தவுடன் மறு தேர்தல் நடக்கும். அதில் வெற்றி பெறுகிறவர்களே இன்ஞெரு மூன்று வருஷத்துக்குப் பஞ்சாயத்தார் ஆவார்கள். இம் மாதிரியே மும்மூன்று வருஷத்துக்கு ஒருமுறை பஞ்சா யத்துச் சபை அமைக்கப்படும்.

**கண்ணன் :** இவர்களுக்குச் சம்பளம் உண்டோ ?

**அண்ணன் :** சம்பளம் இல்லே ; அதனுல், மிகுந்த ஓய்வு நேரம் உள்ளவர்களேயாவது அல்லது பொது நலத்தில் அக்கரை உள்ளவர்களேயாவது பஞ்சயாத்துச் சபைகளுக்கு உறுப்பினராகக் தெரிந்தெடுத்தல் நலம். பஞ்சாயத்துச் சபையார் பொது மக்களின் மதிப்பைப் பெறுபவர்களாக இருக்கவேண்டும்.

**கண்ணன் :** சரி, அண்ணு, போவோம். (இருவரும் போகிருர்கள்.)

| | | |
|---|---|---|
| சத்திரம் | பஞ்சாயத்து | வாதி |
| தேர்தல் | தெரிந்தெடுத்தல் | பிரதிவாதி |
| அக்கரை | தொத்துநோய் | நீதிமன்றம் |
| உறுப்பினர் | ஏற்பாடு | கொடுக்கல் வாங்கல் |
| பொதுநலம் | சுகாதாரம் | சௌகரியம் |

## அரும்பதவுரை

அக்கரை - கருத்து. தொத்துநோய் - ஒருவரிடமிருந்து பலருக்கும் பரவக்கூடிய நோய் (அம்மை, வாந்திபேதி முதலியன.)

## பயிற்சி

உங்கள் ஊரிலுள்ள பஞ்சாயத்துக் கோர்ட்டு அல்லது பஞ்சாயத்துப் போர்டைப்பற்றி உனக்குத் தெரிந்ததைக் கூறு.

## இலக்கணம்

1. (1) ஐந்தாம் வேற்றுமையின் உருபுகள் இல், இன், நின்று, இருந்து என்பன.

(உ - ம்.) நான் வீட்டிலிருந்து வருகிறேன்—வீட்டிலிருந்து : ஐந்தாம் வேற்றுமை.

(2) ஆறும் வேற்றுமையின் உருபுகள் அது, உடைய என்பன.

(உ - ம்.) இது என்னுடைய புத்தகம்—என்னுடைய: ஆறும் வேற்றுமை.

(3) ஏழாம் வேற்றுமையின் உருபுகள் இல், இடம், கண் முதலியன.

(உ - ம்.) சத்திரத்தில் கூட்டம் அதிகம்—சத்திரத்தில்: ஏழாம் வேற்றுமை.

(4) எட்டாம் வேற்றுமையின் உருபுகள் பெயர்ச்சொல்லின் ஈறு திரிதல் மிகுதல் முதலியன.

எட்டாம் வேற்றுமை விளித்தற் பொருளில் வரும்.

[விளித்தல் - அழைத்தல், கூப்பிடுதல்] அதனுல், விளி வேற்றுமை என்றும் கூறப்படும்.

(உ - ம்.) தம்பீ, இங்கு வா—தம்பீ : எட்டாம் வேற்றுமை.

2. தடித்த எழுத்தில் உள்ள பெயர்ச் சொற்களுக்கு வேற்றுமை கூறு.

கோர்ட்டில் வழக்குகள் விசாரிக்கப்படும்.
அப்பா, இவர் யார் ?
இது யாருடைய பேனு ?
திருச்சியின் வடக்குத் திருவரங்கம்.

### கேள்விகள்

1. பஞ்சாயத்து என்ருல் என்ன ?
2. பஞ்சாயத்துக் கோர்ட்டாரின் வேலைகள் யாவை ?
3. பஞ்சாயத்துச்சபை எவ்வாறு ஏற்படுத்தப்படுகிறது ?
4. எத்தகையோரைப் பஞ்சாயத்துச் சபை உறுப்பினராகத் தேர்ந்தெடுத்தல் வேண்டும் ?
5. பஞ்சாயத்துக் கோர்ட்டாரின் வேலைகள் என்ன ?

# 12. உல்லாசப் பிரயாணம்

1. உல்லாசப் பிரயாணம் என்பது மாணவர்கள் ஆசிரியர் முதலியோரில் பலர் ஒன்று சேர்ந்து ஒரு ஊரிலிருந்து மற்றொரு ஊரிலுள்ள காட்சிகளைக் காணும் பொருட்டு உல்லாசமாகச் செல்லுதல். நாம் காணவேண்டிய இடம் தொலைவிலிருந்தால் இரயில்வண்டி மூலமாகவும் 'மோட்டார் பஸ்' மூலமாகவும் பிரயாணம் செய்யலாம்; சமீபத்தில் இருந்தால் கால் நடையாகச் செல்லலாம். பலர் ஒன்று சேர்வதால் பிரயாணம், உணவு முதலியவற்றிற்காகும் செலவு குறையும். பல செய்திகளைப் புத்தகத்தின்மூலம் அறிவதைக் காட்டிலும் விளக்கமாக உல்லாசப் பிரயாணத்தின்மூலம் நேரில் அறிந்துகொள்ளலாம்.

2. உல்லாசப் பிரயாணம் செய்வோர் சில கட்டுப்பாடுகளுக்கு அடங்கி நடப்பதெனத் திட்டம் செய்து கொள்ளவேண்டும். அப்பொழுதுதான் பிரயாணம் செம்மையாக நடைபெறும். பிரயாணக் கூட்டத்தினர் தங்களுக்குள் ஒருவரைத் தலைவராக ஏற்படுத்திக் கொள்ள வேண்டும். அவர் சொல்லுகின்றபடி மற்றவர்கள் நடக்க வேண்டும். வண்டியி லேறும்போதும் வண்டியிலிருந்து இறங்கும்போதும் ஒழுங்கு முறையைக் கைக்கொள்ள வேண்டும். தாம் செல்லும் இடங்களையும் காணும் காட்சிகளையும் அவ்வப்பொழுது குறிப்புப் புத்தகத்தில் குறித்துக் கொள்ளவேண்டும்.

3. திருச்சிராப்பள்ளியினின்று மதுரை சென்ற ஒரு உல்லாசப் பிரயாணக் கூட்டத்தினருள் ஒரு மாணவன் தான் எழுதிவைத்திருந்த குறிப்பைக் கொண்டு அப்பிரயாணத்தைப்பற்றிக் கூறுகிறான், கேளுங்கள் :

4. சென்ற வெள்ளிக்கிழமை இரவு 9-மணிக்கு மாண

வர்கள் முப்பத்தாறு பேரும் ஆசிரியர் நான்கு பேருமாக நாற்பது பேர் எங்கள் பள்ளிக்கூடம் வந்து சேர்ந்தோம். எங்கள் பிரயாணக் கூட்டத்துக்குத் தலைவராக எங்கள் தமிழாசிரியர் நியமிக்கப்பெற்றிருந்தார். அவர் பிரயாணக் கூட்டத்தினர் நடந்துகொள்ளவேண்டிய முறைகளைப் பற்றிச் சுருக்கமாகவும் விளக்கமாகவும் கூறினர். பின்னர் நாங்கள் அனைவரும் படுத்துறங்கினோம்.

5. விடியற்காலை மூன்று மணிக்கு எங்களை எழுப்பி விட்டனர். நாங்கள் எழுந்து காலைக்கடனை முடித்துக் கொண்டு திருச்சிக்கோட்டை இரயில் நிலையத்துக்குப் புறப்பட்டோம். புறப்படுவதற்கு முன் கூட்டத்தினர் அனைவரும் சரியாக இருக்கின்றனரா என்று தலைவர் கவனித்துக்கொண்டார். நாங்கள் $3\frac{3}{4}$ மணிக்கு இரயில் நிலையம் அடைந்தோம். இரயில் வண்டி நான்கு மணிக்கு வந்தது. அதில் ஏறித் திருச்சி 'ஜங்ஷன்' சென்றோம். நாங்கள் சென்ற வண்டி அங்கு நின்றுவிடக்கூடியது. ஆதலால், அதனின்று இறங்கி மதுரை போகும் வண்டியில் ஏறிக்கொண்டோம். வண்டி நாலரை மணிக்குப் புறப் பட்டது. அது மதுரைக்குக் காலை ஏழரை மணிக்குப் போய்ச் சேர்ந்தது. வண்டி மதுரைக்கு அருகே ஒரு பாலத்தின் மீது சென்றது. அப்பாலம் வையை யாற்றின்மீது கட்டப்பட்டுள்ளது என அறிந்து ஆற்றைக் கவனித்தோம். ஆறு சிறிய ஆறே; ஆற்றில் தண்ணீர் இல்லை. ஆனால் ஊற்றுக்கால்கள் பல இருந்தன. அவற்றில் ஊற்றுநீர் தெளிவாக ஓடிற்று. அதில்தான் மக்கள் தங்கள் ஆடைகளைத் தோய்த்துக் குளிக்கின்றனர்.

6. நாங்கள் மதுரை இரயில் நிலையத்தில் இறங்கி மதுரைத் தமிழ்ச் சங்கத்தை அடைந்தோம். நாங்கள் வருவதை முன்னரே எங்கள் தலைவர் மூலமாக அறிந்

திருந்த சங்க அமைச்சர் நாங்கள் தங்குவதற்குத் தக்க இடவசதி செய்திருந்தனர். நாங்கள் உடனே நீராடிச் சிற்றுண்டியருந்தி அங்கிருந்து புறப்பட்டுக் கால் நடையாக மதுரை வீதிகளின் வழியாகச் சென்று மீனாட்சி சுந்தரேசுவரர் கோயிலை அடைந்தோம். கோயில் மிகப் பெரியது. அது ஊரின் நடுவே அமைந்துள்ளது. கோயிலைச் சுற்றிலும் நான்கு சதுரமான வீதிகள் இருக்கின்றன. அவை சித்திரை வீதி, ஆவணி மூல வீதி, மாசி வீதி, வெளி வீதி என்பன. கோயிலின் நான்கு பக்கங்களிலும் நான்கு உயர்ந்த கோபுரங்கள் உள்ளன. கோயிலின் உள்ளே ஒரு பெரிய மண்டபமும் சிறிய குளமும் உள்ளன. மண்டபத்துக்கு ஆயிரக்கால் மண்டபம் என்றும் குளத்துக்குப் பொற்றாமரைக் குளம் என்றும் பெயர். நாங்கள் சுவாமி தரிசனம் செய்த பின்னர் வெளியே வந்தோம்.

7. கோயிலுக்கு எதிரே கீழ்த்திசையில், ஒரு மண்டபம் இருக்கிறது. அதனைப் பார்வை யிட்டோம். அதற்குப் புதுமண்டபம் என்று பெயர். மண்டபத்தைச் சுற்றிலும் தண்ணீர் நிரப்புவதற்காக ஒரு சிறு அகழ் அமைக்கப்பட்டுள்ளது. இதில் ஆண்டுதோறும் வைகாசி மாதத்தில் வசந்தோற்சவம் நடைபெறும் என்று அறிந்தோம். இம் மண்டபம் திருமலை நாய்க்கரால் கட்டப்பட்டதாம். மண்டபத்தின் நடுவில் உள்ள தூண்களில் திருமலை நாய்க்கர் உருவச்சிலையும் வேறு சில உருவங்களும் செதுக்கப்பட்டுள்ளன. புதுமண்டபத்தைப் பார்வையிட்டு முடிப்பதற்குள் மணி பன்னிரண்டாகி விட்டது. உடனே நாங்கள் எங்கள் இருப்பிடம் சென்று உணவருந்திச் சற்று இளைப்பாறினோம்.

8. பிற்பகல் இரண்டு மணியானவுடன் நாங்கள் ஒரு 'பஸ்' அமர்த்திக்கொண்டு வண்டியூர்த் தெப்பக்குளம்

சென்றோம். அது மதுரைக்குக் கிழக்கே இரண்டு மைல் தூரத்தில் உள்ளது. வண்டியூர் என்னும் கிராமத்தின் அருகே இருப்பதால் அதற்கு வண்டியூர்த் தெப்பக்குளம் என்று பெயர். குளம் மிக அழகிய தோற்றமுடையது. அது ஏறக்குறைய ஒரு மைல் சுற்றளவுள்ள ஒரு சதுர மான குளம். குளத்தின் மத்தியில் ஒரு மண்டபம் இருக் கிறது. மண்டபத்தைச் சுற்றிலும் மா, பலா, தென்னை முதலிய மரமடர்ந்த சோலை இருக்கிறது. அதன் நான்கு மூலையிலும் நான்கு சிறிய கோபுரங்கள் உள்ளன. அந்த மைய மண்டபத்தை ஒரு சிறு தீவு என்றே சொல்லலாம். இவ்வளவு அழகுடையதாகவும் பெரிதாகவும் உள்ள குளம் தென்னாட்டில் வேறு இல்லை எனக் கூறுகின்றனர். இதில் ஆண்டுதோறும் தை மாதத்தில் தெப்போற்சவம் நடை பெறும். இதனையும் திருமலை நாய்க்கரே உண்டாக்கினர்.

9. குளத்தைப் பார்வையிட்ட பின் சுமார் 3 மணிக் குப் பஸ்ஸிலேயே மீண்டும் மதுரைக்குச் சென்று, திருமலை நாய்க்கர் மஹாலை அடைந்தோம். அது மதுரை நகரின் தென் கிழக்குத் திசையில் உள்ளது. அதுவே திருமலை நாய்க்கர் வசித்த அரண்மனையாம். அதனைக் கட்டியவரும் திருமலை நாய்க்கரே. அது மரம் இரும்பு இவற்றின் சம்பந் தமில்லாமலே முற்றும் செங்கல்லாலும் சுண்ணம்பாலும் கட்டப்பட்ட ஒரு சிறந்த கட்டடம். அதன் வேலைப்பாடு மிகவும் பாராட்டத்தக்கது. மேல் தளம் முழுதும் பல வளைவு மச்சுகளாக அமைந்துள்ளது. இந்த மேற்பகுதி யைச் சுமார் 15 அடி சுற்றளவும் 40 அடி உயரமும் உள்ள பெரிய தூண்கள் தாங்கி நிற்கின்றன. இப்பொழுதும் இந்த மஹால் மிக்க சிறப்பும் பலமும் உள்ள புதிய கட்டடம்போல் தோன்றுகிறது. திருமலை நாய்க்கர் மஹாலின் காட்சி கண்ணுக்கினிய காட்சியாகும்.

10. மஹாலிலிருந்து நாங்கள் நான்கு மணிக்குப் புறப்பட்டுக் கால்நடையாக ஆவணிமூல வீதி வழியே எங்கள் இருப்பிடமாகிய மதுரைத் தமிழ்ச் சங்கத்தை அடைந்தோம். அங்குச் சற்று நேரம் தங்கியிருந்தோம். பின்னர்ச் சிற்றுண்டி அருந்தி அங்கிருந்து புறப்பட்டுக் கால்நடையாகச் சென்று மதுரைப் புகைவண்டி நிலையத்தை அடைந்தோம். அப்பொழுது மணி ஆறு. வண்டியும் தயாராக இருந்தது. எங்கள் தலைவர் எங்கள் கூட்டத்தின் எண்ணிக்கை சரியாக இருக்கிறதா என்று கவனித்துக்கொண்டார். நாங்கள் வண்டியில் ஏறினோம். உடனே வண்டி புறப்பட்டது. இரவு 9 மணிக்குத் திருச்சி ஜங்ஷன் வந்து வண்டி மாறி 9½ மணிக்குத் திருச்சிக் கோட்டை வந்து சேர்ந்தோம். வண்டியை விட்டிறங்கியவுடன் தலைவர் எங்கள் எண்ணிக்கையைக் கவனித்துக் கொண்டார். பின்பு நாங்கள் வெளியே வந்து அவரவர்கள் வீடு அடைந்தோம்.

| | | |
|---|---|---|
| தளம் | விளக்கம் | வேலைப்பாடு |
| வளைவு | எழுப்புதல் | ஒழுங்குமுறை |
| சோலை | சிற்றுண்டி | அவ்வப்பொழுது |
| அகழ் | சுண்ணும்பு | இளைப்பாறுதல் |
| மஹால் | கால்நடை | ஊற்றுக்கால் |
| திட்டம் | காலைக்கடன் | சங்க அமைச்சர் |
| சதுரம் | தோய்த்தல் | செதுக்கப்படல் |
| சுருக்கம் | இடவசதி | தெப்பக்குளம் |
| தொலைவு | சம்பந்தம் | எண்ணிக்கை |

## அரும்பதவுரை

மஹால் - பெரிய கட்டடம். சிற்றுண்டி - (சிறு + உண்டி). சிறிதளவாகிய உணவு. அகழ் - நீர் நிற்பதற்காகச் சுற்றிலும் வெட்டப்பட்டுள்ள பள்ளம்.

## பயிற்சி

1. நீ சென்றுள்ள ஏதாவது ஒரு உல்லாசப் பிரயாணத்தைப் பற்றிக் கூறு.

2. கால்நடை, உருவச்சிலை, கோபுரம், சோலை, சங்கம் - இச் சொற்களை வாக்கியங்களில் அமைத்துக் கூறு.

## இலக்கணம்

1. வேற்றுமை உருபு வெளிப்பட்டு நிற்றலே யன்றித் தொக்கு நிற்றலும் உண்டு. வேற்றுமை உருபு தொக்கு நிற்றல் வேற்றுமைத் தொகை என்று கூறப்படும். (தொக்கு நிற்றல் - மறைந்து நிற்றல்)

மதுரை சென்ற—என்பது மதுரைக்குச் சென்ற என்று விரியும். இதில் கு என்னும் நான்காம் வேற்றுமை உருபு மறைந்து நிற்கிறது.

3. வேற்றுமைத் தொகைகளை விரித்துக் கூறு :—

சிற்றுண்டி அருந்தினோம்.
இது கண்ணன் மாடு.
நாங்கள் பள்ளிக்கூடம் வந்து சேர்ந்தோம்.

## கேள்விகள்

1. உல்லாசப் பிரயாணம் என்றால் என்ன?

2. இப்பாடத்தில் வரும் பிரயாணத்தில் மாணவர்களும் ஆசிரியர்களும் எந்த ஊரிலிருந்து எந்த ஊருக்குச் சென்றார்கள்?

3. அவர்கள் என்னென்ன காட்சிகளைக் கண்டார்கள்?

4. உல்லாசப் பிரயாணத்தில் என்னென்ன ஒழுங்கு முறைகள் கைக்கொள்ளப்பட வேண்டும்?

# 13. செந்தமிழ் நாடு

1. செந்தமிழ் நாடெனும் போதினிலே—இன்பத்
தேன்வந்து பாயுது காதினிலே—எங்கள்
தந்தையர் நாடென்ற பேச்சினிலே—ஒரு
சக்தி பிறக்குது மூச்சினிலே.

2. நீலத் திரைக்கட லோரத்திலே—நின்று
நித்தம் தவஞ்செய் குமரியெல்லை—வட
மாலவன் குன்றம் இவற்றிடையே—புகழ்
மண்டிக் கிடக்கும் தமிழ்நாடு.

3. சிங்களம் புட்பகம் சாவகம்—ஆகிய
தீவு பலவினும் சென்றேறி—அங்குத்
தங்கள் புலிக்கொடி மீன்கொடியும்—நின்று
சால்புறக் கண்டவர் தாய்நாடு.

4. விண்ணை யிடிக்கும் தலையிமயம்—எனும்
வெற்பை யடிக்கும் திறனுடையார்—சமர்
பண்ணிக் கலிங்கத் திருள் கெடுத்தார்—தமிழ்ப்
பார்த்திவர் நின்ற தமிழ் நாடு.

5. சீன மிசிரம் யவனரகம்—இன்னும்
தேசம் பலவும் புகழ்வீசிக் கலை
ஞானம் படைத்தொழில் வாணிபமும்—மிக
நன்று வளர்த்த தமிழ் நாடு.

—பாரதியார்

| | | |
|---|---|---|
| குன்றம் | மாலவன் | புலிக்கொடி |
| திறன் | வெற்பு | சமர் |
| பார்த்திவர் | மிசிரம் | யவனரகம் |
| மீன்கொடி | சால்பு | மண்டி |

## அரும்பதவுரை

திறன் - வலிமை. வெற்பு - மலை. சமர் - போர். பார்த்திவர் - அரசர்.

## பயிற்சி

செந்தமிழ், தீவு, சக்தி, செழிப்பு—இச்சொற்களை வாக்கியங்களில் அமைத்துக் கூறு.

## இலக்கணம்

தடித்த எழுத்தில் உள்ள சொற்களுக்கு இலக்கணம் கூறு:—

புகழ் **மண்டிக்** கிடக்கும் தமிழ் நாடு.
**இன்பத் தேன்** வந்து பாயுது.
எங்கள் **தந்தையர் நாடு**.

## கேள்விகள்

1. தமிழ் நாட்டின் எல்லைகள் யாவை?

2. தமிழர் எங்கெங்கு தம் கொடிகளை நாட்டினர்?

3. தமிழ் மன்னர் எங்கெங்கு படையெடுத்துச் சென்று வெற்றி கொண்டனர்?

# 14. வானொலி



1. நாம் பேசுகின்றோம். எதற்காக நாம் பேசுகின்றோம்? நாம் பேசுதல் நமது கருத்தைப் பிறருக்குத் தெரிவிப்பதற்காகவே. நமது வாயினின்று பேச்சொலி தோன்றிப் பல திசைகளிலும் சென்று அங்கங்குள்ளோர் காதுகளில் விழுகின்றது. அவர்கள் நமது கருத்தை அறிந்து கொள்ளுகின்றனர்.

2. ஒலி காற்றின் மூலமாகச் செல்லுகின்றது. அவ்வாறு செல்லும்போது நீரலைகள் போலச் செல்லும். ஒரு குளத்தில் ஒரு கல்லைப் போட்டால் நீர் அசைகிறது. நமது கையினாலும் தண்ணீரை அசைக்கலாம். தண்ணீர் அசையும்போது அந்த அசைவின் ஆற்றலால் அலை உண்டாகும். அந்த அலையிலிருந்து இன்னொரு அலையும் அதிலிருந்து மற்றொரு அலையுமாக இங்ஙனம் பல அலைகள் உண்டாகும். இவ்வலைகள் ஒன்றினால் ஒன்று தள்ளப்பட்டுக் குளத்தின் கரையை மோதுகின்றது.

இவ்வண்ணமே ஒலியும் அலைகளாகச் சென்று, கேட்போர் காதுகளில் விழுகின்றது. தண்ணீர் அலை தோன்றிய இடத்திலிருந்து தூரத்தில் செல்லச் செல்ல அசைவு குறைந்து கடைசியில் இல்லாமலே போய்விடும். அதே போல ஒலி அலையும் தூரச் செல்லச் செல்ல அசைவு குறைந்து கடைசியில் இல்லாமலே போய்விடும். அதனால் தான் சமீபத்தில் உள்ளவர்களுக்கு ஒலி நன்ருகக் கேட்கிறது. சிறிது தூரத்தில் உள்ளவர்களுக்கு ஒலி குறைந்து விடுகின்றது; மிகவும் தொலைவில் உள்ளவர்களுக்கு ஒலியே கேட்பதில்லை.

3. ஆனால், தற்காலத்தில் பல நூறு மைல்களுக்கு அப்பாலுள்ள ஒருவர் பேசுகின்ற ஒலி நமது காதில் விழுவதற்கு ஏதுவான கருவிகள் உண்டாக்கப்பட்டுள் ளன. அவ்வொலி ஆகாசமார்க்கமாய் வருவதால், அதனை 'ஆகாச வாக்கு' அல்லது 'வான் ஒலி' என்று கூறலாம். இதுதான் 'ரேடியோ' என்று கூறப்படுவது.

4. நாம் தொலைவிலுள்ளவர்களுக்குச் செய்தி தெரிவிக்க வேண்டுமானல் தபால் மூலமாகக் கடிதம் அனுப்புகின்ருேம். செய்தியை மிக விரைவில் தெரிவிக்க வேண்டுமானல் தந்தி அடிக்கிருேம். தந்தி என்பது கம்பி. ஒரு தந்தி நிலையத்திலிருந்து, கம்பியின் மூலமாக, நமது செய்தியைத் தெரிவிக்கும் ஒலிக்குறிகள் மற்ருெரு தந்தி நிலையத்திற்கு அனுப்பப்படும். அத்தகைய தந்திக் கம்பிகள் புகைவண்டிப் பாதைகளில் கம்பங்களின்மேல் நீளமாக அமைக்கப்பட் டிருப்பதை நாம் காணலாம்.

5. தந்தி மூலமாகத் தொலைவில் உள்ளவர்களுக்குச் செய்தி அனுப்பும் உபாயம் ஏறத்தாழ நூறு ஆண்டுகளுக்கு முன் கண்டுபிடித்து அமைக்கப்பட்டது. இந்த அமைப்புக்கு ஆங்கிலத்தில் 'டெலிகிராப்' என்று பெயர்.

ஐம்பது ஆண்டுகளுக்கு முன் இன்னொரு கருவி கண்டு பிடிக்கப்பட்டது. அதன் மூலமாக ஒருவர் பேசும் பேச்சையே கம்பியின் மூலமாகத் தொலைவிலுள்ள மற்றொருவர் கேட்கலாம். இதற்கு 'டெலிபோன்' என்று பெயர். அதன் பிறகுதான் முன் கூறிய 'ரேடியோ' என்னும் கருவி தோன்றியது. அதன் மூலமாக மிகத் தொலைவிலுள்ள ஒருவர் பேசும் ஒலியும் பாடும் பாட்டும் கம்பியில்லாமலே ஆகாயவழியாக வந்து நமது காதில் விழும்.

6. இந்த வியக்கத்தக்க ஏற்பாட்டுக்கு வேண்டிய கருவிகளை ஆராய்ந்து அமைத்தவர் இத்தாலி தேசத்தில் வாழ்ந்த 'மார்க்கோனி' என்னும் கலைஞர். அவர் புகழ் உலகம் உள்ள அளவும் அழியாது.

7. இனி, இந்த வானொலி சம்பந்தப்பட்ட கருவிகளின் அமைப்பைக் கவனிப்போம். பேச்சொலியைக் கிரகித்து மின்சாரஅலை ஆக்குதற்கு ஒரு கருவி உண்டு. அதற்கு 'மைக்ரோபோன்' என்று பெயர். இக்கருவியால் ஒலி அலைகள் மின்சார அலைகளாக மாற்றப்படுகின்றன. இந்த மின்சார அலைகள் ஏறத்தாழ 200 அடி உயரமுள்ள கம்பங்களின் உச்சியிலிருந்து வான் வழியே எல்லாத் திசைகளிலும் செலுத்தப்படுகின்றன. இத்தகைய கம்பங்களின் அமைப்புக்கு 'ஏரியல்' என்று பெயர். இந்தக் கம்பங்களிலிருந்து ஒலி எல்லாப் பக்கங்களிலும் பரப்பப் படுகின்றதல்லவா ? இங்ஙனம் ஒலி பரப்புதலுக்குப் 'பிராட்காஸ்டிங்' என்று பெயர்.

8. மின்சாரம் என்பது ஒரு அற்புதமான சக்தி. மின்சார சக்தி மிக விரைந்து செல்லக்கூடியது என்பதை ஒரே நிமிடத்தில் கம்பிகளின் மூலமாக ஆயிரக்கணக்கான மின்சார விளக்குகள் ஏற்றப்படுவதைக் கொண்டு நாம் எளிதில் அறிந்துகொள்ளலாம்.

9. ஆனால், மேற்கூறிய மின்சார அலைகளோ வானின் வழியே செல்லுவதால் ஒரு செகண்டிற்கு 186000 மைல் வீதம் செல்லுகிறது. இவ்வண்ணம் செல்லும் மின் அலைகளை இழுப்பதற்கும், மீண்டும் ஒலி அலைகளாக மாற்றி நம் காதில் விழும்படி செய்வதற்கும் கருவிகள் உண்டு. மின்சார அலைகளை இழுப்பதற்கு உரிய கருவி ஏறத்தாழ 30 அடி உயரமுள்ள கம்பத்தின் உச்சியில் அமைக்கப்பட்ட கயிறுபோன்ற கம்பியே. இதற்கும் 'ஏரியல்' என்றே பெயர். ஒலி அலைகளாக மாற்றி அவ் வொலியைப் பெருக்கி நமது காதில் விழுமாறு செய்வதற் குரிய கருவிகள் ஒரு பெட்டி போன்ற அமைப்பாக இருக் கும். இதற்கு 'ரிசீவிங் செட்' என்று பெயர். இத்தகைய கருவிகள் உள்ள இடத்தில், வான்வழியாக வரும் மின் அலைகள் ஒலி அலைகளாக மாறி நமது காதில் விழு கின்றன. அப்பொழுதுதான் தொலைவிலுள்ளவர் பேசு கின்ற பேச்சையும் பாடுகின்ற பாட்டையும் நாம் கேட் கின்றோம்.

10. நமது இந்தியாவில் சென்னை, பம்பாய், கல் கத்தா, டில்லி, மைசூர், லாகூர், லக்ஷ்மணபுரி, திருச்சி முதலிய பெரிய நகரங்களில் ஆகாய ஒலிபரப்பும் நிலை யங்கள் நமது அரசாங்கத்தாரால் அமைக்கப்பட்டுள்ளன. அந்த நிலையங்களில் மைக்ரோபோன் உள்ள இடத்தி லிருந்து ஒருவர் பேசும் பேச்சும், பாடும் பாட்டும் பல திசைகளிலும் செல்லுகின்றன. அவ்வாறு செல்லும்போது எந்தெந்த ஊரில் எவ்வெவ்விடங்களில் அவ்வொலிகளை வாங்கும் கருவிகள் அமைக்கப்பட்டுள்ளனவோ அங்கெல் லாம் அப்பேச்சையும் பாட்டையும் கேட்கலாம். மின்சார அலைகள் ஒரு கணத்தில் லட்சக்கணக்கான மைல் தூரம் செல்வதால், எந்த நிமிடத்தில் ஒரு நிலையத்

தினின்று ஒலி கிளம்புகின்றதோ கிட்டத்தட்ட அதே நிமிடத்தில் அவ்வொலியை மற்ற இடங்களிலும் கேட்கலாம்.

11. இந்த வானொலி பரப்பும் கருவியினால் ஏற்பட்டுள்ள நன்மைகள் பலவாகும். ஆயிரக் கணக்கான மைல்களுக்கு அப்பாலுள்ளவர்கள் பேசுவதையும் பாடுவதையும் அதே நிமிடத்தில் பல ஊர்களில் உள்ள மக்கள் கேட்டு மகிழ்கின்றனர். பல முக்கியமான செய்திகள் ஒரே காலத்தில் பல ஊர்களுக்கு மிக விரைவில் அறிவிக்கப்படுகின்றன. நடுக் கடலில் செல்லும் கப்பல்களில் உள்ளோரும் மற்ற இடங்களிலிருந்து பேசும் பேச்சையும் மற்றச் செய்திகளையும் அறிந்து கொள்ளலாம். தங்கள் செய்திகளையும் நிலப்பகுதியில் இருப்போருக்கு அறிவிக்கலாம்.

12. பெரிய நகரங்களில் பலர் திரளாக இருந்து கேட்கத்தக்க இடங்களில் வானொலி வாங்கும் கருவிகள் வைக்கப்பட்டுள்ளன. சிலர் தமது சொந்தச் செலவில் தமது இருப்பிடத்திலேயே இக்கருவிகளை வைத்து இன்னிசைப் பாட்டுக்களைக் கேட்டின்புறுகின்றனர். கிராம மக்களும் இந்த இன்பம் அனுபவிக்குமாறு கிராமங்களில் இக்கருவிகளை அமைக்க ஏற்பாடு செய்யப்பட்டு வருகின்றது. ஏறத்தாழ முந்நூறு ரூபாய்ச் செலவில் யாரும் வானொலி வாங்கும் கருவியைத் தங்கள் தங்கள் இடத்தில் அமைத்துக் கொள்ளலாம்.

| | | |
|---|---|---|
| அலை | பேச்சொலி | ஆகாசவாக்கு |
| அசை | தந்திநிலையம் | நடுக்கடல் |
| வானொலி | மின்சாரம் | மார்க்கம் |

## அரும்பதவுரை

மார்க்கமாக - வழியாக. ஒலி - ஓசை; சத்தம். வான் - ஆகாயம்.

## பயிற்சி

பின்வரும் வாக்கியங்களை முடி.

1. மின்சாரம் என்பது ——.
2. அசைவின் ஆற்றலால் ——.
3. அலைகள் தூரச் செல்லச் செல்ல ——.
4. ஒலி ஆகாச மார்க்கமாய் வருவதால் ——.

## இலக்கணம்

கீழ்க்காணும் வாக்கியங்களில் தடித்த எழுத்தில் உள்ள சொற்களுக்குத் திணை, பால், எண், இடம், வேற்றுமை கூறு:

1. **கண்ணனுக்கு** ரேடியோ நிலையத்தில் வேலை.
2. **சுந்தரி** இன்று ரேடியோவில் பாடினாள்.
3. **பலர்** கூட்டமாக நின்று வானொலியைக் கேட்கிறார்கள்.

## கேள்விகள்

1. ஒருவர் பேசும் பேச்சொலி மற்றவர்களுக்கு எவ்வாறு கேட்கிறது?

2. 'மைக்ரோபோன்' என்று எதற்குப் பெயர்?

3. ஆகாயத்தில் செல்லும் வானொலியைப் பற்பல இடங்களில் உள்ளவர்கள் கேட்டறிவது எவ்வாறு?

4. மின்சாரம் என்பது என்ன? அது எவ்வாறு வானொலிக்கு உதவி செய்கிறது?

5. வானொலி நிலையங்கள் ஏற்பட்டதால் விளையும் நன்மைகள் யாவை?

# 15. உதயணன் சிறைப்படல்

1. பல நூற்றாண்டுகளுக்கு முன் நமது பரத கண்டத்தில் வத்தவ நாட்டின் தலைநகரான கௌசாம்பியில் சதானிகன் என்னும் அரசன் செங்கோல் செலுத்தி வந்தான். அவன் சேதிநாட்டு மன்னனாகிய சேடகன் என்பவளது மகள் மிருகாவதியை மணந்து இல்லறத்தை மேற்கொண்டு இனிது வாழ்ந்தனன்.

2. மிருகாவதி கருப்பமுற்று ஒரு ஆண் மகவை ஈன்றாள். அக்குழந்தை சூரியன் உதயமாகும்பொழுது பிறந்தமையால் அதற்கு உதயணன் என்னும் பெயர் வைக்கப் பெற்றது. உதயணன் பிறைமதிபோல் வளர்ந்து உரிய காலத்தில் கல்வி பயிலத் தொடங்கிப் பலவகைக் கலைகளிலும் தேர்ச்சி பெற்றான். இன்னும், பிரமசுந்தரர் என்னும் முனிவர்பால் இசைப் பயிற்சி பெற்று யாழ் வாசிக்கவும் கற்றுக்கொண்டான். அம்முனிவர், உதயணன் யாழ்ப் பயிற்சியில் தேர்ச்சியுற்றதை அறிந்து மகிழ்ந்து, யானை முதலிய மிருகங்களையும் வயப்படுத்தக்கூடிய கோடபதி என்னும் பெயருள்ள யாழை அவனுக்களித்தார்.

3. ஒரு நாள் உதயணன் அந்த யாழோடு காடு சென்றான். அங்கு மிக்க வலிமையும் தெய்வத் தன்மையும் உடைய ஒரு பெரிய யானை பல யானைகளுடன் நிற்பதைக் கண்டு தன் யாழை வாசித்தான். யாழிசையைக் கேட்ட அப்பெரிய யானை இசையில் மயங்கி, உதயணன் அருகே வந்து அன்பு பாராட்டி அடங்கி நின்றது; அவன் ஏவிய தொழில்களைச் செய்தது. உதயணன் அதன் மேலேறித் தன் இருப்பிடம் அடைந்தனன். தெய்வ யானையும் அவனுக்குரிய பணிகளைச் செய்து வந்தது. சிலநாள் சென்ற பின்னர் அந்த யானை ஒரு நாள் இரவில் உத

யணன் கனவில் தோன்றி, '' என் மேல் பாகரை ஏற்றினாலும் என்னைத் தோற்கயிற்றால் கட்டினாலும் நான் உண்பதற்கு முன் நீ உண்டாலும் உன்னை விட்டு நீங்கி விடுவேன் '' என்று கூறியது. உதயணன் அந்நாள் முதல் மேற்கூறிய மூன்று தவறுகளும் நேராமல் கவனமாக நடந்து வந்தான்.

4. உதயணன் தந்தையாகிய சதானிகன் உலக வாழ்க்கையில் வெறுப்புற்று அரசாட்சியைத் தன் மைந்தன்பால் ஒப்பித்துவிட்டுத் தவஞ் செய்யக் காடடைந்தான். உதயணனும் வத்தவ நாட்டரசனாகிக் கௌசாம்பி நகரிலிருந்து இனிதாக அரசாட்சி புரிந்து வந்தான்.

5. உதயணனுக்கு யூகி என்னும் பெயருள்ள நண்பன் ஒருவன் உண்டு. அவன் பிரமசுந்தர முனிவரின் புதல்வன்; உதயணனுடன் கல்வி பயின்றவன்; சிறந்த மதியூகி; உதயணனிடம் அளவற்ற அன்புடையவன். உதயணன் அவனைத் தன் உயிர்போலக் கருதி வந்தான்; அதனோடு தன் முதலமைச்சனாகவும் நியமித்திருந்தான். ஆயினும் உதயணன் தன் மாமனாகிய சேதி நாட்டரசன் தவத்தினை மேற்கொண்டானாதலின் அந்நாட்டுக்கு யூகியை அரசனாக்கினன். யூகியும் சேதி நாட்டை வைசாலி என்னும் நகரத்திலிருந்து நன்கு ஆண்டு வந்தான்.

6. ஒரு நாள் உதயணன் பசி மிகுதியால் தெய்வ யானைக்கு உணவளிப்பதற்கு முன் தான் உணவருந்தி விட்டான். அதனை யறிந்த யானை உடனே அவனை விட்டு நீங்கித் தன்னிடம் சென்றது. உதயணன் தான் செய்த பிழையை உணர்ந்து வருந்தினான். அவன் தன் யாழை வாசித்தும் தெய்வ யானை வராமையால் மிக்க மனக்கவலை யடைந்தனன்; தன் பரிசனங்களைப் பல

இடங்களுக்கும் அனுப்பி அதனைத் தேடச் செய்தான்; தானும் யாழுங் கையுமாக நாள்தோறும் காடுகளுக்குச் சென்று அதனைத் தேடித் திரிவானாயினன்.

7. அவந்தி நாட்டில் உச்சயினி நகரத்தில் **பிரச்சோதனன்** என்னும் மன்னன் அரசு புரிந்து வந்தான். அவன் பேராற்றல் உடையவன்; சிறந்த வீரன். சிற்றரசர் பலரும் தனக்குக் கப்பம் கட்டிவரத் தான் ஒரு சக்கர வர்த்தியாக விளங்கினான். பிரச்சோதனனுக்கு அவள் மனைவி பதுமகாரிகை என்பவளிடம் **வாசவதத்தை** என்னும் பெண் ஒருத்தி உதித்தாள். அவள் சகல நற்குணங்களும் பொருந்திச் சிறந்த அழகுடையவளாக வளர்ந்து வந்தாள்.

8. மன்னர் மன்னனாகிய பிரச்சோதனன் ஒரு நாள் தன் அமைச்சரை நோக்கி, "எல்லா அரசர்களும் கப்பம் செலுத்தி வருகின்றார்களா?" என விசாரித்தனன். அவர்கள் "வத்தவ நாட்டரசனும் சேதி நாட்டரசனும் வழக்கப்படி கப்பம் செலுத்தவில்லை" என்று தெரிவித்தார்கள். அதனை அறிந்த பிரச்சோதனன் வெகுண்டு "உடனே அவர்களைப் பிடித்து வந்து விசாரிக்க வேண்டும்" என்று கூறினன்.

9. அப்பொழுது பிரச்சோதனனுடைய முதலமைச்சனாகிய **சாலங்காயன்** என்பவன் அவனை நோக்கி, "அரசே, வத்தவ நாட்டரசனாகிய உதயணன் சிறந்த வீரன். அவனுக்கு ஒரு தெய்வ யானையின் துணை உண்டு. பராக்கிரமசாலிகளான மந்திரிகளும் சேனா வீரரும் அவனுக்குத் துணையாக இருக்கிறார்கள். ஆதலால், அவனை வெல்லுதல் அரிது. வைசாலி நகரத்தரசனான யூகியும் வெல்லுதற்கு அரியவன். உதயணனும் யூகியும் சிறந்த நண்பராதலால் ஒருவர்க்கொருவர் துணை புரிவர். ஆகை

யால், யூகி உதயணனுக்குத் துணை புரியாதவாறு முதலில் ஒரு படையை யனுப்பி யூகியோடு போர் தொடங்க வேண்டும். பின்பு, தெய்வ யானையைக் காணாது வருந்திக் காட்டில் அலைந்து கொண்டிருக்கும் உதயணனை ஒரு எந்திர யானையின் துணைகொண்டு பிடித்து விடலாம்'' என மொழிந்தான்.

10. பிரச்சோதனனும் இவ்வேற்பாட்டுக்கு உடன்பட்டு யூகியுடன் போர் செய்வதற்கு ஒரு பெரிய சேனையை அனுப்பினான். பின்னர், சிறந்த சிற்பிகளைக் கொண்டு உயிருள்ள யானைபோல ஒரு பெரிய எந்திர யானை செய்



உதயணன் சிறைப்படல்

வித்து, அதன் வயிற்றில் ஆயுதபாணிகளாகத் தொண்ணூற்றுறு வீரர்களை இருக்கும்படி செய்தான்; இன்னும், அதன் கால்களிலும் கையிலும் பல போர்க்கருவிகளை

வைத்து அதனை அனுப்பினன். சாலங்காயனும் பல படை வீரர்களும் அதன் பின்னே சென்றனர்.

11. முன் வைசாலி நகரம் சென்ற சேனைகளுக்கும் யூகிக்கும் பெரும்போர் மூண்டுவிட்டது. உதயணன் தெய்வ யானையைத் தேடிக்கொண்டிருக்கும் காட்டின் நடுவில் எந்திர யானை நீலமலை போல் சென்று உலாவியது. அதனை அறிந்த உதயணன் தன் யாழுடன் அவ்விடத்தை அடைந்து யானையைக் கண்டான். கண்டவன் அதனைத் தனக்குப் பணி செய்த தெய்வ யானையாகவே கருதி மிக மகிழ்ந்து அதனருகிற் சென்று இனிமையாக யாழை வாசித்தான். அப்பொழுது எந்திர யானை யாழிசையில் விருப்பங்கொண்டது போல் அவன் எதிரில் நின்றது. உதயணனும் மிக்க மகிழ்ச்சியுடையவனாய்த் தன்னை மறந்து நின்றான்.

12. உடனே, யானையின் உள்ளே இருந்த வீரர்கள் திடீரென வெளியே வந்து போர்செய்யத் தொடங்கினார்கள். அதைக் கண்ட உதயணன் 'இது வஞ்சகர் செயலாயிற்றே!' எனப் புன்முறுவல்கொண்டு, அவர்கள்முன் கம்பீரமாக நின்றான். வீரர்கள் அவனைத் தாக்கத் தொடங்கவே அவன் தன் வாளால் அத்தனை பேரையும் கொன்றொழித்தான். பின்பு, மறைந்திருந்த சேனைகள் உதயணனைத் தாக்கின. அவன் அவைகளைத் தன் வாளால் முறை முறையாகக் கொன்று வரும்பொழுது ஒரு யானையின் கொம்பிற்பட்டு வாள் ஒடிந்தது. ஆதலின் ஆயுதமின்றி உதயணன் நின்றுகொண்டிருந்தான். அப்பொழுது அவனைப் பிடித்தற்குச் சாலங்காயன் முதலியோர் சூழ்ந்துகொண்டார்கள். உதயணன் நிகழ்ந்தவற்றை ஓர் ஓலையில் எழுதி அதனை யூகியினிடம் கொடுக்கு

மாறு தம் நண்பன் ஒருவனிடம் அனுப்பிவிட்டுத் தான் பகைவர் வசமாயினன்.

13. சாலங்காயன் உதயணனைத் தன் மேலாடையால் கட்டிச் சிறைப்படுத்தி ஒரு தேர்மேல் ஏற்றிக்கொண்டு உச்சயினி நகர் சென்று அரசனுக்குச் செய்தி அறிவித்தான். பிரச்சோதனனும் உதயணனுக்கு விலங்கிட்டு அவனைச் சிறைச்சாலையில் அடைக்கச் செய்தான்.

14. ஆயினும், யூகி செய்த பற்பல அரிய சூழ்ச்சிகளினால், பிரச்சோதனன் தான் செய்த வஞ்சகச் செயலுக்கு நாணமுற்று உதயணனைச் சிறையினின்று விடுவித்துச் சிறப்புச் செய்தான்; மேலும், பிரச்சோதனன் மகள் வாசவதத்தையை உதயணன் மணம் புரிந்து கொண்டான்.

| | | |
|---|---|---|
| பணி | நீலமலை | மயங்குதல் |
| யாழ் | நேராமல் | வயப்படுதல் |
| பாகன் | புன்முறுவல் | வஞ்சகச் செயல் |
| மதியூகி | மேலாடை | பராக்கிரமசாலி |
| கப்பம் | நாணம் | எந்திரயானை |
| ஏறுதல் | பரிசனங்கள் | ஆயுதபாணி |

## அரும்பதவுரை

புன்முறுவல் - சிறுநகை, வாய்திறவாமல் சிரித்தல். கப்பம் - சிற்றரசர்கள் பெரிய அரசர்களுக்குச் செலுத்தும் பொருள். மதியூகி - அறிவிற் சிறந்தவன். ஏவுதல் - கட்டளையிடுதல். பராக்கிரமம் - வலிமை. பாணி - கை. நாணம் - வெட்கம். பணி - வேலை.

## பயிற்சி

1. உயிர் போல் கருதி, பிறைமதி போல், ஆயுதபாணி, வயப்படுத்தல், செங்கோல்—இவைகளைத் தனித்தனி வாக்கியங்களில் அமைத்துக் கூறு.

2. உயிர்த்தோழர்கள் எவ்வாறு நடந்து கொள்வார்கள் என்பதைப்பற்றி மூன்று வாக்கியங்கள் கூறு.

3. உயிர்த்தோழன், வஞ்சகத்தால், வயப்படுத்துவான், மயங்குவர், நாணம்—இச்சொற்களைப் பின்வரும் வாக்கியங்களில் பொருத்தமாகச் சேர்த்துப்படி :

யூகி உதயணனின் —.
உதயணன் இசையினால் மிருகங்களையும் —.
ஜால வித்தையில் மக்கள் —.
பிரச்சோதனின் — உதயணன் சிறைப்பட்டான்.
தம் குற்றத்தை உணர்வோர் — அடைவார்கள்.

## இலக்கணம்

1. உதயணன் சிறந்த வீரன். அவனை வெல்லுதல் இயலாது. இவ்வாக்கியங்களின் பயனிலைகளைக் கவனி. முதல் வாக்கியத்தில் வீரன் என்பது பயனிலை. அதாவது வீரனாவான் என்பது பொருள். இரண்டாவது வாக்கியத்தில் இயலாது என்னும் வினைமுற்றே பயனிலையாக வந்துள்ளது.

2. பின்வரும் வாக்கியங்களில் உள்ள பயனிலைகளைக் கூறு:

யூகியும் வெல்லுதற்கு அரியன்.
யூகியும் உதயணனும் சிறந்த நண்பர்கள்.
யூகியும் உதயணனும் ஒருவர்க்கொருவர் துணைபுரிவர்.

## கேள்விகள்

1. உதயணன் என்ற பெயரின் காரணம் யாது ?
2. பிரமசுந்தரர் யார் ?
3. உதயணன் தெய்வயானையை எவ்வாறு பெற்றான்! எவ்வாறு இழந்தான் ?
4. உதயணன் யாரால் சிறை செய்யப்பட்டான்? எவ்வாறு ?
5. பிரச்சோதனன் உதயணனுக்குக் கடைசியில் சிறப்புகள் செய்யக் காரணம் என்ன ?

# 16. பரதனும் குகனும்

[பரதன் தனக்குக் கிடைத்த இராச்சியத்தை வெறுத்துத் தன் தமையனாகிய இராமனைக் காட்டினின்று அயோத்திக் கழைத்துச் சென்று முடிசூட்ட எண்ணிப் பரிவாரங்களுடனும் தாய்மார் மூவருடனும் கங்கையின் வடகரையை யடைந்து, கங்கையின் இருகரைக்கு முரியவனும் இராமனது ஆருயிர் நண்பனும் வேட அரசனுமாகிய குகன் தென்கரையில் நிற்பதைச் சுமந்திரரால் அறிந்து, அவனைக் காணும் விருப்பத்தோடு நிற்கின்றான். குகன் பரதன் வந்திருத்தலை அறிந்து, அவன் காட்டிலும் இராமனை இருக்க ஒட்டாது அவனோடு போர்புரிய வருகின்றான் எனத் தவறாகக் கருதி, மிக்க கோபங்கொண்டு அவனோடு போர் புரியப் படைதிரட்டத் தொடங்குகின்றான். தொடங்கியவன் பரதனையும் சத்துருக்கனனையும் உற்றுநோக்கி அவர்கள் இராம லட்சுமணர் போலத் தோன்றுதலையும், பரதனது தவக்கோலத்தையும் கண்டு, இராமனது தம்பிமார் அவனுக்குத் தீங்கிழைக்க மாட்டார் என எண்ணிச் சற்று அமைதியுற்றுப் பரதனை நேரிற் கேட்டுச் செய்தி தெரிந்துகொள்ளக் கருதி, ஒரு தோணியில் ஏறிக் கங்கையின் வடகரை அடைந்து பரதனதுண்மை நிலை அறிந்து வணங்க, அவனும் இவனை வணங்குகின்றான்.]

**குகன் :** பரத, நீ நாட்டினின்றும் காட்டுக்கு வந்தது எதன் பொருட்டு ?

**பரதன் :** வேடர் தலைவ, எனது தந்தை தசரதர் முன்னோர் மேற்கொண்ட முறையினின்றும் வழுவித் தமது மூத்த குமாரனாகிய இராமனுக்கு முடிசூட்டாது இராச்சியத்தை எனக்குக் கொடுத்துள்ளார். அந்த வழு நீங்குமாறு இராமரை 'அயோத்திக்கு அழைத்துச் செல்லவே யான் இங்கு வந்தேன்.

**குகன் :** (வியப்புற்றுப் பெருமூச்செறிந்து பரதனை வணங்கி) அரச குமார, உனது தாயுரையைக் கேட்டுத் தந்தை

அளித்த அரசாட்சியை ஏற்றுக்கொள்வது தகாத செயல் என எண்ணி இராமனை அழைத்துச் செல்ல இங்கு வந்திருக்கின்றாயே! என்ன அருமை! என்ன அன்பு! இதனை நான் எண்ணிப் பார்க்கும்போது ஆயிரம் இராமர் சேர்ந்தாலும் உனக்கு ஈடாகமாட்டார் என்று தோன்றுகின்றது. இந்த அரிய செயலால் நீ உனது முன்னோர் புகழ்களையெல்லாம் உன்னுடைய புகழாக ஆக்கிக்கொண்டாய்.

**பரதன் :** வேடர் அரசே, இது நிற்க; நமது தமையன் இந்தக் கங்கைக் கரைக்கு வந்தபொழுது எவ்விடத்தில் தங்கியிருந்தார்?

**குகன் :** அரசே, இதோ இந்த இடத்திற்றான். யானே அவ்விடத்தைக் காட்டுகின்றேன்; புறப்படுக.

[குகன் பரதனை அழைத்துச்சென்று இராமர் தங்கியிருந்த இடத்தையும், அவர் படுத்திருந்த புற்படுக்கையையும் காட்ட, அவன் கண்டு பதைபதைத்துப் பூமியில் விழுந்து புலம்பி இதற்கெல்லாம் தானே காரணம் எனத் தன்னை வெறுத்துக்கொண்டு பின்னும் குகனை நோக்கிக் கேட்கின்றான்.]

**பரதன் :** துணைவா, பெரியோனாகிய இராமன் துயின்ற இடம் இதுவாயின், அவனைத் தொடர்ந்து வந்திருக்கும் இலக்குமணன் எவ்விடத்தில் இராப்பொழுதைக் கழித்தான்?

**குகன் :** இளவரசே, இராமரும் சீதையும் புற்படுக்கையில் படுத்து நித்திரை செய்ய, இலக்குமணன் அந்நிலையைக் கருதி மிகவும் வருந்திக் கண்ணீர் சொரிந்து, வனத்திலுள்ள பிராணிகளால் என்ன தீங்குண்டாகுமோ என அஞ்சி, விடியுமளவும் கண்கொட்டாது வில்லுங் கையுமாக நின்று அவர்களைக் காத்துக்கொண்டிருந்தான்.

**பரதன்:** இராமன் தம்பிமார்களில் யான் முடிவிலாத துன்பத்துக்குக் காரணமானேன். இலக்குமணன் அத்

துன்பத்தைப் போக்குவதற்காகவே பிறந்திருக்கிறான். அன்புக்கு எல்லை உண்டோ? நான் இராமனுக்குத் தம்பி என்று சொல்லிக்கொள்வது அழகாக இருக்கிறது! (என்று தன்னைத்தானே இகழ்ந்துகொண்டு குகனை நோக்கி) அன்பனே, என்னைக் கங்கையின் இக்கரையிலிருந்து அக்கரை கொண்டு போய்விட்டால் நீ என் துன்பத்தைப் போக்கி இராமனிடம் சேர்த்தவன் ஆவாய்.

**குகன் :** அரசே, அவ்வாறே செய்கிறேன்.

**பரதன் :** நல்லது.

[நாவாய்கள் வந்து பரிசனங்களையும் சேனைகளையும் அக்கரை கொண்டுபோய்ச் சேர்த்தன. கடைசியாக ஒரு தோணியில் பரத சத்துருக்கனரும் சுமந்திரரும் தாய்மார் மூவரும் ஏறிக்கொள்ளக் குகன் அதைச் செலுத்திக்கொண்டு அக்கரை செல்லும்பொழுது]

**குகன் :** (கோசலையைச் சுட்டி) அரசே, இவர் யார்?

**பரதன் :** பெரும, இவர் தசரதர் முதல் மனைவி; இராமபிரானைப் பெற்றதால் அடையவேண்டிய பெருஞ் செல்வத்தை யான் பிறத்தலால் இழந்த பெரியார்.

[உடனே, குகன் கோசலையின் காலில் விழுந்து அழுகின்றான்; கோசலை இவன் யார்? என்று பரதனை வினவப் பரதன், "இவன் இராமபிரான் தோழன்; குகன் என்னும் பெயருடையவன்" என்று சொல்லக் கோசலை அவர்களையெல்லாம் தேற்றி வாழ்த்துகின்றாள்.]

**குகன் :** (சுமத்திரையைச் சுட்டி) இவர் யார்?

**பரதன் :** இவர் தசரதர் இளைய மனைவி; இராமரைப் பின்தொடர்ந்து காட்டுக்கு வந்திருக்கும் இலக்குமணனைப் பெற்றவர்.

**குகன் :** (சுமத்திரையை வணங்கிவிட்டுக் கைகேயியைச் சுட்டி) அரசகுமார, இவர் யார்?

**பரதன் :** இவள் இப்பொழுது நிகழ்ந்துள்ள துன்பத்துக் கெல்லாம் காரணமானவள்; பழிகாரி; நானும்

உலகத்திலுள்ள மற்ற அனைவரும் மிக்க வருத்தமடையு மாறு இராமரைக் காட்டுக்கனுப்பி அதனால் மகிழ்ச்சியுற் றிருப்பவள். இவள் முகத்தைப் பார்த்தே இவள் இன்னு ளென்று தெரிந்துகொள்ளலாமே! இவள்தான் என்னைப் பெற்றவள்.

[குகன் மற்ற இருவரையும் வணங்கியது போலவே கைகேயியையும் தாய் எனக் கருதி வணங்குகிறான். தோணியும் தென்கரை சேர்ந்தது. அனைவரும் இராமர் இருக்குமிடம் செல்கின்றனர்.]

| | | |
|---|---|---|
| இராச்சியம் | பெருமூச்சு | தகாத |
| படைதிரட்டல் | ஆருயிர் நண்பன் | துணைவன் |
| தவக்கோலம் | பதைபதைத்த | தோணி |
| தீங்கிழைத்தல் | பழிகாரி | நித்திரை |
| உண்மைநிலை | ஏற்றுக்கொள்ளல் | இன்னார் |
| கண்ணீர் சொரிதல் | முடிசூட்ட | காத்தல் |

## அரும்பதவுரை

ஆருயிர் - அருமையான உயிர். பழிகாரி - குற்றத்திற்குரிய வள். துணைவன் - நண்பன். நித்திரை - தூக்கம். ஏற்றுக் கொள்ளல் - ஒப்புக்கொள்ளல். தீங்கிழைத்தல் - தீங்குசெய்தல்.

## பயிற்சி

1. இலக்குமணன் வில்லுங்கையுமாக நின்றான். பரதன் தவக்கோலம் பூண்டிருந்தான். இம்மாதிரியே புத்தகமும் கையு மாக, துப்பாக்கியும் கையுமாக, போர்க்கோலம், துறவுக் கோலம் — என்பவைகளை அமைத்து வாக்கியங்கள் கூறு.

2. கோடுகள் உள்ள இடங்களில் உண்டு அல்லது இல்லை என்று சேர்த்துப் படி :

அன்பிற்கு எல்லை ——. ஆசைக்கு எல்லை ——. கல்விக்கு எல்லை ——. பொருளுக்கு எல்லை ——. ஊருக்கு எல்லை ——.

## இலக்கணம்

1. வினைச்சொற்களில் சில செயப்படுபொருளை ஏற்றுவரும் என்றும் சில செயப்படுபொருளை ஏற்கமாட்டா என்றும் அறிவீர்கள். செயப்படுபொருள் உள்ள வினைச்சொற்களுக்குச் **செயப்படுபொருள் குன்ரு வினை** என்று பெயர். செயப்படுபொருள் இல்லாத வினைச்சொற்களுக்குச் **செயப்படுபொருள் குன்றிய வினை** என்று பெயர்.

2. ஓடு, படி, சென்ருன், நிற்கிறது, கொடுக்கும்—இவைகளில் செயப்படுபொருள் குன்ரு வினைகள் எவை? செயப்படுபொருள் குன்றிய வினைகள் எவை? உதாரணத்தால் விளக்கு.

## கேள்விகள்

1. பரதன் ஏன் இராமரைத் தேடிக்கொண்டு காடு சென்ருன்?

2. குகன் பரதனை எவ்வாறு புகழ்ந்தான்?

3. பரதன் குகனிடம் இராமரைப்பற்றி என்னென்ன விசாரித்தான்?

# 17. பருத்தி

1. மக்கள் வாழ்க்கைக்கு இன்றியமையாத பொருள்கள் நான்கு. அவைகள் காற்று, நீர், உணவு, உடை என்பன. காற்றும் நீரும் இயற்கையாகவே கிடைப்பவை. உணவும் உடையும் மக்களால் செயற்கையாகத் தயாரிக்கப்படுகின்றவை. உணவுக்குப் பெரும்பாலும் தானியங்களும் காய்கனி கிழங்குகளும் உதவுகின்றன. உடைக்குப் பெரும்பாலும் பஞ்சு உதவுகின்றது. பஞ்சு என்பது பருத்திச் செடியிலிருந்து கிடைக்கும் வெண்மை நிறமுள்ள மென்மையான நார் போன்ற பொருள்.

2. பருத்தி என்பது தாவரவகையுள் செடி இனத்தைச் சேர்ந்தது. பருத்திச் செடி ஏறத்தாழ ஆறடி உயரம் வளரக்கூடியது. பருத்தி புன்செய் நிலமாகிய கரிசல் நிலத்தில் பயிராகும். கரிசல் நிலம் என்பது கரு நிறமுள்ள களிப்புமண் உள்ள தரை. பருத்தி பயிராவதற்குக் கரிசல் நிலமே ஏற்றது. ஏனென்றால், கரிசல் நிலத்தில் பெய்யும் மழைநீர் நிலத்தில் சுவறி விடுவதால் நீண்டநாள் வரை நிலத்தின் உட்புறம் ஈரமாகவே இருக்கும்; அந்த ஈரத்தைக் கொண்டே பருத்திச் செடி வளரும். அதனோடு கரிசல் நிலத்தில் பருத்தியின் வளர்ச்சிக்கு வேண்டிய சத்து நிரம்ப இருக்கிறது.

3. பருத்தி பயிரிடுவோர் நிலத்தை இரண்டு மூன்று முறை உழுது புழுதியாக்குவார்கள். பின்பு, மழை பெய்தவுடன் ஒரு முறை உழுது உழுசாலில் விதைகளை வரிசையாகப் போட்டுக்கொண்டே போவார்கள். விதைப்பதற்கு முன் பருத்தி விதைகள் ஊறவைக்கப்பட்டிருக்கும். விதைகள் மழையின் ஈரத்தைக்கொண்டே முளைத்து

விடும். விதை முளைத்துச் செடியாகி வளரும்போது களைகள் முளைத்திருப்பின் அவைகளைப் பிடுங்கி எறிந்து விடுவார்கள். பருத்தி புன்செய் நிலத்தில் வளரும் பயிரா தலின், அதற்கு வாய்க்கால் வழியே நீர் பாய்ச்சுதல் இயலாது. தண்ணீரும் நன்செய்ப் பயிர்களுக்கு வேண்டிய அளவு புன்செய்ப் பயிர்களுக்கு வேண்டுவதில்லை. பருத்தி வளர்வதற்குப் பருவகாலத்தில் பெய்யும் மழை நீரே போதுமானது.

4. பருத்திச்செடி விதைபோட்ட ஆருவது மாதத்தில் பூக்கத் தொடங்கும். பருத்திப்பூ மஞ்சள் நிற முடையதாகவும் பெரிய இதழ்கள் உள்ளதாகவும் இருக்கும். பூவினின்று பிஞ்சு தோன்றியவுடன் பூ வாடி உதிர்ந்து விடும். பிஞ்சு காயாகும். பருத்திக்காய் ஒரு பெரிய கொட்டைப்பாக்குப்போல இருக்கும். காயினுள் மூன்று அறைகள் உண்டு. அந்த அறைகளில் விதையும் பஞ்சும் நிறைந்து இருக்கும். பருத்திக்காய் முற்றினுல் பழமாகாது; உலர்ந்து நெற்ருகி வெடிக்கும். பருத்திக்காய் வெடித்தவுடன் உள்ளிருக்கும் வெண்மை நிறமுள்ள பஞ்சு பிதுங்கி வெளிப்படும். இங்ஙனம் ஒவ்வொரு செடியிலும் பல காய்கள் முற்றி வெடிக்குமாதலால், இந்தப் பருவத்தில் பருத்திக் காடு வெள்ளை வெளேரென்ற தோற்றத்துடன் பார்வைக்கு மிக அழகாக இருக்கும்.

5. காய்முற்றி வெடித்தவுடன் பஞ்சைச் சேகரித்து விடவேண்டும். இல்லாவிடில் பஞ்சு சிதறிக் கீழே விழுந்து வீணுகிவிடும். ஆதலால், காய்வெடிக்கும் பருவத்தில் பெண்டிரும் இளைஞருமாகப் பலர் கூடைகளுடன் பருத்திக் கொல்லைக்குச் சென்று, பஞ்சை எடுத்துக் கூடைகளில் நிரப்பிக் கொண்டுவந்து ஓரிடத்தில் சேர்ப்பார்கள். இவ்வாறு பஞ்சு சேகரித்தல் ஒரு பருவத்தில் இரண்டு

மூன்று முறை நடைபெறும். இவற்றுள் முதல் முறையில் எடுக்கப்படும் பஞ்சே முதல்தரமானதாக இருக்கும்.

6. பஞ்சைச் சேகரித்த பின்பு அதிலுள்ள கொட்டை வேருகவும் பஞ்சு வேருகவும் பிரித்துப் பஞ்சைப் பெரிய மூட்டைகளாகக் கட்டி வியாபாரத் தலத்துக்கனுப்புவார்கள். கொட்டை நீக்கப்படாத பஞ்சையும் மூட்டைகளாகக் கட்டி வெளியூர்களுக் கனுப்புவதுண்டு. பஞ்சை நூலாக நூற்று ஆடையாக நெய்கிருர்கள்; கொட்டை ஆடுமாடுகளுக்குத் தீனியாக உபயோகப்படுகின்றது. பருத்திக்கொட்டையிலிருந்து ஒரு வகை எண்ணெய் எடுப்பதும் உண்டு.

7. காயினின்று வெளியான பஞ்சு எவ்வாறு ஆடையாக மாறுகிறதென்று பார்ப்போம். முதல்முதலில்



பருத்திச் செடியும் பருத்திக்காயும்



திரிமணை

பஞ்சினின்று கொட்டையைப் பிரித்தெடுக்க வேண்டும். இதற்கு உதவியாக ஒரு சிறு மர எந்திரம் உண்டு.

அதற்கு ‘ திரிமணை ’ என்று பெயர். பஞ்சை அதிலிட்டுச் சுழற்றினால் கொட்டை வேருகவும் பஞ்சு வேருகவும் பிரிந்துவிடும். பஞ்சை ஒரு வகை வில்லால் கொட்டி அதிலுள்ள துகள்களைப் போக்கிச் சிக்கறுப்பார்கள். அதன் பின்பு பஞ்சை நூற்பதற்கேற்ற நிலையில் திரிகளாகத் திரட்டுவார்கள். இவ்வாறு திரட்டப்பட்ட திரிக்குக் ‘கொட்டை’ என்று பெயர். ‘கொட்டை நூற்றுச் சம்பாதித்தல்’ என்னும் பழமொழியில் கொட்டை யென்பது மேற்கூறிய திரியையே குறிக்கிறது. தற்காலத்தில் பஞ்சைத் திரிகளாகத் திரட்டுதலைப் ‘பட்டை போடுதல்’ எனக் கூறுகின்றனர். கொட்டையை இராட்டினத்தின் உதவி கொண்டு நூலாக நூற்பார்கள். நூல், தறியின் உதவியால் ஆடையாக நெய்யப்படும்.



பஞ்சை வில்லால் அடித்தல்

8. மேலே கூறிய நூற்றல், நெய்தல் முதலிய செயல்கள் முற்காலத்தில் சிறு கருவிகளின் உதவியால் கையினலேயே செய்யப்பட்டன. ஆதலால், நூல் நூற்றலும் ஆடை நெய்தலும் சிறந்த கைத்தொழில்களாக விளங்கின. ஆனல், தற்காலத்தில் விஞ்ஞான ஆராய்ச்சியின் பயனகப் பெரிய பெரிய ஆலைகள் நிறுவப் பெற்று அவற்றில் உள்ள எந்திரங்களின் மூலமாக முன்னே கூறிய ‘பஞ்சிலிருந்து கொட்டையைப் பிரித்தல்’ முதலிய

எல்லாத் தொழில்களும் நடைபெறுகின்றன. ஒரு நாள் முழுதும் பல நூறு பேர் செய்யக்கூடிய வேலையை ஒரு மணி நேரத்தில் சிலர் உதவியால் எந்திரம் செய்து முடிக்கிறது. இதனால், மக்களுக்குப் போதுமான அளவிலும், சுருங்கிய காலத்திலும், மிக்க பிரயாசை இன்றியும் துணிகள் நெய்யப்படுகின்றன. அவைகள் மலிவாகவும் கிடைக்கின்றன.




கைத்தறி நெசவு

9. பழங்காலத்தில் நமது தமிழ்நாட்டில் கைத்தறியினாலேயே வேலைப்பாடமைந்த உயர்ந்த ஆடைகள் நெய்யப்பட்டு வந்தன. ஆயினும், தற்காலத்தில் புதுமையான எந்திர நெசவு மேலோங்கி நிற்க, கைத்தறி நெசவு குன்றிவிட்டது. இப்பொழுது கைத்தறிகளில் நெய்யப்படும் ஆடைக்கு உபயோகிக்கும் நூலும் எந்திரத்தால் நூற்கப்பட்டதே.

10. நார், உரோமம், பட்டு இவற்றால் நெய்யப்பட்ட ஆடைகளும் மக்களின் உடையாக உதவுகின்றன. ஆயினும் இத்தகைய ஆடைகளை நாம் எப்போதும் உபயோகிக்க இயலாது விலையும் மிகுதியாகும். பருத்தி யாடையே நாம் எந்நாளும் உபயோகிக்கக் கூடியது; விலையும் குறைவாக உள்ளது.

11. பருத்தி நமது சென்னை இராச்சியத்தில் கோயம் புத்தூர், மதுரை, திருநெல்வேலி, திருச்சிராப்பள்ளி முதலிய மாவட்டங்களில் மிகுதியாகப் பயிரிடப்படுகிறது.

| | | |
|---|---|---|
| பிஞ்சு | கரிசல் நிலம் | பிதுங்குதல் |
| சிக்கு | களிப்பு மண் | கைத்தொழில் |
| திரி | சுவறி விடுதல் | நிறுவப்படல் |
| தறி | தயாரித்தல் | திரிமணை |
| துகள் | இராட்டினம் | சேகரித்தல் |
| இதழ் | பட்டைபோடுதல் | வெள்ளை வெளேர் |
| உரோமம் | முளை கிளம்பல் | விஞ்ஞானம் |
| புழுதி | உழுசால் | |

## அரும்பதவுரை

துகள் - தூசி. நிறுவுதல் - ஏற்படுத்தல். சேகரித்தல் - சேர்த்தல். விஞ்ஞானம் - கலையறிவு.

## பயிற்சி

1. பஞ்சு இயற்கைப்பொருள். ஆடை செயற்கைப் பொருள். இம்மாதிரி இயற்கைப் பொருளுக்கும் செயற்கைப் பொருளுக்கும் வேறு மூன்று உதாரணங்கள் கூறு.

2. தொழில்களில் எந்திர வளர்ச்சியினால் விளையக்கூடிய நன்மைகளையும் தீமைகளையும் பற்றி யூகித்துச் சொல்லு.

## இலக்கணம்

1. உணவும் உடையும் மக்கள் தயாரிக்கிருர்கள். உணவும் உடையும் மக்களால் தயாரிக்கப்படுகின்றன. இவ்விரண்டு வாக்கியங்களிலுள்ள வினைகளைக் கவனி. தயாரிக்கிருர்கள் என்பது செய்வினை. தயாரிக்கப்படுகின்றன என்பது செயப்பாட்டு வினை.

2. பின்வரும் வாக்கியங்களிலுள்ள செய்வினைகளைச் செயப்பாட்டு வினைகளாகவும் செயப்பாட்டு வினைகளைச் செய்வினைகளாகவும் மாற்றி அமைக்க :

பருத்திக்கொட்டைகளை மாடுகளுக்கு உணவாக வைப்பார்கள்.
பஞ்சை நூலாக நூற்கிருர்கள்.
நூல் ஆடையாக நெய்யப்படுகிறது.
இந்தக் குளம் யாரால் வெட்டப்பட்டது?
நீதிபதி குற்றவாளியைத் தண்டித்தார்.

## கேள்விகள்

1. பருத்தி பயிர் செய்யும் முறையை விளக்கிக் கூறு.
2. பஞ்சு சேகரிக்கும் முறையைக் கூறு.
3. கரிசல் நிலத்தின் தன்மை என்ன?
4. எதற்குத் திரிமணை என்று பெயர்?
5. சென்னை இராச்சியத்தில் எந்தெந்த மாவட்டங்களில் பருத்தி மிகுதியாகப் பயிராகிறது?

# 18. நடுநிலைமை குன்றாமை

நமது தேசத்திற்கு வடமேற்கில் வெகு தூரத்தில் துருக்கி என்ற தேசமிருக்கிறது. அதில் திமிர்னு என்னும் பெயருள்ள ஒரு சிறிய பட்டணமிருந்தது. அங்கு முகம்மதுகான் என்ற பெயருள்ள ஒரு வர்த்தகன் இருந்தான். அவன் மளிகைக் கடையொன்று வைத்து ஜீவனம் செய்து வந்தான்.

முகம்மதுகான் பேராசைக்காரன். மிக விரைவில் அதிகப் பொருள் சம்பாதிக்க வேண்டுமென்பது அவனுடைய ஆசை. ஆகையால், அவன் தன் வர்த்தகத்தைத் தவறான முறையில் நடத்திவந்தான். அவனுடைய கடையிலிருந்த படி, தராசு, படிக்கல் முதலியவை சரியான அளவைகளல்ல. இவ்விதமாய் அவன் கள்ள அளவைகளை வைத்துக்கொண்டு, மக்களை ஏமாற்றி ஏராளமான பணம் சம்பாதித்தான்.

அவனுக்கு ஆமெட் என்னும் பெயருள்ள ஒரு குமாரன் இருந்தான். ஆமெட் சிறு வயது முதல் நற்குணமுடையவனாக விளங்கினான். அவன் பொய் சொல்லான்; பிறர் பொருளை விரும்பான்; நீதி நெறியினின்றும் தவறான். அவன் எல்லா விஷயங்களிலும் நேர்மையாகவே நடந்து வந்தான். அனைவரும் அவனை நீதிமான் என்று புகழ்ந்து கொண்டாடினார்கள்.

ஆமெட்டின் குணங்களை யறிந்த சுல்தான் அவனை வரவழைத்துத் தன்னிடத்தில் ஓர் உத்தியோகத்தில் அமர்த்திக் கொண்டான். கடை வீதிக்குச் சென்று வியாபாரிகள் வைத்திருக்கும் படிகள், தராசுகள் முதலியவை சரியாக இருக்கின்றனவா என்று சோதனை செய்வது அவன் வேலை. அவன் மூன்று சேவகர்களை அழைத்துக்

கொண்டு, குதிரையின் மேலேறிச் சென்று, தினந்தோறும் அப்பட்டணத்திலுள்ள கடைகளைச் சோதனை செய்வது வழக்கம்.

ஒரு நாள் அவன் தன் தகப்பனுருடைய கடையைச் சோதனை செய்வதற்காக அங்குச் சென்றான். தூரத்தில் தன் மகன் வருவதைக் கண்ட தகப்பன், சிறிதும் அஞ்சாது, தன் மகன் தன்னுடைய திருட்டுத்தனத்தை வெளிப்படுத்த மாட்டானென்று எண்ணிக் கடையின் வாயிலில் தைரியமாக நின்று கொண்டிருந்தான்.

ஆமெட் கடையின் வாயிலுக்குச் சென்று, குதிரையை விட்டு இறங்கிச் சோதனைசெய்யத் தொடங்கினான். முகம்மதுகான் தன் மகனே சோதனைசெய்யும் உத்தியோகஸ்தன் என்று எண்ணித் தான் வைத்திருந்த அளவைகளை மறைக்கவில்லை.

ஆமெட் அவைகளைச் சோதனைசெய்து, அவை கள்ள அளவைகளென்று தெரிந்துகொண்டான். உடனே அவன் தன் தகப்பனுருக்கு விலங்கிட்டு நியாயாதிபதியிடம் கொண்டு போகும்படிச் சேவகர்களுக்குக் கட்டளையிட்டான். அவ்வண்ணமே சேவகர்கள் அவனை நீதிபதியிடம் அழைத்துச் சென்றார்கள்.

மறுநாள் விசாரணை நடந்தது. ஆமெட் நியாயஸ்தலத்துக்குச் சென்றான். அங்குத் தன் தகப்பனுரைக் கண்டவுடன் அவன் அவரைப் பணிந்தெழுந்து, “தந்தையே! நான் நமது சுல்தானுக்கும், தேசத்துக்கும் எனக்கும், கடவுளுக்கும் சம்மதமாகுமாறு என் கடமையைச் செய்தேன். செல்வரென்றும், தாய் தந்தையரென்றும், மற்ற உறவினரென்றும் கருதி நியாய முறைதவறி நடத்தல் ஏற்றதன்று. ஆகையால் நான் என் கடமையை நடுநிலை குன்றாது நிறைவேற்றினேன். என்னை மன்னிக்க

வேண்டும்,'' என்று கேட்டுக் கொண்டான். தகப்பன் தான் செய்த இழிவான செயலை நினைத்து நினைத்துக் கண்ணீர் விட்டு அழுதான்.

நீதிபதி அவனுக்கு இருபது மோகர் அபராதம் விதித்தார். அவன் அபராதத் தொகையைச் செலுத்தி விட்டான்.

மறுநாள் சுல்தான் அதை அறிந்து, ஆமெட்டி னுடைய நேர்மையை மெச்சி, அவனுக்கு நியாயாதிபதி உத்தியோகம் கொடுத்தார். முகம்மதுகானும் அதுமுதல் தன் வர்த்தகத்தை நியாயமாய் நடத்திவந்தான். தன் குமாரன் உயர்ந்த உத்தியோகம் அடைந்ததைக் குறித்துப் பெரு மகிழ்ச்சி அடைந்தான்.

| | | | |
|---|---|---|---|
| தொகை | நேர்மை | சம்மதம் | நீதிமான் |
| செயல் | நீதிமான் | இழிவான | வெளிப்படுத்த |
| செல்வர் | சுல்தான் | ஏற்றதன்று | சாட்டை |
| மோகர் | அபராதம் | உள்ளங்கால் | நீதிநெறி |

## அருஞ்பதவுரை

அபராதம் - தண்டனைக் கட்டணம். குற்றம் - பிழை. நீதி நெறி - ஒழுங்கு முறை. நேர்மை - ஒழுங்கு. (நல் + குணம் = நற்குணம். இருபது + அடி = இருபதடி.)

## பயிற்சி

நேர்மை, கள்ள அளவு, தவறான, ஏராளமான, சோதனை, நடுநிலை, நிறைவேற்றினான்—இவ்வார்த்தைகளைப் பின்வரும் வாக்கியங்களில் ஏற்றவாறு அமைத்துக் கூறு.

(1) ஆமெட் நீதிநெறியினின்றும் ———.

(2) அவன் எல்லா விஷயங்களிலும் ——— உடையவன்.

(3) முகம்மதுகான் ——— வைத்துக்கொண்டு———
பொருள் சம்பாதித்தான்.

(4) ஆமெட் கடைகளை ——— செய்தான்.

(5) ஆமெட் தன் கடமையை ——— குன்றாது ———.

## இலக்கணம்

(1) பின்வரும் பெயர்ச்சொற்கள் ஒவ்வொன்றும் இன்ன வகையைச் சேர்ந்தது என்று குறிப்பிடு :

பட்டணம், வர்த்தகன், ஆசை, படிக்கல், பணம், நேர்மை, மூன்று, தைரியம்.

(2) முகம்மதுகான், மக்கள், குதிரை, காவிரி, புனல், ஆலயங்கள். இப்பெயர்ச் சொற்களுக்குத் திணையும் பாலும் கூறு.

(3) இருக்கிறது, சொன்னார்கள், செய்வேன், கொண்டாடுகிறான் அடித்தான்—இவ்வினைச் சொற்களுக்கு மற்றக் காலங்களைத் தெரிவி.

## கேள்விகள்

1. முகம்மதுகான் எப்படிப்பட்டவன் ?
2. முகம்மதுகான் செய்த குற்றம் என்ன ?
3. ஆமெட்டின் நேர்மை எதனால் வெளியாகின்றது ?
4. இக் கதையால் நீங்கள் அறியும் நீதி என்ன ?

# 19. தீப்பெட்டி செய்தல்




1. ஒவ்வொரு வீட்டுக்கும் இன்றியமையாத பொருள்களில் தீப்பெட்டியும் ஒன்று. அடுப்புப் பற்ற வைக்கவும்

விளக்கேற்றவும் தீப்பெட்டி இல்லாமல் முடியுமா? ஏதோ ஒரு நாளைக்குப் பக்கத்து வீட்டிலிருந்து தீப்பெட்டியை இரவல் வாங்கலாம்; நாள்தோறும் அப்படிச் செய்ய இயலாது.

2. நம்நாட்டில் சுமார் ஆறு கோடி குடும்பங்கள் இருக்கின்றன. ஒவ்வொரு குடும்பத்துக்கும் மாதம் இரண்டு தீப்பெட்டிகள் வேண்டுமென்று வைத்துக் கொள்வோம். அப்பொழுது நம் நாட்டிலுள்ள எல்லாக் குடும்பங்களுக்கும் சேர்ந்து ஒவ்வொரு மாதமும் சுமார் பன்னிரண்டு கோடி தீப்பெட்டிகள் வேண்டும்.

3. தீப்பெட்டிகளைப் பெரிய எந்திரங்களைக் கொண்ட தொழிற்சாலைகளிலும் தயாரிக்கலாம்; குடிசைத் தொழிலாகவும் செய்யலாம். நம் சென்னை மாகாணத்தில் சிவகாசி, சாத்தூர் என்ற ஊர்களில் தீப்பெட்டித் தொழிற்சாலைகள் இருக்கின்றன. இந்த ஊர்களிலும் சுற்றுப்புற கிராமங்களிலும் உள்ளவர்கள் தீப்பெட்டி தயாரிக்கும் தொழிலில் ஈடுபட்டிருக்கின்றனர்.

4. முதலில், இலவம் என்ற ஒரு மரக்கட்டையை இலேசான தகடுகளாக அறுத்து வேண்டியபடி ஒரே அளவான துண்டுகளாகச் செய்கிறார்கள். பின்பு சில எந்திரங்களில் இவற்றைக் கொடுத்து, மடிப்பதற்கு வசதியாகக் கோடுகள் போடுகிறார்கள். அதன் பிறகு இவற்றை அந்தக் கோடுகளில் மடித்துக் காகிதம் ஒட்டுவார்கள். இத்தகைய காகித ஒட்டினால் மேற்பெட்டியும் உள்பெட்டியும் அமைந்துவிடும். மரத்தகடுகளை மடித்துக் காகிதம் ஒட்டும் வேலையை நூற்றுக்கணக்கான வீடுகளில் செய்கிறார்கள்.

5. மலையாளத்துக் காடுகளிலுள்ள பாலை என்ற ஒரு மிருதுவான மரம் தீக்குச்சிகளைச் செய்ய ஏற்றதாயிருக்கிறது. இந்த மரங்கள் அங்கிருந்து வரவழைக்கப்பட்டு,

எந்திரங்களில் ஒரே அளவான குச்சிகளாக அறுக்கப்படு கின்றன.

6. வெற்றுக்குச்சிகளை அடுக்குவதற்கென்று ஒரு சட்டம் இருக்கிறது. இதில் சுமார் 2500 முதல் 3000 குச்சிகள் வரை அடுக்கலாம். குச்சிகளை அடுக்கியபின் சட்டத்தைப் பூட்டிவிட்டால் குச்சிகள் கீழே விழமாட்டா. இந்த வேலை நூற்றுக்கணக்கான வீடுகளில் நடைபெறுகிறது. குச்சிகள் அடுக்கப்பட்ட சட்டங்கள் தீப்பெட்டித் தொழிற்சாலைக்கு எடுத்துச் செல்லப்படும்.

7. தீக்குச்சி முனையிலும் பெட்டியின் பக்கத்திலும் இரசாயன 'மருந்து'கள் அமைக்கும் தொழில்தான் தீப்பெட்டித் தொழிற்சாலையில் நடக்கிறது. முதலில் சட்டத்தில் அடுக்கப்பட்ட குச்சி முனைகள் ஏற்றத்தாழ்வு இல்லாமல் மட்டந் தட்டப்படும். பிறகு பரபின் மெழுகை உருக்கிய திரவத்தில் குச்சிமுனைகள் தோய்த்து எடுக்கப்படும். குச்சி மெழுகில் தோய்க்கப் பெற்ருல்தான், பிறகு அதைப்பற்றவைக்கும்பொழுது நன்ருக எரியும்.

8. தீக்குச்சி முனைகளில் அமைக்க வேண்டிய மருந்துக் கலவை ஒரு கூழ்போல் தயாராயிருக்கும். 'பொட்டாசியம் குளோரேட்டு,' 'அன்டிமனி சல்பைடு,' 'கண்ணுடித் தூள்,' நீரில் கரைந்த வச்சிரப்பசை ஆகிய நான்கும் தேவையான அளவில் சேர்த்துக் குழைத்து இந்தத் தீக்குச்சி 'மருந்து' தயார் செய்யப்படுகிறது. இதில் சட்டத்திலுள்ள குச்சிமுனைகளைத் தோய்த்து எடுத்தால், ஒவ்வொரு குச்சிமுனையிலும் சிறிது மருந்து ஒட்டிக் கொள்ளும். பிறகு சட்டத்தைத் தலைகீழாகத் திருப்பி வைத்து மருந்து உலரவிடப்படுகிறது.

9. மருந்து உலர்ந்த குச்சிகளை நாற்பது அல்லது அறுபது ஆக எண்ணி உள் பெட்டிகளில் அடுக்குவார்கள்.

இந்த வேலையையும் நூற்றுக்கணக்கானவர் செய்து பிழைக்கிறார்கள்.

10. உள்பெட்டியை மேல்பெட்டிக்குள் செருகிய பிறகு அவற்றை அடுக்கிவைப்பார்கள். மேல்பெட்டியின் பக்கங்களில் தடவ மற்றொரு மருந்துக் கலவை தயாராயிருக்கும். சிவப்பு பாஸ்வரம், கண்ணாடித்தூள், வச்சிரப்பசை ஆகிய மூன்றும் சேர்த்துச் செய்யப்படும் இது துகிலிகையால் பெட்டியின் பக்கங்களில் பூசப்படுகிறது.

11. பின்பு தீப்பெட்டி தயாரித்த தொழிற்சாலையின் பெயர், வியாபார அடையாளமான படம் முதலியவை அச்சடித்த காகிதம் ஒவ்வொரு பெட்டிக்கும் ஒட்டப்படும். இதனோடு தீப்பெட்டி செய்யும் தொழில் முடிகிறது. தொழிற்சாலை முதலாளி ஒவ்வொரு தீப்பெட்டிக்கும் சர்க்காருக்கு வரி கொடுக்க வேண்டும். இந்த வரி கொடுத்தாயிற்று என்பதற்கு அடையாளமாக, முத்திரையிட்ட மெல்லிய நாடா போன்ற ஒரு காகிதம் தீப்பெட்டியைச் சுற்றி ஒட்டப்படுகிறது.

12. நீங்களும் தேவையானபொழுது, அரையணாவோ, முக்காலணாவோ கொடுத்து எளிதாக ஒரு தீப்பெட்டி வாங்கிவிடுகிறீர்கள். தீக்குச்சிகளை அலட்சியமாகக் கொளுத்துகிறீர்கள். எத்தனை பேருடைய உழைப்பினால் ஒரு தீப்பெட்டி உருவாகியிருக்கிறது என்பதைச் சிந்தித்துப் பாருங்கள்! அப்பொழுதுதான் தீப்பெட்டியின் பெருமை உங்களுக்குத் தெரியும்.

| | | |
|---|---|---|
| இரவல் | மட்டந்தட்டு | முதலாளி |
| வரவழை | துகிலிகை | முத்திரை |
| ஏறத்தாழ | கொளுத்து | |

## அரும்பதவுரை

மட்டந்தட்டு - சமமாக்கு. துகிலிகை - தூரிகை, வர்ணம்பூச உபயோகிக்கும் கருவி. முத்திரை - அடையாளக் குறி.

## பயிற்சி

1. தீக்குச்சி செய்தலைப் பற்றி ஒரு சிறு கட்டுரை எழுது.

2. தீக்குச்சிமுனை மருந்து, பெட்டியின் பக்கத்திலுள்ள மருந்து—இவை என்னென்ன பொருள்கள் சேர்ந்த கலவைகள்?

## இலக்கணம்

சில பெயர்கள் வேற்றுமை ஏற்கும்பொழுது, உருவம் மாறுபட்டு வரும். அவை, யான், யாம், நாம், நீ, நீர், தான், தாம் என்பன.

யான் என்பது என் எனவும்,
யாம், நாம் என்பன எம், நம் எனவும்
நீ என்பது நின் அல்லது உன் எனவும்
நீர் என்பது நும் அல்லது உம் எனவும்
தான், தாம் என்பன தன், தம் எனவும் திரியும்.

## கேள்விகள்

1. தீக்குச்சிக்கும், பெட்டிக்கும் ஏற்ற மரங்கள் யாவை?

2. தீக்குச்சிகளை வைக்கும் பெட்டிகள் எப்படிச் செய்யப் படுகின்றன?

3. தீக்குச்சிகளை எதில் அடுக்குகிறார்கள்?

4. தீக்குச்சிமுனைகளுக்கு மருந்து அமைக்கும் வழியைப் பற்றி எழுது.

# 20. தசரதர்

## [ஒரு நாடகம்]

### காட்சி—1

**இடம் :** தசரதர் அரண்மனையின் அரச சபை.

**பாத்திரங்கள் :** தசரதர், வசிட்டர், சுமந்திரர் முதலிய அமைச்சர்கள்.

**தசரதர் :** குலகுருவே, சுமந்திரரே, அமைச்சர்களே, இன்று ஒரு முக்கியமான செய்தியைப்பற்றி உங்கள் கருத்தை அறிய விரும்புகின்றேன்.

**சுமந்திரர் :** அரசர் ஏறே, அது என்ன செய்தி? அதனைக் கூறின் அது பற்றிய எங்கள் கருத்தைத் தெரிவிக்கின்றோம்.

**தசரதர் :** யான் நீண்ட காலம் அரசபாரத்தை வகித்து, என் சக்திக்கு ஏற்றவாறு ஆட்சி புரிந்திருக்கின்றேன். இனியும் அரசாட்சி செய்வதில் எனக்கு விருப்பமில்லை. எனக்கு மூப்பும் வந்துவிட்டது. எனக்கு இறுதிக் காலம் கிட்டுவதற்குள் எனது உயிர்க்குறுதி தேடுதல் வேண்டும். ஆதலால், அரசியலை எனது அருமை மைந்தன் இராமனிடத்தில் ஒப்பித்து விட்டுத் தவம் செய்வதில் எனது காலத்தைப் போக்க எண்ணுகின்றேன்.

**வசிட்டர் :** அரசே, இந்தச் சூரிய குலத்தில் நின்னைப் போலப் புகழ் உண்டாகுமாறு அரசாண்ட மன்னர் பலர் இருந்திருக்கின்றனர். எனினும், இராமனைப் போன்ற சிறந்த புதல்வரை அடைந்தவர் ஒருவரும் இலர். ஆதலால், அத்தகைய இராமனைப் பெற்ற

நீ உரிய காலத்தில் அவனுக்கு முடி சூட்டுதலினும் சிறந்த செயல் யாதுளது?

**சுமந்திரர்:** மன்னர் மன்ன, இதுகாறும் உங்கள் ஆட்சியில் குடிகள் யாதொரு குறையுமின்றி வாழ்ந்து வருகிறார்கள். உங்கள் ஆட்சி எங்களுக்கும் இன்பம் அளித்து வருகின்றது. அதனால் உங்கள் பிரிவை நினைக்கும்போது எங்களுக்கு மிகுந்த வருத்தம் உண்டாகிறது. ஆயினும், உங்கள் மூத்த புதல்வர் அரசினை மேற்கொள்வார் என்பதைக் கருதும்போது ஒருவித மகிழ்ச்சியும் உண்டாகிறது. என் செய்வது!

**தசரதர்:** முனிவரே, அமைச்சர் தலைவரே, உங்கள் கருத்து என் கருத்தோடு ஒத்திருத்தலை அறிந்து மிக மகிழ்கின்றேன். இனி, முடி சூட்ட நாள் குறித்து அதற்கு வேண்டிய ஏற்பாடுகள் செய்வோம்.

[தசரதர் இராமனுக்கு முடிசூட்ட வசிட்டரைக்கொண்டு நாள் குறித்து, அதற்கு வேண்டிய ஏற்பாடுகளை யெல்லாம் செய்கின்றார்.]

## காட்சி—2

**இடம்:** கைகேயியின் அந்தப்புரம்.

**பாத்திரங்கள்:** கைகேயி, மந்தரை. (மந்தரைக்குக் கூனி என்னும் பெயர் உண்டு.)

[முடி சூட்டுதற்குக் குறிக்கப்பெற்ற நாளுக்கு முந்தியநாள் அச்செய்தி யறிந்த கூனி, தூங்கிக் கொண்டிருக்கும் கைகேயினிடம் பரபரப்புடன் சென்று எழுப்பிக் கூறுகின்றாள்.]

**கூனி:** என் தலைவியே, என்ன தூக்கம் வேண்டியிருக்கிறது! இராமனுக்கு நாளைக்குப் பட்டம் கட்டப் போகிறார்களாமே!

**கைகேயி:** அப்படியா! மிக்க மகிழ்ச்சி; இந்நற்

செய்தியைக் கூறிய உனக்கு இதோ இந்த முத்துமாலையைத் தருகின்றேன்.

[கைகேயி முத்துமாலையைக் கொடுக்க, கூனி அதனை வாங்கிக் கோபத்துடன் ஓங்கிப் பூமியில் வீசி எறிந்து விட்டுத் தன் தலைவியை நோக்கிக் கூறுகின்ருள்.]

**கூனி:** அரசியே, உனக்குப் பெரிய ஆபத்து வந்திருக்கின்றது; அதனை அறியாமல் நீ மகிழ்ச்சி யடைகின்ருயே!

**கைகேயி:** ஆபத்து என்ன! இராமனுக்கு முடி சூட்டு விழா நாளை நடைபெறும் என்று தானே நீ சொன்னுய்? இதில் என்ன ஆபத்து இருக்கிறது? இராமன் நான் வளர்த்த அருமை மைந்தன்; சகல நற்குணங்களும் பொருந்தியவன்; சக்கரவர்த்தியின் மூத்த குமாரன். அவனுக்கு முடி சூட்டுவதனுல் என்ன ஆபத்து நிகழப்போகிறது?

**கூனி:** ஐயோ, பேதையே, நீ இவ்வளவு அறியாமையை உடையவளாய் இருப்பாய் என்று நான் நினைக்கவேயில்லை. இராமனுக்கு முடிசூட்டினுல் அவனுக்கும் அவன் தாய் கோசலைக்கும் அல்லவா வாழ்வுண்டாகும்? நீயும் உன் மகன் பரதனும் சுதந்தரம் இன்றி அவர்களுக்கு அடிமைத் தொழில் செய்து வாழவேண்டியது தான்.

**கைகேயி:** மந்தரை, ஏன் அவ்வாறு கூறுகின்ருய்? இராமனும் என் மைந்தனே; கோசலை என் சகோதரி ஆவாள். அவர்களுக்கு ஏற்படும் வாழ்வு எங்களுக்கும் ஏற்படாதோ?

**கூனி:** நன்ருகச் சொன்னுய்! அரசாட்சி அந்த இராமன் கைக்குப் போய்விட்டால் அவன் உங்களை இலட்சியம் பண்ணுவானு? அவன் தாய் தான் உங்களை மதிப்

பாளா? நீங்கள் பரம ஏழைகளாய் அடிமை வாழ்வு வாழ வேண்டியதுதான்.

**கைகேயி :** (சிறிது நேரம் சிந்தித்த) ஆமாம், கூனி, நீ சொல்லுகிறபடி ஒருவேளை நடந்தாலும் நடக்கலாம்.

**கூனி :** 'ஒருவேளை நடந்தாலும் நடக்கலாமா?' நிச்சயமாய் அப்படித்தான் நடக்கப் போகிறது.

**கைகேயி :** மந்தரை, நீ என் அருமைத் தோழி யன்றோ? இப்பொழுதுதான் நீ சொல்வது எனக்கு நன்ருகப் படுகின்றது. இதற்கென்ன யோசனை செய்ய லாம்?

**கூனி :** இனி யோசிக்க வேண்டியது ஒன்றுமில்லை. யான் அந்தச் செய்தியைக் கேட்டவுடனேயே யோசித்து ஒரு முடிபு செய்து வைத்திருக்கின்றேன்.

**கைகேயி :** அப்படியா! என்ன அந்த முடிபு?

**கூனி :** தசரதர் இன்றிரவு அச்செய்தியைத் தெரி விக்க உன்னிடம் வருவார். அப்பொழுது நீ துக்கக்குறி தோன்றுமாறு படுத்துக்கொண்டிரு. அவர் உன்னை எழுப்பிப் பேசத் தொடங்குவார். அப்பொழுது நீ உன் மகன் பரதனுக்கு முடிசூட்ட வேண்டுமென்றும் இராமன் காட்டுக்குப் போகவேண்டுமென்றும் இரண்டு வரம் கேள்.

**கைகேயி :** இது நல்ல யோசனைதான்; ஆனுல் அவர் நான் கேட்கும் வரங்களைக் கொடுக்க வேண்டுமே!

**கூனி :** அதற்கும் ஒரு வழி இருக்கிறது. தசரதர் உனக்கு முன்னமே நீ கேட்கும் இரண்டு வரங்களைக் கொடுப்பதாக வாக்களித்திருக்கிருர் அல்லவா? அதனை இப்பொழுது ஞாபகப்படுத்தி, நான் கூறும் இந்த வரங்கள் இரண்டையும் தரவேண்டும் என்று கேட்டால் அவர் கொடுக்காமல் இருக்க இயலாதே.

**கைகேயி :** எனதருமைத் தோழி, நீ சொல்வது

மிகப் பொருத்தமான வழி. நான் அப்படியே செய்கி றேன். நீ போய்வா.

[கூனி போகிருள். தசரதர் அன்றிரவு கைகேயியின் அந்தப்புர வருகின்ற சமயத்தில், அவள் அலங்கோலமாகப் படுத்துக் கிடக்கின்ருள்.

## காட்சி—3

**இடம் :** கைகேயியின் அந்தப்புரம்.

**பாத்திரங்கள் :** தசரதர், கைகேயி, கூனி.

[தசரதர் கைகேயியின் அந்தப்புரம் வந்து, அவள் தலைவிரி கோல மாகப் பூமியில் படுத்திருப்பதைக் கண்டு திடுக்கிட்டுக் கூப்பிடுகின்ருர். அவள் வாய் பேசாதுப், எழுந்திருக்காமலும் இருந்தமையால், அவளைக் கையினுல் தூக்கி எடுக்க, அவள் நழுவிக் கீழே விழுகின்ருள். அப்பொழுது அவளை நோக்கி]

**தசரதர் :** எனதருமைக் கைகேயி, ஏன் இவ்வளவு துக்கத்தோடு இருக்கின்ருய்? உனக்கு என்ன வருத்தம் உண்டாயிற்று? யான் இருக்கும்போது உனக்கு யாதொரு குறைவும் நேரிடாதே.

**கைகேயி :** குறைவு ஒன்றுமில்லை.........

**தசரதர் :** பின்னை ஏன் இவ்வளவு துக்கம்?

**கைகேயி :** நீங்கள் எனக்குக் கொடுப்பதாக மு னரே வாக்களித்துள்ள இரண்டு வரங்களையும் இ பொழுது கொடுக்கவேண்டும்.

**தசரதர் :** இதற்குத்தாஞ இவ்வளவு துக்கம்? நா வாக்களித்தபடி நீ வரங்கள் கேட்டால் நான் எப்ப மறுக்க முடியும்? நீ அதுபற்றிக் கவலைப்பட வேண்டாம். இன்னும் நீ மகிழ்ச்சியடைவதற்கு உரிய ஓர் நற்செயலும் நாளைக்கு நடக்கப்போகிறது. உன் மகன் இராமனுக்கு நாளை முடிசூட்டு. விழா நடைபெறும். அச்செய்தியைத் தெரிவிப்பதற்காகவே நான் உன்னிடம் வந்தேன்.

**கைகேயி:** அதெல்லாம் சரி. நீங்கள் அந்த இரண்டு வரங்களையும் இப்பொழுது கொடுக்கவேண்டும்.

**தசரதர்:** நான்தான் தருகிறேன் என்று முன்பே சொன்னேனே. இவைகள் இன்னவை என்று கூறி இப்பொழுதே பெற்றுக்கொள்ள வேண்டுமென்றாலும் பெற்றுக்கொள்.

**கைகேயி:** சரி, இரண்டு வரத்தையும் கொடுங்கள்; ஒன்று, பரதனுக்கு முடி சூட்ட வேண்டுமென்பது; மற்றொன்று, இராமன் பதினான்கு ஆண்டுகள் வனவாசம் செய்யவேண்டுமென்பது.

**தசரதர்:** (திகைப்படைந்து சற்றுநேரம் மௌனமாக இருக்கிறார். பின்பு) கைகேயி, நீ கேட்கும் வரங்களைக் கொடுப்பதாக வாக்களித்தபடி, நான் இவ்வரங்களைக் கொடுக்கக் கடமைப்பட்டவனே. ஆயினும் இவ்வரங்களைத் தவிர வேறு எவையேனும் இரண்டினைக் கேட்கலாகாதா?

**கைகேயி:** ஏன்? நீங்கள் இவ்வரங்களைக் கொடுக்க மாட்டீர்களா? உங்கள் வாக்குறுதி என்னாவது?

**தசரதர்:** என் வாக்குறுதி பொய்க்காது. (சற்று யோசித்து) இந்த இரண்டு வரங்களில் 'பரதன் நாடாள வேண்டும்' என்பதைப் பெற்றுக்கொள். மற்றைய ஒன்றை மறந்துவிடு.

**கைகேயி:** கொடுத்த வாக்கை நிறைவேற்றுவது உங்களைப் போன்ற மன்னர்களின் கடமையன்றோ?

**தசரதர்:** கைகேயி, அதிலொன்றும் ஐயம் வேண்டாம். என் வாக்கை நிறைவேற்றியே தீருவேன். ஆனால் இராமன் காடு செல்லவேண்டும் என்கிறாயே, அதனை மறந்து விடலாகாதா? இராமன் எனது உயிர்போன்றவன். நான் அவனைப் பிரிய நேர்ந்தால் எனது உயிர் உடலில் நில்லாதே! உனக்கு என்மீது இரக்கமில்லையா!

இதோ உன்னை வணங்குகின்றேன். மன மிரங்குவாய். [தசரதர் கைகேயியைக் கைகூப்பி வணங்குகின்றார்.]

**கைகேயி :** இதெல்லாம் எதற்காக? இந்த இரண்டு வரங்களையும் கொடுக்க உங்களுக்கு மனமில்லையானால் இதோ நான் என்னுயிரை மாய்த்துக் கொள்கிறேன். அதனால் உண்டாகும் பழி உங்களையே சாரும்.

**தசரதர் :** ஈந்தேன், ஈந்தேன் இவ்வரம். பெற்றுக் கொள். இதனால் வரும் பழியையும் சுமப்பாயாக. ஆ... இராமா......[மூர்ச்சை அடைகிறார்.]

**கைகேயி :** [கைகேயி கூனியைத் தன்னிடம் அழைத்து] என தருமைத் தோழி, உனது சூழ்ச்சித் திறத்தினால் காரியம் கைகூடிற்று. இனி, இராமனை அழைத்துக் காட்டுக்குப் போகச் சொல்ல வேண்டியதுதான்.

**கூனி :** அதற்கென்ன தடை? அந்த இராமன் தரித்துக்கொள்ள மரவுரிகூட முன்பே சித்தம் செய்யப் பட்டுளது.

| | | |
|---|---|---|
| தலைவி | பொய்த்தல் | குலகுரு |
| தோழி | மனமிரங்குதல் | இறுதிக்காலம் |
| மூப்பு | மாய்த்துக்கொள்ளல் | உயிர்க்குறுதி |
| வரம் | மூர்ச்சையடைதல் | அரசபாரம் |
| பிரிவு | சுதந்தரம் | அரசர் ஏறு |
| மரவுரி | இலட்சியம் | அரச சபை |
| வகித்தல் | துக்கக் குறி | வாக்களித்தல் |
| வசித்தல் | அந்தப்புரம் | வனவாசம் |
| மறுத்தல் | அலங்கோலம் | தலைவிரிகோலம் |
| கைகூடுதல் | அடிமைத் தொழில் | பட்டங்கட்டுதல் |
| வாக்குறுதி | கடமைப்படல் | ஞாபகப்படுத்துதல் |

## அரும்பதவுரை

மூப்பு - கிழத்தன்மை. வரம் - ஒருவர் தமக்கு வேண்டியதைக் கொடுக்குமாறு இன்னொருவரைக் கேட்டல். அந்தப்புரம் - அரசி இருக்கும் இடம். இலட்சியம் பண்ணுதல் - மதித்தல்; கவனித்தல். அலங்கோலம் - அழகான தோற்றம் மாறும்படி செய்தல். சித்தம் - தயார். கைகூடுதல் - எண்ணியபடி நிறைவேறுதல். சுதந்தரம் - பிறருக்கு ஆளாகாத நிலை.

## பயிற்சி

இந்நாடகத்தின் காட்சி 2-ல் உள்ள கதைப் பகுதியைச் சுருக்கிக் கூறு.

## இலக்கணம்

1. அவன் உங்களை இலட்சியம் பண்ணுவானா? அவன் தாய்தான் உங்களை மதிப்பாளா?—இவ்வாக்கியங்களின் இறுதியில் முற்றுப்புள்ளி வரும்படி மாற்றி அமைக்க.

2. இதற்கென்ன யோசனை செய்யலாம்? அப்படியா! என்ன அந்த முடிபு?—இவ்வாக்கியங்களிலுள்ள எழுவாய், பயனிலை, செயப்படுபொருள்களைக் கூறு.

## கேள்விகள்

1. இராமனுக்கு முடிசூட்டுவதைப்பற்றி வசிட்டர் கூறிய கருத்து என்ன?

2. கூனி, கைகேயியின் மனத்தை எவ்வாறு கலைத்தாள்?

3. கைகேயி தசரதரைக் கேட்ட இரண்டு வரங்கள் யாவை?

4. தசரதர் கைகேயியின் கருத்திற்கு ஏன் உடன்பட்டார்?

# 21. தேனீ வளர்த்தல்

பலவகை மலர்களில் உள்ள மதுவை எடுத்துத் தனது கூட்டிஞல் தேனுக்கி வைக்கும் இயல்புள்ள ஈயைத் தேனீ என்கிறேம். குப்பை அழுக்குப் பொருள்களின் மேல் மொய்க்கும் ஈய்க்கும், தேனீக்கும் மிகுந்த வேறுபாடு உண்டு. ஈ நமக்கு நோய்களேயே வருவிக்கிறது. தேனீயோ தேன் மெழுகு, தேன் முதலிய பொருள்களேத் தயாரித்துக் கொடுத்து நமக்குப் பலவகைகளில் உதவுகிறது.

மலேகளில் உயர்ந்த மரங்களில் தேனீக்கள் கூடு கட்டி வாழும். உயர்ந்த மரங்களில் உள்ள கொம்புத் தேன் மிகவும் சுவை யுள்ளதாய் இருக்கும். தேனேக் கருதியே நாம் தேனீக்களே நாடுகிறேம். தேனீயில் மூன்று வகைகள் உண்டு. சிறு தேனீ ஒரு வகை; மலேத்தேனீ மற்றெரு வகை; காட்டுத் தேனீ வேறெரு வகையாம். காட்டுத் தேனீ மிகக் கொடிய விஷமுள்ளது. அதைப் பிடித்துப் பழக்குவது அருமை. அது தன்னே நெருங்கிய மனிதரைக் கொட்டிப் பெருந்துன்பம் விளேவிக்கும். தப்பி ஓடித் தண்ணீரில் விழுந்தாலும், அங்கும் பறந்து வந்து கொட்டும். நாம் பிடித்து வளர்க்கத் தக்கது சிறு தேனீ ஒன்றே. மலேத் தேனீ தேன் நிறையக் கொடுக்கும். மலே களில் வாழ்வோர் அந்தத் தேனே விற்றுப் பிழைக்கிருர்கள்.

சிறு தேனீ கொட்டுவதில்லே என்று எண்ணக் கூடாது. தேள் கொட்டியது போலக் கடுக்கும்படி எந்தத் தேனீயும் கொட்டும். தேனீக்கள் கோபத்தோடு கொட்டிஞல் உடம்பெல்லாம் வீங்கிப்போகும். சிலருக்கு மயக்கமும் வருவதுண்டு. ஆகையால் இவைகளே நெருங்கும் போது மிகவும் ஜாக்கிரதையா யிருக்கவேண்டும்.




தேனீ வளர்த்தல்

1. மூவகைத் தேனீக்கள், 2. செயற்கைத் தேனடைப் பெட்டி,
3. தேனீக்கள் மலர்களில் தேனெடுத்தல், 4. தேனடைச் சட்டங்கள்,
5. தேனைப் பிரிக்கும் எந்திரம், 6. தேன்

தேன் உயர்ந்த பொருளாய் இருப்பதால், நாம் மிகவும் பாடுபட்டுத் தேனீக்களை வளர்க்கவேண்டும். நல்ல தேன் வெகுநாள் வரையில் கெடாது. நீண்ட நாள் இருக்கத் தக்க மருந்துகளைச் செய்ய இது உதவுகிறது. நம் உண வோடு சிறிதளவு தேனைக் கலந்து உண்டால், விரைவிலே உணவு ஜீரணம் ஆகும். பலவகைகளிலும் நமக்கு அவசியமாய் இருக்கின்ற தேனின் பொருட்டு நாம் தேனீக் களை வளர்க்கிரேம்.

இயற்கையில் சுயேச்சையாக வளரும் பூச்சியாகிய தேனீயை நாம் பிடித்து வளர்ப்பது சிரமமே ஆயினும், அதைப் பிடிப்பதற்குச் சில சுலபமான வழிகள் உண்டு. அவ்வழிகளை அறிந்து அவ்வாறு செய்ய வேண்டும். ஒரு சட்டியில் கொஞ்சம் தேன் மெழுகைத் தடவிக் காடுகளில் வைத்தால், தேனீ தாளுகவே வந்து அதில் கூடு கட்டும். அதை எடுத்து வந்து நாம் வளர்க்கலாம். இருபுறமும் துளையுள்ள பனந்துண்டங்களும் இதற்கு உதவும். நாம் அடிக்கடி நடமாடும் இடத்தில், ஒரு பெரிய மரத்தின் உச்சியில் தேன்கூடு ஒன்று தொங்கினுல், நாம் எப்படி வீட்டுக்குக் கொண்டு போவது என்பதைப்பற்றி, யோசிக்கவேண்டும். முகத்தைப் பத்திரமாக மூடிக் கொண்டு காலைவேளையில் மரத்தின்மேல் ஏற்றிக் கத்தியின் உதவியால் கூட்டைக் கிழித்து விடாமல் மெல்ல அறுக்க வேண்டும். தேனீக்கள் அங்கும் இங்கும் ஓடும். அவை ஓடுமுன்பு அக்கூட்டத்தில் மிகவும் பெரியதாயும் வனப் புள்ளதாயும் இருக்கும் தேனீயைப் பிடித்து வைத்துக் கொள்ள வேண்டும். இதற்கு இராணி ஈ என்று பெயர். பின்பு கூட்டை நமக்கு விருப்பமான இடத்தில் வைத்து இராணித் தேனீயை அதற்குள் விடவேண்டும். மற்றத் தேனீக்கள் எல்லாம் உடனே அதற்குள் வந்து புகும்.

தேனீக்களின் குடும்பத்தை ஒரு பெரிய அரசாங்கம் என்னலாம். அதற்கு ஆண் தேனீ அதிகம் இல்லே. பெரிய அழகிய பெண் தேனீ, ஆண் தேனீயோடு ஒரு முறை வெளியே பறந்து பழகும். அரசித் தேனீ அன்று முதல் தன் உயிருள்ள வரையில் ஆயிரக் கணக்கான முட்டைகளே இட்டுக்கொண்டே யிருக்கும். தாய்த் தேனீக் குத் தகுந்த உணவுப் பொருள்களே வேலே செய்யும் தேனீக்கள் தேடிக் கொடுக்கும். கூட்டில் எவ்விதக் குஞ்சு கள் அதிகமாக வேண்டுமோ, அதற்கு ஏற்ற உணவைத் தாய்த் தேனீக்குக் கொடுத்து, அது இடும் முட்டைகளே வேலேக்காரத் தேனீக்கள் சேர்த்து வைக்கும்.

தேனீக்கள் குஞ்சுகளேயும் முட்டைகளேயும் கீழ் அறைகளில் வைத்துத் தேனே மேல் அறைகளில் சேர்க் கும். ஆகையால் தேன் எடுக்க விரும்புவோர், மேல் அறைகளே வேருக எடுத்துத் தகரத்தால் செய்த சுழலும் எந்திரத்தில் வைத்துச் சுற்றித் தேன் திரட்டலாம். அப் படிச் சுற்றுவதால் அறைகள் கெட்டுப் போவதில்லே; திரும்பவும் அவற்றைக் கூட்டில் வைத்து விடலாம்.

தேனீக்களேப் புகையிட்டுக் கொன்று குஞ்சுகளோடும் முட்டைகளோடும் கசக்கிப் பிழிந்து தேன் எடுக்கும் பழைய வழக்கம் மிகவும் கொடியது. அப்படி எடுக்கப் பட்ட தேனில் தேனீக்களும் புழுக்களும் மிதக்கும். மரச் சட்டங்களால் அமைத்த கூட்டில் வளர்க்கப்படும் தேனீக் களேக் கொண்டு அடிக்கடி தேன் பெறலாம். அரசித் தேனீ சில மாதங்களில் வேருேர் அரசியைக் கூட்டில் வைத்து விட்டு வெளியேறும். அந்தச் சமயம் பார்த்து நாம் அதைப் பிடித்து, மற்ருெரு கூட்டில் வைக்க வேண்டும். இப்படியே தேனீக்களேக் கவனமாய் வளர்த் தால், அவை நம்மைக் கொட்டாமல் தேன் கொடுக்கும்.

| | | | |
|---|---|---|---|
| மது | மயக்கம் | திரட்டம் | அரசாங்கம் |
| தேன் | கொட்டும் | புனந்துண்டம் | கசக்கிப்பிழிந்து |
| தேனீ | இயல்பு | நீண்டநாள் | ஜாக்கிரதையாய் |
| அரசி | மொய்க்கும் | சுயேச்சையாக | உணவு பொருள் |
| குஞ்சு | வேறுபாடு | கடிக்கும் | உயிருள்ளவரையில் |
| மெழுகு | இயற்கையில் | வருவிக்கிறது | புகையிட்டுக்கொன்று |

## அரும்பதவுரை

மது - தேன். இயல்பு - தன்மை, குணம். வனப்பு - அழகு. கொம்புத்தேன் - மரத்திலுள்ள கூட்டுத்தேன். சுயேச்சையாக - தன் இஷ்டப்படி.

## பயிற்சி

தேனீக்களின் குடும்ப ஒற்றுமையைப்பற்றிச் சில வாக்கியங்கள் எழுது.

## இலக்கணம்

பேசினேன், பேசுகிருய், பேசுவான்...இச்சொற்களைக் கவனி. அவைகளெல்லாம் பேசு என்ற சொல்லிலிருந்து பிறக்கின்றன. பின்வரும் சொற்களின் பகுதிகளைக் கூறு :

நடந்தன, ஓடிற்று, நிற்கிறேன், வருவார்கள், போனுள்.

## கேள்விகள்

1. தேனீ எத்தனை வகைப்படும்?
2. தேனீக்கும் சாதாரண ஈக்குமுள்ள பேதமென்ன ?
3. தேனீயைப் பிடிப்பது எப்படி ?
4. அரசித் தேனீயை ஏன் பிடிக்க வேண்டும்?
5. தேன் எடுப்பதில் நல்ல முறை எது ?

# 22. பஞ்ச தந்திரக் கதைகள்

[பாடலிபுரத்து மன்னன் சுதரிசனன் என்பவனுக்குப் பல பிள்ளைகள் இருந்தனர். அவர்கள் அனைவரும் மூடர்களாக இருந்தமையால் அரசன் மிக்க கவலையடைந்தான். அதை யறிந்த சோமசன்மா என்னும் அந்தணர் அரசனை நோக்கி, "நீங்கள் கவலைப்பட வேண்டாம், யான் இவர்களைச் சிறந்த அறிவுடையவர்களாக ஆக்குவேன்" என்றார். அரசனும் மிக்க மகிழ்ச்சி யடைந்து, பிள்ளைகளை அவரிடம் ஒப்பித்தான். சோமசன்மா பல கதைகளின் மூலமாகப் பிள்ளைகளை நல்வழிப் படுத்தினார். அந்தக் கதைகளுக்குப் 'பஞ்ச தந்திரக் கதைகள்' என்று பெயர். அவைகளில் 'சிங்கமும் முயலும்' என்பது ஒன்று; 'நண்டும் கொக்கும்' என்பது மற்றொன்று. பஞ்ச தந்திரக் கதைகளைத் தமிழில் செய்யுளாகப் பாடிய புலவர் **வீரமார்த்தாண்ட தேவர்**.]

## 1. சிங்கமும் முயலும்

குறுமுயல் சிங்கந் தன்னைக்
கொன்றதொன் றுண்டே தென்னில்
செறியுமோர் காட்டி லேயோர்
சிங்கமுண் டந்தக் காட்டில்
உறுவிலங் கனைத்தும் வேட்டை
யாடியூன் மிகவுந் தின்று
வெறிகொடு திரியும் நாளில்
விலங்கெலாம் ஒருங்கு கூடி. 1

ஆணிளஞ் சிங்க மேயுன்
அடவியில் விலங்கை யெல்லாம்
வீணிலே கொல்ல வேண்டாம்
விதத்தினில் தினமொன் றாக
ஊனுனக் களிப்போம் என்ன
உண்மையாக் கொண்டு சிங்கம்

## 2. நண்டும் கொக்கும்

மீனென்றையு மேதின்றுடல் மிகவேவளர் கொக்குத்
தானங்கொரு பால்நண்டுத னைக்கண்டிரை கொள்ள
ஞானந்தரு மோனங்கொடு நண்ணும்படி கண்டப்
பானண்டிதை நீயிங்குறை பண்பேதுரை என்ன. 1

என்னென்றுரை செய்வேன்இனி யான் எங்ஙனம் உய்வேன்
கொன்னுந்திய வலைகாரர்கள் கூடிக்குளம் ஏரி
மன்னுந்தட மெல்லாம்மிக வளைந்தேவலை வீசிச்
சின்னஞ்சிறு பொடிமீன்முதற் சேரப்பிடித் தாரே. 2

இந்தக்குளம் நாளைக்கென எண்ணிக்கொடு போனார்
அந்தப்படி வந்தேபிடித் தவர்காவிலெ டுத்தே
சந்தைக்கடை தொறும்மீன்கடை தானேஎன விற்பார்
எந்தப்படி இவர்தப்புவ தெனவெண்ணியி ருந்தேன். 3

அந்தப்பழி காரர்வரு முனமேயொரு பாயம்
சிந்தித்தனன் நான்அப்படி செய்தால்அவை உய்யும்
எந்தப்படி யானும்அழைத் திங்கேவரு வாயேல்
இந்தக்குளம் விட்டோர்குளம் எய்தும்படி செய்வேன். 4

என்றேபக ராசன்சொல வியனண்டதை நம்பிச்
சென்றேபல மீனோடுரை செயவேஅவைகூடி
நன்றே யென வரஒவ்வொரு நடைக்கொன்றுகொண் டேகிக்
கொன்றேசில தின்றேசில கொடும்பாறையில் உலர்த்தி, 5

அலவன்தசை தனையுண்டிட அதையுங்கொடு செலவந்
நிலமெங்கணும் மீனென்புகள் நிறைகொண்டது கண்டே
நலதிங்கிது பலமீனையும் நனிதின்றது நமையும்
கொலவந்தது நாமும்இது கொலுமுன்கொலு வோமே. 6

நம்மால்வரு பிழையேயிது நாமும்அந்த மீன்போல்
சும்மாவிருந் தனமேல்கொலும் அதிலேயொரு சூழ்ச்சி

எம்மால்வகை வருமாறினிச் செய்வோம்என எண்ணி
அம்மாபகன் கழுத்தைக்கவை அடியால்நெருக் கியதே. 7

நெருக்குண்டற வீழ்ந்தேகொக்கு நீங்கிற்றுயிர் அலவன்
இருக்குந்தலம் ஏகித்தன தினத்தோடிருந் ததுவே
செருக்கும்பகை பெரிதாகிலும் சிலதந்திர வகையால்
முருக்கும்படி நினைத்தால் அதின் முடியாததும் உளதோ. 8

| | | | |
|---|---|---|---|
| ஊன் | என்பு | ஈர்ந்த | துளங்கி |
| புனல் | வியன் | எடுப்பு | உய்தல் |
| துரவு | நனி | வெருவி | உளை |
| வேழம் | பைய | பகன் | நண்ணுதல் |
| பங்கம் | ஆணை | மோனம் | பழிகாரர் |
| தடம் | அடவி | அலவன் | நெருங்குதல் |
| காவி | வெய்ய | கவையடி | முருக்குதல் |

## அரும்பதவுரை

புனல் - நீர். வேழம் - யானை. அடவி - காடு. வெருவி - பயந்து. பங்கம் - சேறு. துரவு - கிணறு. மோனம் - பேசாமல் இருத்தல். என்பு - எலும்பு. வியன் - பெரிய. அலவன் - நண்டு. பகன் - கொக்கு.

## பயிற்சி

இக்கதைகளை வசனத்தில் கூறு.

## கேள்விகள்

1. சிங்கம் செய்து வந்த கொடுமை என்ன?
2. மற்ற மிருகங்கள் என்ன ஏற்பாடு செய்தன?
3. முயல் தன்முறை வந்தபோது என்ன செய்தது?
4. இக்கதையால் விளங்கும் நீதி யாது?
5. கொக்கு ஏன் மௌனங் கொண்டிருந்தது?
6. அது மீன்களை எவ்வாறு மோசம் செய்தது?
7. நண்டு செய்த சூழ்ச்சி யென்ன?
8. கொக்கு செய்த மோசத்தை நண்டு எப்படித் தெரிந்துகொண்டது?

# 23. நல்வழி

['நல்வழி' என்பதற்கு 'நல்லவழியை அறிவிக்கும் நூல்' என்பது பொருள். இது ஒரு நீதி நூல்; நாற்பது பாட்டுக்களை உடையது. பாட்டுக்களில் கூறப்படும் நீதிகள் தகுந்த உபமானங்களால் விளக்கப்பட்டுள்ளன. இந்த நூலை இயற்றியவர் ஆத்திசூடி, கொன்றை வேந்தன் முதலிய நூல்களை இயற்றிய ஔவையாரே. இவர் ஏறத்தாழ ஆயிரம் ஆண்டுகளுக்கு முன் வாழ்ந்திருந்தவர்.]

பாலும் தெளிதேனும் பாகும் பருப்புமிவை
நாலும் கலந்துனக்கு நான்தருவேன்—கோலஞ்செய்
துங்கக் கரிமுகத்துத் தூமணியே நீயெனக்கு
சங்கத் தமிழ்மூன்றும் தா. 1

ஆற்றுப் பெருக்கற் றடிசுடுமந் நாளுமவ்வா
றூற்றுப் பெருக்கால் உலகூட்டும்—ஏற்றவர்க்கு
நல்ல குடிப்பிறந்தார் நல்கூர்ந்தார் ஆனாலும்
இல்லையென மாட்டார் இசைந்து. 2

ஆற்றங் கரையின் மரமும் அரசறிய
வீற்றிருந்த வாழ்வும் விழுமன்றே—ஏற்றம்
உழுதுண்டு வாழ்வதற் கொப்பில்லை கண்டீர்
பழுதுண்டு வேறோர் பணிக்கு. 3

ஆன முதலில் அதிகம் செலவானால்
மானம் அழிந்து மதிகெட்டுப்—போனதிசை
எல்லார்க்குங் கள்வனாய் ஏழ்பிறப்பும் தீயனாய்
நல்லார்க்கும் பொல்லனாம் நாடு. 4

ஒன்றை நினைக்கின் அதுவொழிந்திட் டொன்றாகும்
அன்றி அதுவரினும் வந்தெய்தும்—ஒன்றை
நினையாத முன்வந்து நிற்பினும் நிற்கும்
எனையாளும் ஈசன் செயல். 5

மரம்பழுத்தால் வெளவாலை வாவென்று கூவி
இரந்தழைப்பார் யாவருமிங் கில்லை—சுரந்தமுதம்
கற்றா தரல்போல் கரவா தளிப்பரேல்
உற்றார் உலகத் தவர். 6

ஆறிடு மேடும் மடுவும்போல் ஆஞ்செல்வம்
மாறிடும் ஏறிடும் மாநிலத்தீர்—சோறிடும்
தண்ணீரும் வாரும் தருமமே சார்பாக
உண்ணீர்மை வீறும் உயர்ந்து. 7

கல்லானே ஆனாலும் கைப்பொருளொன் றுண்டாயின்
எல்லாரும் சென்றங் கெதிர்கொள்வர்—இல்லானை
இல்லாளும் வேண்டாள்மற் றீன்றெடுத்த தாய்வேண்டாள்
செல்லா தவன்வாயிற் சொல். 8

பூவாதே காய்க்கும் மரமுமுள மக்களுளும்
ஏவாதே நின்றுணர்வார் தாமுளரே—தூவா
விரைத்தாலும் நன்றாகா வித்தெனவே பேதைக்
குரைத்தாலுந் தோன்றா துணர்வு. 9

தேவர் குறளும் திருநான் மறைமுடிவும்
மூவர் தமிழும் முனிமொழியும்—கோவை
திருவா சகமும் திருமூலர் சொல்லும்
ஒருவா சகமென் றுணர். 10

| | | | |
|---|---|---|---|
| பாகு | பெருக்கு | கரத்தல் | கைப்பொருள் |
| கோலம் | வீற்றிருந்த | மாறிடல் | எதிர்கொள்வர் |
| துங்கம் | பொல்லன் | சார்பு | மூவர்தமிழ் |
| தூமணி | சுரத்தல் | உண்ணீர்மை | முனிமொழி |
| சங்கத்தமிழ் | வீறும் | கோவை | |

# 24. நன்னெறி

['நன்னெறி' என்பது ஒரு சிறந்த நீதி நூல்; நாற்பது வெண்பாக்களை யுடையது; நன்னெறி என்பதற்கு 'நல்ல நெறிகளைப் போதிக்கும் நூல்' என்று பொருள். இதில் சிறந்த நீதிகள் எளிய உபமானங்களால் விளக்கப்படுகின்றன. இந்த நூலைப் பாடியவர் சிவப்பிரகாச சுவாமிகள் என்பவர். இவர் ஏறத்தாழ இருநூறு ஆண்டுகளுக்குமுன் வாழ்ந்தவர்.]

என்றும் முகமன் இயம்பா தவர்கண்ணும்
சென்று பொருள்கொடுப்பர் தீதற்றோர்—துன்றுசுவை
பூவிற் பொலிகுழலாய் பூங்கை புகழவோ
நாவிற் குதவும் நயந்து. 1

தங்குறைதீர் வுள்ளார் தளர்ந்து பிறர்க்குறூஉம்
வெங்குறை தீர்க்கிற்பார் விழுமியோர்—திங்கள்
கறையிருளை நீக்கக் கருதா துலகின்
நிறையிருளை நீக்குமேல் நின்று. 2

எந்தைநல் கூர்ந்தான் இரப்பார்க்கீந் தென்றவன்
மைந்தர்தம் ஈகை மறுப்பரோ—பைந்தொடீஇ
நின்று பயனுதவி நில்லா அரம்பையின்கீழ்க்
கன்றும் உதவும் கனி. 3

ஆக்கும் அறிவான் அலது பிறப்பினால்
மீக்கொள் உயர்விழிவு வேண்டற்க—நீக்கு
பவரார் அரவின் பருமணிகண் டென்றும்
தவரார் கடலின் கடு. 4

உண்டு குணமிங் கொருவர்க் கெனினுங்கீழ்
கொண்டு புகல்வதவர் குற்றமே—வண்டுமலர்ச்
சேக்கை விரும்புஞ் செழும்பொழில்வாய் வேம்பன்றே
காக்கை விரும்புங் கனி. 5

கம்மா றுகவாமல் கற்றறிந்தோர் மெய்வருந்தித்
ம்மால் இயலுதவி தாம்செய்வர்—அம்மா!

முளைக்கும் எயிறு முதிர்சுவைநா விற்கு
விளைக்கும் வலியனதாழ் மென்று.

முனிவினும் நல்குவர் மூதறிஞர் உள்ளக்
கனிவினும் நல்கார் கயவர்—நனிவிளைவில்
காயினும் ஆகும் கதலிதான் எட்டிபழுத்
தாயினும் ஆமோ அறை.

கற்ற அறிவினரைக் காமுறுவர் மேன்மக்கள்
மற்றையர் தாம்என்றும் மதியாரே—வெற்றிநெடு
வேல்வேண்டும் வாள்விழியாய் வேண்டா புளிங்காட
பால்வேண்டும் வாழைப் பழம்.

நல்லார் செயுங்கேண்மை நாடோறும் நன்றாகும்
அல்லார் செயுங்கேண்மை ஆகாதே—நல்லாய்கேள்
காய்முற்றின் தின்தீங் கனியாம் இளந்தளிர்நாள்
போய்முற்றின் என்னாகிப் போம்.

பொன்னணியும் வேந்தர் புனையாப் பெருங்கல்வி
மன்னும் அறிஞரைத்தாம் மற்றெவ்வார்—மின்னுட
பூணும் பிறவுறுப்புப் பொன்னே அதுபுனையாக்
காணுங்கண் ஒக்குமோ காண்.

| | | |
|---|---|---|
| பொலி | பொழில் | கதலி |
| பூங்கை | கைம்மாறு | எட்டி |
| தீர்வு | உகவாமல் | அறைதல் |
| உள்ளுதல் | மெய் | காமுறுதல் |
| விழுமியோர் | இயலுதல் | புளிங்காடி |
| பைந்தொடி | எயிறு | கேண்மை |
| அரம்பை | முனிவினும் | புனைதல் |
| மீக்கொள் | நல்குதல் | அணி |
| சேக்கை | உள்ளம் | பூணுதல் |